# பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தரப் பத்திரிகை

நான் ஒரு மானுடன்: நான் மதியாதன
மானுட வாழ்வில் இலை.

மலர்-1 பங்குனி—1925 காசு-12

## இந்தப் பத்திரிகை

### சந்தாதாரருக்கு அறிக்கை.

(1053-1056-ம் பக்கங்களைப் பார்க்க)

தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்த சந்தா நேயர்களுக்கு என் வந்தனங்கள் உரியன. உலகம் பலவித மாதலின் பதில்களும் பல திறப்பட்டுக் காணுவ; ஆயினும், சில கடிதங்களின் ஆர்வமும் அபிமானமுமே, இயங்கிச் சோரும் உள்ளத்தை ஊக்கி உற்சாகப் படுத்தி, பத்திரிகையை மேல்நடத்தத் தூண்டுகின்றன.

பதில்களை யெல்லாம் ஆராய்ந்து பார்த்ததில், பத்திரிகையின் (1) சந்தாவை இரண்டொரு ரூ-வுக்குக் குறைத்து விடவேண்டு மென்று மூவரும்; குறைப்பதால் சந்தாதார் அதிகரிப்ப ரென்ற உறுதி யிருந்தால் மாத்திரம் சிறிது குறைக்கலா மென்றும், குறைக்கவே வேண்டா மென்றும் 22 பேரும்; (3) கதைகளைப் பெருக்கி விஷயத்தை இலேசாக்கலா மென்று அறுவரும், இது தவறென்று 19 பேரும் கூறி யிருக்கின்றனர். இதனால், பத்திரிகையின் சந்தாவும் விஷயங்களும் இப்பொழுது போலிருப்பதே பலர் விருப்பம் என்பது தெளிவு; ஆயினும், சிலர் அபிப்பிராயங்களையுந் தழுவி, அடுத்தமாதம் (1925-ஏப்ரில், குரோதன-சித்திரை), அதாவது, பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு முதல், பத்திரிகையின்,

(1) அளவை ராயல் ஸைஸாகப் பெரிதாக்கி;

(2) சந்தாவை ரூ. 4-8-0 க்குக் குறைப்பதுமன்றி ;

(3) பத்திரிகையே இனும் என்னும்படி, புஸ்தகங்களின் விலையில் தள்ளுபடியினால், அத்தனையையும் வாங்கும் முழு வருஷச் சந்தாதார்கள் ரூ. நாலரையையும் ; சில புஸ்தகங்களை மாத்திரம் வாங்குவோர் அந்த மட்டுக்கும், இலாபம் பெறும்படி செய்யத் தீர்மானித்திருக்கிறேன். இந்த விவரங்களை 1055-1056-ம் பக்கங்களில் காணலாம்.

பெரும்பாலும் இப்பொழுது போலவே பத்திரிகை நடத்தப்படுமாயினும், பதிலெழுதிய சிலர் யுக்திகளைத் தழுவி, இன்னும் மேலாக நற்பயனளித்து ருஜிக்குமாறு அதைச் சிறப்பிக்க முயலுவேன் ; இந்த முயற்சியில், அறிவாளர் அபிமானிகளின் கைம்மாறு கருதாப் பேருதவியே எனக்கு ஊன்றுகோலாம்.

---

## பஞ்சாமிர்தம் பத்திரிகையின் சந்தா விவரம்

| | ஒரு வருஷம் | 6 மாதம் | 3 மாதம் | தனிப்பிரதி |
|---|---|---|---|---|
| உள்நாடு - | 4-8-0; | 2-6-0; | 1-4-0; | 0-8-0 |
| வெளிநாடு - | 5-0-0; | 2-10-0; | 1-8-0; | 0-9-0 |
| பள்ளிக்கூடம்-கலாசாலைகளுக்கு - | 4-0-0; | 2-6-0; | 1-4-0; | 0-7-0 |

குறிப்பு – தபாற்கூலி - வேறு ; மாதிரிப் பிரதி - 6 அணா.

## விளம்பர விகிதம்.

| | ஒரு வருஷம்; | 6 மாதம்; | 3 மாதம்; | ஒரு மாதம் |
|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | -100-0-0; | 52-0-0; | 28-0-0; | 10-0-0 |
| பாதிப் பக்கம் | -52-0-0; | 28-0-0; | 18-0-0; | 5-8-0 |
| கால் பக்கம் | -30-0-0; | 17-0-0; | 10-0-0; | 3-0-0 |

குறிப்பு.—முன் பணம் கொடுக்கவேண்டும்; நீடித்த குத்தகை விகிதங்களையும், விசேஷ விகிதங்களையும், எழுதியறிக; அசங்கியமான விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

மானேஜர், பஞ்சாமிர்தம் ஆபீஸ்,
மயிலாப்பூர், சென்னை.

## அறிக்கை.

அடுத்த வருஷம் சந்தாப் பணத்தை 25-4-1915 க்குள் மணியார்டரில் அனுப்பாத, அல்லது, வேறு விவரம் எழுதாத, சந்தாதாரர்களுக்கு, அடுத்த சஞ்சிகை (II-1) வி. பி. கமிஷன் சேர்த்து ரூ. 4-10-0 க்கு, வி.பி. போஸ்டில் அனுப்பப்படும். உடனே பணத்தை மணியார்டரில் அனுப்பி விடுதலே உத்தமம்; இரண்டணா இலாபமுமாகும். வி. பி. போஸ்டில்லாத வெளி நாட்டார், முன்பணமே அனுப்பவேண்டுகிறேன்.

அ. மாதவையர்.

# சென்னை ஹிந்து தேவஸ்தான பரிபாலனச் சட்டம்

## பத்திராதிபர்.

இந்தச் சட்டத்தை எதிர்த்துப் பலரும், அனைத்துப் பலரும், நாடெங்கும் பேச்சு முழக்கம் செய்கின்றனர். நமது தேவஸ்தானங்களும் மடங்களும், ஆதி ஸ்தாபகர்களின் உத்தேசப்படியேனும், இக்காலத்தில் இவை இவ் வண்ணந்தான் நடைபெற வேண்டுமென்று அறிவாளர்களும் தேச பக்தர்களும் விரும்புகிறபடியேனும், பெரும்பாலும் வாஸ்தவத்தில் பரிபாலிக்கப்படவில்லை என்பதை, இருகட்சியாரும் ஒப்புக் கொள்கின்றனர்.

இந்தப் பரிதாபகரமான நிலைமையைச் சீர்திருத்தி ஒழுங்கு படுத்துவது அத்தியாவசியமென்றும், யாவரும் கருதுகின்றனர். ஆனால், இச் சீர்திருத்தம் எவரால் எவ்வண்ணம் செய்யப்படவேண்டும் என்பதில்தான் அபிப்பிராய பேதங்கள் காணப்படுகின்றன. இந்தச் சட்டத்தை எதிர்ப்போர் கூறும் முக்கிய காரணங்களாவன:—

(1) சட்டத்திலுள்ள குற்றங் குறைகள்.

(2) சட்டத்தை ஏற்படுத்தினவர், ஹிந்துக்கள் மாத்திரமில்லை, பல மதத்தினருங் கூடிய சட்ட சபை என்பது.

(3) சட்ட நிபந்தனைகளை நிறைவேற்றப் போகும் முக்கிய காரியஸ்தர் வைதிகப்பற்றுள்ள, சரியான, ஹிந்துவில்லை என்பது.

(4) இந்தச் சட்டத்தினால் கிடைக்கும் செல்வாக்கை, அரசியலின் ஒரு கட்சியினர் அநியாயமாக உபயோகப்படுத்தித் தம் கட்சியைப் பலப்படுத்திக் கொள்வர் என்பது.

முதலாவது முகாந்தரம்—நான் வக்கீல் இல்லை; நியாய சாஸ்திரம் பயின்றவனில்லை; ஆயினும், எனக்கே இச் சட்டத்தில் சில குற்றங் குறைகள் தென்படுகின்றன. ஆனால், மனுஷப் பிரயத்தனத்தால் நிறைவேறும் மனுஷ காரியம் எதுவுமே குற்றங்குறைகளின்றி நிறை சிறப்பு வாய்ந்திராது; ஆயினும், குற்றங் குறைகளுள்ள காரியங்களையெல்லாம் உடனே நிறுத்தி விடுதல், நாகரிக சாதகமுமன்று, சாத்தியமுமன்று. இச்சட்டத்தை நிறைவேற்றினவர்களை இதிற் பழுதில்லையென்று கூறவில்லை யாதலால், பொது நன்மையை நாடும் இவ் விஷயத்திலே, இருகட்சியாருமே ஒன்று சேர்ந்து சமரசப்பட்டு, குற்றங்குறைகளை ஏன்ற மட்டும் நீக்கி நிரப்பி, சீர் குலைந்து சிரிப்புக் கிடமாய்க் கிடக்கும் பல மடாலயங்களையும் ஒழுங்கு படுத்துவதே உத்தமமாம்.

இரண்டாவது முகாந்தரம்—நமது சட்ட சபையிலே ஹிந்துக்களோடு முஸ்லீம்கள் கிறிஸ்தவர் முதலிய பிற மதத்தினரும் வீற்றிருப்பது மெய்யே. பல மதங்கள் பரவியுள்ள நாட்டிலே பல மதஸ்தர்கள் சட்ட சபையிலிருத்தல் இயல்பேயாம். அதனால், அந்தச் சபை நமது மத விஷயங்களில் தலையிடவே கூடாதென்போர் (1) மத விஷயங்களில் அரசாங்கத்தார் தலையிடும் அவசியமே யின்றித் தமது மத விஷயங்களை ஒழுங்காய் நடத்தி வரவேண்டும்; அல்லது (2) மத விஷயங்களை ஒழுங்கு படுத்துவதற்கென்றே, வெவ்வேறு மதச்சட்ட சபைகளை ஸ்தாபிக்க வேண்டும். முதற் கூறிய வண்ணம் நமது மடாலயங்கள் பரிபாலிக்கப் படாமையினால்தான் அரசாங்கத்தார் தலையிட நேர்ந்தது. இது, ஹிந்துக்களின் குற்றமே யன்றி, அரசாங்கத்தார் குற்றமாகாது. இரண்டாவது முறைப்படி

செய்ய, நம் நாட்டிலே மதச் சட்டசபைகள் தனியாயில்லை. அன்றியும், ஒரு மதத்தைச் சார்ந்த ஸ்தாபன விஷயங்களிலே, அம் மதத்தினர்க்குள் அபிப்பிராய பேதங்களும் மாறுபட்ட கொள்கைகளும் கோபதாபங்களும் பாரபக்ஷவாதமும் துரபிமானங்களும் இருப்பது இயல்பாம்; குறிப்பிட்ட மதத்தினரல்லாத புறசமயிகளோ, நடுவு நிலைமையைக் குலைக்கும் இப்படிப்பட்ட விருப்பு வெறுப்புக்களில்லாதவராய், விவாதவிஷயத்தைச் சமரசபுத்தியோடும் நியாய உணர்ச்சியோடும் ஆலோசித்துத் தீர்மானிக்க வல்லவரா யிருப்பர்; இதுவுமன்றி, பிறர் மத விஷயத்திலே தாம் தவறிழைத்தால், தம மதத்துக்கும் அதே கதி நேரக்கூடு மென்ற அச்சத்தோடும் ஒழுகுவர். இதனால், புறசமயிகள் சட்ட சபையிலிருந்து இவ் விஷயத்தைத் தீர்மானித்தது, ஒரு வழியில் நல்லதென்றே கூறலாகும். இக் காரணங்கள் தவிர, குடியாட்சியும் பொது ஜன அபிப்பிராயமுமே நாளுக்கு நாள் வளர்ந்தேற, பழைய அரசியல் முறைகளும் 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்னும் நியாயமும் குன்றிக்குறுகி மறைந்துவிட வேண்டு மென்று அறிவாளர் எதிர்பார்த் துழைத்து வரும் இந் நாளிலே, சட்ட சபையிலே பல திறப்பட்டார் இருக்கின்றதைப் பழித்தல் ஒரு சிறிதும் பொருந்தாது. பலர் அபிப்பிராயப்படி சிலர் அடங்கி நடத்தலே, இக் காலத்து அரசியல் முறைகளின் பண்பும் பயனுமாகும்.

மூன்றாவது முகாந்தரம்—இது கொஞ்சம் சிக்கலானது; ஆயினும், என் மனத்திலே களங்கமில்லாமையால், நான் ஒருவாறு துணிந்து, சில கூறுகிறேன், அரசாங்கத்தார் இந்தச் சட்டப்படி, திவான் பகதூர் ஸர் தி. சதாசிவையரை முதல் ப்ரெஸிடண்டாக நியமித்திருக்கின்றனர். நமக்குள், 'வைதிக மார்க்கத்தினர்' என்று தமக்குத்தாமே பெயர் சூட்டிக்கொண்டு திகழும் சில வைதிகப்பற்றினர் வகுப்பை இவர் சேர்ந்தவ ரில்லை என்பதை எவரும் மறுக்கார். ஆங்கிலத்திலே; "என் ஐதிகமே வைதிகம்; மற்றவை யெல்லாம் அவைதிகம்" என்று, ஒரு வசனமுண்டு; நமக்குள்ளும் நாடோடி ஆசார அநுஷ்டானங்களில் அப்படிப்பட்ட அபிப்பிராயமே நடை பெறுகின்றது. பரமவைதிகர்களுமே, தாம் செய்வதே வைதிகமானதெனச் சாதிப்பது மாத்திர மன்றி, தமக்குச் சௌகரியமான விஷயங்களில் வைதிகராயும், மற்ற விஷயங்களில் முழு லௌகிகர்களாயும் ஒழுகுகின்றனர். உண்மை யிவ்

வாதிருக்க, ஸ்ரீமான் சதாசிவையர் சரியான ஹிந்து இவர் என்றேனும், ஹைகோர்ட்டு ஜட்ஜாகப் பல வாண்டுகள் புகழுற்றிலங்கின அவர், இந்த விஷயத்தில் மாத்திரம், தன் சொந்த அபிமானங்கள் காரணமாக, நியாயந் தவறி நடந்து விடுவரென்றேனும், எவரே துணிந்து கூறலாகும்? மற்றொன்றும் கவனிக்கற்குரியது: சட்டத்தின் நோக்கமே மடாலயங்களைச் சீர்திருத்துவதாயிருக்க, ஓர் ஆஷாடபூதிப் பண்டாரத்தையேனும், பின்னோக்கான கொள்கைகளுடைய பிறரையேனும், தலைவராக நியமித்தல் பொருந்தாதன்றோ. உலக சரித்திரத்திலே, விஷயம் யாதாயினுமே, சீர்திருத்தம் பெற வேண்டியவராயிருப்பவர்கள், தம் திருத்தத்தையே எதிர்ப்பதுதான் இயல்பு; அவ்வாறின்றித் தம் குறை குற்றங்களைத் தாமே நன்கறிந்திருப்பின், தாமே தம்மைத் திருத்திக் கொண்டிருப்பரன்றோ? இந்த நியாயத்தினால், பெண்களின் முன்னேற்றத்துக்கும் கல்விப் பயிற்சிக்கும் பெண்களே முதல் தடைகளாகின்றனர்; தீண்டாமையை விலக்கும் முயற்சிகளைத் தீண்டாச் சாதியர் பலர் தடுக்கின்றனர்; பாலிய விதவா விவாகங்களை விதவைகளே வெறுக்கின்றனர்; மடாலயத் திருத்தத்தை மடாதிபதிகளும் தர்மகர்த்தர்களும் மறுக்கின்றனர். "மடியில் கனமிருப்பவர்க்கே வழியில் பயமுண்டு." தமது பராமரிப்பிலுள்ள பொதுச் சொத்துக்களை நியாயமாய்ப் பாதுகாத்து, ஒழுங்காய் நடந்து வருகின்றவர்கள், இவ்விதச் சட்டத்தையும் தலைவரையும் உகந்தேற்காமல், என் அஞ்ச வேண்டும்?

நான்காவது முகாந்தரம்—இந்தச் சட்டம் 'ஜஸ்டிஸ்' கட்சியினரால் நிறைவேற்றப்பட்டது; இக் கட்சியார் இதுகாறும் நடந்து வந்திருக்கும் தோரணையைப் பார்த்தால், இந்தப் பயம் வீணென்று தோன்றாது. இந்தச் சட்டத்தை துஷ் பிரயோஜனப்படுத்தும் கட்சி, க்ஷேம லாபங்களை அதிகமாயடையக்கூடுமென்பதும் மெய்யே. ஆனால், ஸ்ரீ சதாசிவையரை முதல் தலைவராக இக் கட்சியார் நியமனஞ் செய்ததே, இப் பயத்தை நீக்கும் ஏதுவாகும்; அன்றியும், அரசியல் விஷயங்களிலே, மனித சுபாவத்திற்குப் பொருந்த, அதிகாரம் வகிப்போர் தம்மாலியன்ற மட்டும் தம் கட்சியைப் பலப்படுத்திக்கொள்ள முயலுதல், இயல்பேயன்றோ? வேறெந்தக் கட்சி அதிகாரத்தை வகித்தாலும், அவ் வண்ணமே செய்ய முயன்றிருக்கும். இந்த நியாயத்தை மறக்கலாகாது.



தக்ஷிண கோயிற் காட்சி.

சீன தேசத்திலே, தேவசங்களின் சீர்திருத்தத்தினால் நாடெங்கும் அறிவு பெருகி, பெருநன்மை விளைந்திருக்கிற தென்பர். சென்னை மாகாணத்தில் தானே, பச்சையப்ப முதலியார் விட்டுப்போன தரும சொத்துக்களிற் பெரும் பகுதி, அவர் எதிர் பாராத வாறு விநியோகமாகி, மிகப் பெரிய நன்மைகளை விளைத்து வருவதை, நாம் கண் கூடாய்க் காண்கின்றோம். தேவாலயங்களும் மடங்களும் பொது ஜனங்களின் க்ஷேமத்தையும் அபிவிருத்தியையும் கருதி ஸ்தாபிக்கப் பட்டனவே யன்றி வேறில்லை யாதலின், சமயோசிதமாகவும் காரியோசிதமாகவும் ஆலோசனை செய்து, பொது நன்மையைப் பெருக்குதல் தவறாகாது. ஆகலால், இப்பொழுது சட்டத்தை எதிர்த்து மன்றாடும் பெரியோ ரெல்லாம் ஒன்று சேர்ந்து, அதனால் பெறக் கூடிய பெரும்பயன்களையே நாடி உழைத்து, நாட்டுக்கு நன்மை செய்து, அதனால் விளையக்கூடிய தீங்குகளை மாத்திரம் விலக்க முயலுவாராயின், அதுவே சிறந்த தொண்டாகும். இது வன்றி, நம் நாட்டிலே ஹிந்து வென்னும் ஒவ்வொருவன் அபிப்பிராயத்தையும் முதலில் அறிந்து கணக்கிட்ட பின்பே, நமக்குப் பூரண சுயராஜ்யம் கிடைத்த பின்பே, நமது மடாலயங்களைச் சீர்திருத்த முயல வேண்டு மென்று கூறுதல், பொருந்தாது.

## தோழியைத் துயிலெழுப்புதல்

நேடி வெண்பா.

பொழுது விடிந்தது: பொங்கிருள் போகத்
தொழுகதிர்ச் சூரியன் கீழ்த்திசை தோன்றி,
எழுது ஒளிக் கோலால் உலகுடோன் ஏற்றினன்;
பூக்கள் அலர்ந்தன பொய்கையில்; புள்ளெலாம்
காக்கள் ஒலிதரக் களிப்ப; தொழுக்களில்
மாக்கள் எழுந்தன; மனிதர் மயல் நீத்(து)
இறைவனை ஏத்துவர்: என்னே, ஒரு நீ
நிறைதுயில் நீள்குவை இன்னுமே, நேரிழாய்!
தறைதனில் கும்ப கருணித் தனிப் பெயர்
கொள்ளும் குறிப்பிதோ? கள்ளுண்டனை கொலோ?
பள்ளி எழுந்து பகர். —அமுதகவி.

# முகம்மது நபி சரிதம்

ரேவ். F. கிங்ஸ் பேரி, B.A., சென்னை



உலகத்திலே தற்காலத்துள்ள முஸ்லீமர் தொகை இருபத்திரண்டு கோடி என்பர். இவர்களுள் நமது தேசத்தில் உள்ளவர் ஏழு கோடியர். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை நாடும் ஒவ்வொரு ஹிந்துவும் தன் சகோதரரான முஸ்லீமர் அனுசரிக்கும் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பை அறிந்து, அதைத் தக்க வண்ணம் மதிப்பது அவசியம். அதற்கு இன்றியமையாதது இஸ்லாம் மதஸ்தாபனஞ் செய்த முகம்மது நபியின் வரலாற்றை நன்காராய்வதாம். அன்றியும், உலகத்திலெழுந்த மகான்களுக்குள்ளே முகம்மது நபியும் ஒருவர் என்பதற்கு ஐயம் சிறிதுமே யின்றாதலின், கல்வியும் அறிவும் உடைய எவரும் இம் மகானது சரித்திரம் அறிந்திருத்தல் அத்தியாவசியமாகும்.

அரபி நாட்டிலே, மேக்கைப்பதியிலே, கோரேஷர் குடியிலே, கிறிஸ்தப்தம், முன்பின் 570-ம் ஆண்டிலே, முகம்மது பிறந்தார். அவரது குழந்தைப் பருவத்திலே தாய் தந்தையர் இருவரும் இறந்து போகவே, அநாதப் பிள்ளையான அவரை அவரது சுற்றத்தார் அன்போடு வளர்த்து வந்தனர். இவர்களோ செல்வப் பொருளில்லாத வறியவர். ஆகவே, சிறுவராயிருக்கும் பொழுதே முகம்மது ஆடு மேய்ப்பது அவசியமாயிற்று. இப்படி ஆடு மேய்த்து வந்தபோது பல விஷயங்களை எண்ணவும் தீர்க்காலோசனை செய்யவும் வேண்டிய சமயம் இருந்தது. இப்படிப்பட்ட காலத்தை வீணே போக்காமல், பல விஷயங்களைக் குறித்து ஆழ்ந்து யோசித்து வந்தார்.

வாலிபப் பருவம் அடுக்கவே பெருஞ் செல்வியாகிய விதவை யொருத்திக்குக் கணக்குப் பிள்ளையாய் அமர்ந்தார். இவ் விதவை பெயர் கடிசை யம்மையார். இவரிட்ட வேலையின் பொருட்டு, இரண்டு மூன்று முறை பலஸ்தினே சிரி என்னும் நாடுகளுக்குச் சென்று வியாபாரஞ் செய்து வந்தார் முகம்மது. இப் பயணங்களிலே, யூதர் பலரையும், பல கிறைஸ்தவர்களேயும் சந்தித்து, அவர்கள் மதக் கோட்பாடுகளிற் சிலவற்றையும் இவர் அறிந்தார் போலும்.

முகம்மதுக்கு வயது இருபத்தைந்தானபோது, இதுவரையினும் தமக்கு எஜமானனியாயிருந்த கடிசை யம்மையாரை விவாகஞ் செய்தார். மனேவியார் கணவனுரினும் பதினேந்து வயதுக்கு மூத்தவர். இவர்கள் இருவரும், ஈருடல் ஒருயிர் போலப் பல்லாண்டு மகிழ்வுடன் வாழ்ந்து பல பிள்ளைகளும் பெற்ருர்கள். முகம்மது உயரத்தில் மிகவளவினர். சிவந்த நிறத்தினர். குளிர்ந்த முகத்தினர். யாவரோடும் இன்சொற் பேசுபவர். அவருடைய பாவனேயும் ஒழுக்கமும் எவரையும் வசியம் பண்ணும் வல்லமை யுடையன. அறிவில் திறமை மிகுந்தவர் என்று சொல்ல வேண்டியதில்லை. அதனலன்ருே தம் எஜமானனி தமக்கு மனேவியாக வாய்த்தது? விவாகஞ் செய்து சில வருஷங்கள் கழிய, பின் மத விஷயத்திலே முகம்மது மனஞ் சென்றது. அக் காலத்திலே அரபியர் பற்பல தெய்வங்களே வணங்கி வந்தனர். தமிழகத்திலே முன்னளிலே குறிஞ்சிக்கு முருகனும், பாலேக்குக் காளியும், முல்லேக்கு மாலும், மருதத்துக்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும் திணேத் தெய்வங்கள் என்று எண்ணப்பட்டதுபோல, அரபியரும் இவ் விடத்துக்கு அதி தேவதை இது என்றும், இக் குலத்துக்கு அதி தேவதை இது என்றும் சொல்லி, ஒவ்வொரு கிராமத்தில் ஒவ்வொரு தேவதையாகப் பல நூறு தெய்வங்களே வணங்கி வந்தனர். இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக அல்லா (=கடவுள்) என ஒத்துக்கொள்ளினும், அவரைப்பற்றி ஒரு கதையும் இல்லே. அவரை நினேப்பாரும் இல்லே.

முகம்மது ஹேனிவர் (Hanifs) எனப்பட்ட ஒரு வகைப் பக்தி மார்க்கத்தாரிற் சிலரோடு பழகி யிருந்தார். இவர்கள் சில்லறைத் தெய்வங்களே வணங்கினவர்களல்ல. உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கும் மெய்க்கடவு

ளாகிய அல்லா ஒருவரையே வழிபட்டு வந்தவர்கள். மற்றைய அரபியர் தங்கள் தங்கள் தெய்வங்களை மரங்களிலும் கற்களிலும் வணங்கி வந்தார்கள். மரங்களையும் கற்களையும் தெய்வங்கள் என்று மதியாவிட்டாலும், இத்தெய்வங்கள் மரங்களிலும் கற்களிலும் சாந்நித்தியமாயிருந்து தங்கள் தொண்டர்களுடைய வழிபாடுகளை ஏற்றுக்கொள்வார்கள் என்பது அவர்கள் கொள்கை. ஹேனிவர்கள் அல்லாவுக்கு மானசபூஜை யொழிய வேறொருவகைப் பூஜையும் உதவாது என்னும் கொள்கையர். கடவுள் அறவாழி (=தரும சமுத்திரம்) என்றும் அவரிடத்தில் மறமே யில்லை யென்றும் நம்பினார்கள். இம்மட்டோ? கடவுள் அன்புமய மென்றும் கொண்டார்கள். ஹேனிவர் யூத சமயத்தையும் கிறைஸ்தவ சமயத்தையும் ஒருவாறு அறிந்திருந்தார்கள். ஆயினும் யெகோவா எங்களுக்கே தெய்வம் என்றும், நாங்கள் மட்டுமே யெகோவாவின் ஜனம் என்றும் எண்ணின யூதர் பலரைப்போல அவர்கள் நினையாமல், அல்லா எல்லாருக்கும் உரியவர் என்றும், அவரிடத்தில் எவ்வளவேனும் பக்ஷபாதமில்லை யென்றும் நம்பினார்கள். கிறைஸ்தவர்கள் பலர் போதிப்பதுபோல, அநாதி நித்தியராகிய கடவுளுக்கு அநாதி நித்தியராகிய கூட்டாளியாகக் குமாரன் ஒருவர் உண்டென்பதை அவர்கள் ஒப்புக்கொள்ள வில்லை. கடவுளுடைய சித்தத்துக்கு மனப்பூர்வமாக முழுதும் அமைவதே இஸ்லாம் என்றும், அப்படி அமைந்து நடப்பவர்கள் யாரோ, அவர்கள் யூதராயினும், கிறைஸ்தவராயினும் வேறு யாராயினும் ஆகுக அவர்களே முஸ்லீமர் என்றும் போதித்தார்கள். உலகத்தின் முடிவிலே மனிதர் எல்லாரும் அவரவர் புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி கடவுளாலே நியாயந் தீர்க்கப்படுவார்கள் எனக் கிறைஸ்தவர்கள் நம்புவதுபோல இவர்களும் நம்பினார்கள். இவர்கள் அடிக்கடி தனித்தனியே சென்று தியானத்திலும் பிரார்த்தனையிலும் காலங் கழித்தார்கள். மறத்தை வெறுத்து, ஆடம்பரங்களை ஒழித்து, அறத்தை நாடி வாழ்ந்து வந்தார்கள். இவர்களுடைய கொள்கைகளும் அநுஷ்டானங்களும் முகம்மதுவுக்குத் திருப்திகரமாகத் தோன்றின.

'ஆகவே முகம்மதுவும் சில வேளைகளிலே தனியிடங்களுக்குச் சென்று தியானஞ்செய்து வந்தார். தம்முடைய சித்தத்தைக் கடவுள் சித்தத்துக்கு அமைய நடத்தி வந்தபடியால், அவர் அநுஷ்டித்தது இஸ்லாமே. இவர் முஸ்லீமே. இவ்வாறு சில வருஷங்கள் கழிந்தன.

இவருக்கு வயது நாற்பது ஆயிற்று. அப்போது ஓரிரவில் ஹீரை மலைமீது இவர் உறங்குகையில் கனவிலே கடவுளுடைய கணநாதர்களிலொருவர் தம் கையிலே புஸ்தகச் சுருளொன்றோடு தோன்றி "முகம்மதுவே, நீ இதனை வாசி" என்றார்.

"ஐயா, யான் எழுத வாசிக்கக் கற்றிலனே" என விடை பகர்ந்தார் முகம்மது. "நீ இதனை வாசிக்கவே வேண்டும்" என்று கணநாதர் வற்புறுத்தியதால், அச் சுருளை வாங்கி வாசிக்க ஆரம்பித்தார். "கடவுளின்றிக் காலங் கழிக்கலாம் என்று எண்ணுகின்றார் மனிதர். தாம் கடவுளிடத்துக்கே கடைசியாய் வந்து சேரவேண்டும் என்பதை அறியாத பேதைகள்" என்று எழுதியிருந்தது. உடனே கண் விழித்தெழுந்து, முகம்மது அச்சமும் ஆச்சரியமும் ஐயமும் கொண்டவராய், "இஃதென்னை? இஃதென்னை??" என எண்ணினார். "என் கனவிலே வந்தவர் யாவர்? கடவுள் அனுப்பிய தூதரோ? அல்லது, என்னை அணுப்பவந்ததோர் பேயோ? அறிவதெவ்வாறு?" என்று கவன்றார். ஆனால், இப்படிப்பட்ட காட்சியொன்றும் பின் இரண்டு வருஷம் வரையிலும் வந்திலது. அதன்பின் இக் காட்சிகள் அடிக்கடி வந்தன. அவைகளைத் தடுக்க அவரால் முடியவில்லை. கடைசியாய், இவைகள் எல்லாம் கடவுள் அருளால் நிகழ்கின்றன என்றும், தம்மைக் குருமூர்த்தி யாகும்படி கடவுளே கட்டளையிடுகின்றன ரென்றும் முகம்மதுவுக்குத் துணிபு பிறந்தது. தம் மனச்சாட்சியின் சத்தத்துக்குக் கீழ்ப்படியாமலிருப்பது அசாத்தியம் என்று கண்டு, அரபியருக்குப் போதிக்கும்படி ஆரம்பித்தனர். நாம் முன்னரே கண்டபடி சருவலோகங்களையும் படைத்துக் காத்து அளிக்கும் கடவுள் ஒருவரே என்றும், அவரைப் பூசிப்பது மானத பூசையினாலே என்றும், அவருடைய சித்தத்துக்கு மனிதன் தன் சித்தத்தை அடக்குவதே இஸ்லாம் என்றும், இப்படி அடக்கி நடப்பவன் எவனும் முஸ்லீம் என்றும், முஸ்லீமர் எவரும் சகோதர ரென்றும், தாம் பல வருஷங்களாய் நம்பி அனுஷ்டித்த போதனைகளையே போதித்தார். விக்கிரக வணக்கத்தை முற்றும் கண்டித்தார். கடவுளுக்குக் கூட்டாளியாக இயேசு கிறிஸ்துவைக் கிறைஸ்தவர்கள் நினைப்பதையும், அவர்கள் இயேசுவுக்குத் தேவவணக்கம் செலுத்துவதையும், தப்பிதம் என்று போதித்தார். கடவுள் உலகத்துக்கனுப்பின குரு பரம்பரையில் மூசா

(மோசே), தவூத் (தாவீது), ஈசா (இயேசு) என்பவர்களே விசேஷித்தவர்கள் என்றும், கடைசியாய்த் தம்மையே குரு சிரோமணியாய் அனுப்பினர் என்றும், தாம் நம்பின படியே உபதேசித்தார். மூசாவின் மூலம் ஸ்மிருதியையும் தவூத்தின் மூலம் கீதையையும், ஈசாவின் மூலம் இஞ்சில் (சுசமாசாரம்) எனும் போதனையும் கொடுத்த கடவுளே, இப்பொழுது தமது மூலம் குரான் என்னும் திருநூலையும் தந்தருளினர் என்று கற்பித்தார்.

ஈசாநபி போதித்த இஞ்சிலைக் கிறைஸ்தவர்கள், காலக் கொடுமையினாலே, தங்கள் மனம் போனபடி மாற்றிவிட்டார்கள் என்பது முகம்மது நபியின் துணிபு. மனுஷர் யாவரும் பாவங்களை அடியோடே களைந்து, ஜபதபங்களிலும் தியானத்திலும் காலத்தைக் கழிக்கவேண்டும் என்றும், தானதருமம் செய்வது அவசியமென்றும் படிப்பித்தார்; கடன் கொடுப்பவர், கொடுக்கும் கடனுக்கு வட்டி வாங்கலாகாது என்று படிப்பித்தார்.

அரபியருக்குள்ளே ஒருவன் இருபது, முப்பது ஸ்திரீகளை மனைவிகளாக விவாகஞ் செய்வது சர்வ சாதாரணமாய் இருந்தது. இதனைத் தடுத்து, ஒருவன் ஏககாலத்திலே நாலு மனைவிகளைத் தான் மணக்கலாம் என்றும், அப்படி மணப்பவனும், தம் மனைவிகளைப் பட்சபாதமின்றி நடத்தவேண்டும் என்றும், அவர்களையும் அவர்களிடம் பிறக்கும் பிள்ளைகளையும் ஆதரிக்க வல்லவனே இப்படி இரண்டு, மூன்று. நான்கு மனைவிகளை விவாகஞ்செய்யலாம் என்றும், அவ்வாறு செய்ய முடியாதவர்கள் ஏகபத்தினி விரதங்கொள்வதே கடமையென்றும் போதித்தார் முகம்மது. கடிசை யம்மையார் என்னும் தம் மனைவியார் உயிரோடிருந்த நாளெல்லாம் முகம்மது ஏகபத்தினி விரதராய் வாழ்ந்து வந்தார்.

முகம்மது நபியின் போதனையை மெக்கையி லுள்ளவர்களில் அவருடைய குடும்பத்தாரும் பந்துக்களும் மாபினருமே ஏறறுக்கொண்டார்கள். பலர் இப் போதனைகளை விரோதித்ததுமன்றி, முகம்மது நபிக்குத் தீமை புரியச் சூழ்ச்சி செய்தனர். இதனை அறிந்து முகம்மது, கிறிஸ்தப்தம் 622-ம் வருஷம் மெக்கையைவிட்டு மெதினைக்கு ஒளித்து ஓடினர்.

மெக்கையைவிட்டு முகம்மது நபி மெதினைக்கு ஓடின ஆண்டையே குறியாகக் கொண்டு, அவ்வருஷம் முதலாக,

வருஷங்களைக் கணக்கிட்டு வருகிறார் முஸ்லீமர். முதலிலே அன்பும் சாந்தமும் பொறுமையும் நிறைந்த குருமணியாக உபதேசஞ் செய்து வந்த முகம்மது, தம்மை மற்றவர்கள் விரோதிக்கத் தொடங்கவே, மன வயிரங்கொண்டு வாட்படை கையிலெடுத்து, படை வீரரைச் சேர்த்துத் தம்மைக் காத்துக்கொண்டது மன்றி, தமது போதனைகளை ஏற்றுக்கொள்ளும்படி வலாற்காரஞ்செய்யத் தலைப்பட்டன ரென்றும் பல நூல்கள் பேசுகின்றன. மெக்கையிலே குருத்தொழில்மட்டும் செய்துவந்த முகம்மது மெதினைக்கு வந்தபின், ஒரு கூட்டத்துக்கு அதிபதியாகி, அவர்களை ஆண்டுவந்தனர். இக் கூட்டத்தார் ஏற்றுக்கொண்ட பிரமாணங்கள் ஆவன:—(1) கற்புநெறிக் கடாதனவெல்லாம் விடுதல். (2) சிசுவதை விடுதல். (3) புறங் கூறுதல் விடுதல். (4) தம் பொருளல்லாதனவற்றைத் தொடாதிருத்தல். (5) கடவுளொருவரையே வணங்குதல். (6) கடவுளது திருத்தொண்டராகிய முகம்மது நபியின் வார்த்தைக்கு அடங்கி நடத்தல் என்பனவே.

மெதினையில் இருந்த காலத்தில், முகம்மது நபியின் சிஷர்களுக்குள்ளே முன்னில்லாததோர் ஐக்கியம் உண்டாயிற்று. அஃது எதுவெனின், எம் மரபினராயினும், எக் குடியினராயினும் முஸ்லீமர் எல்லாரும் சகோதரர்கள் என்னும் கொள்கையே. இக் காலத்திலேதான் முஸ்லீம் எவனும் மதுபானம் முதலிய இலாகிரி வஸ்துக்களைத் தொடலாகாது என்று முகம்மது கற்பித்தார். இக் காலத்திலே தான் முஸ்லீமருக்குள்ளே ஸ்திரிகள் முக்காடிட்டு முகச் சீலை தரிக்கவேண்டுமென்ற விதியும் வந்தது.

கி. பி. 628-ம்வரு முகம்மது படையுடனே மெக்கைப் பதிக்கு வந்தார். அப் பட்டினத்தாருடன் உடம்படிக்கை செய்யப்பட்டது. அடுத்த வருஷம் முகம்மது திரும்பவும் வந்து, மெக்கைப் பதியுள்ளாரை வென்று, தமது அதிகாரத்தை அங்கே ஸ்தாபித்தார். அதுமுதல் மெக்கையே இஸ்லாம் நாடுகளுக்கெல்லாம் திருப்பதியாய் நிலைபெற்றது.

கி. பி. 1632வரு ஜூன்மீ 8உ முகம்மது பரமபத மடைந்தார்.

இஸ்லாம் மதத்தின் ஐந்து கோட்பாடுகளாவன:—(1) கடவுள். கடவுள் ஒருவரே. அவரையே வணங்க வேண்டும். (2) பிரார்த்தனை. ஒவ்வொரு நாளும் ஐந்து

வேளை ஒவ்வொரு முஸ்லீமும் மெக்கைப் பதியின் திக்கு நோக்கி, ஜெபித்தல் வேண்டும். (3) தானம். ஒவ்வொரு முஸ்லீமும், பலன் கருதாது, ஏழைகளுக்குத் தானஞ் செய்தல் வேண்டும். (4) உபவாசம். வருஷத்திலே ரமசான் மாதத்திலே பகற் காலத்திலே தண்ணீரும் உட்கொள்ளலாகாது. இரவிலே எதுவும் புசிக்கலாம். (5) யாத்திரை. சிவிய காலத்திலே ஒரு முறையாவது ஒவ்வொரு முஸ்லீமும் மெக்கைப் பதிக்கு யாத்திரை போய் வரல் வேண்டும்.

## முகம்மது நபி செய்த நன்மைகள்.

முகம்மது குரு மூர்த்தியாக எழுந்து கைங்கரியம் செய்ய ஆரம்பிக்கு முன் அரபியர் நிலையையும், இப்பொழுது இஸ்லாமியருடைய நிலைமையும் உள்ளபடி ஆராய்ந்தறியின், முகம்மது நபி கடவுளால் அனுப்பப்பட்ட குரு மூர்த்தி என்பதற்கு அணுவளவேனும் ஐயமிராது. ஐயுறுபவர்கள் எல்லாம் உள்ளபடி காரியங்களை அறியாதவர்களே.

1. அரபியர் பற்பல குடிகளாகப் பிரிந்து, ஒவ்வொரு குடியும் மற்ற எல்லாக் குடிகளுக்கும் விரோதமாய், இரத்த நதி பாய்ந்துவந்த தேசத்திலே, "நாம் எல்லாரும் இஸ்லாம் மதத்தினர், முஸ்லீமர், சகோதரர்" என்ற எண்ணம் வளர்ந்து அன்பும் ஆதரவும் உண்டானது யாரால்? முகம்மது நபியினால்.

2. பல கோடி தெய்வங்களைப் பல கோடி விக்கிரகங்கள் மூலமாகவும், ஆடு, மாடு, ஒட்டகம், குதிரை, மனுஷர் முதலிய பலிகளைச் செலுத்தி வணங்கின பல லக்ஷத்து அரபியர், இன்று, சருவ லோகங்களையும் படைத்து, அளித்து, அழித்து வரும் கடவுள் ஒருவரையே கடவுளென்று சொல்லி, அவரை மானச பூசையினாலே ஆராதித்து வரும்படி செய்தவர் யாவர்? முகம்மது நபி.

3. "யெகோவா எங்களுக்கு மட்டுமே தெய்வம். நாங்கள் யெகோவாவுக்கு மட்டுமே தொண்டர்" என்று "உடன்படிக்கை மதத்தை" யூதர் பலர் ஒரு பக்கத்தில் அநுஷ்டித்துவர, இன்னொரு பக்கத்தில், "கடவுள் ஒருவருண்டு. அவருக்குக் குமாரனொருத்தருண்டு. இக்குமாரன் மூலமாய்த் தான் கடவுளிடம் போகலாம். இக் குமாரன் மனுஷனாகப் பிறந்து, ஆதாமும் ஏவாளும் அவர்கள் சந்ததியாரும் செய்த எல்லாப் பாவங்களுக்காகவும், தம்

முடைய திரு ரத்தத்தையே பிராயச்சித்த பலியாகச் சிந்தினபடியினலே, தேவனுடைய கோபம் ஒருவாறு ஆறினதினலே, அப்பன் சாமி மகன் சாமி முகத்தைப் பார்த்து, அவர் நிமித்தம் உங்கள் பாவங்களை மன்னிப்பார்; உங்களை ஏற்றுக் கொள்ளுவார்'' என்னும் போலிக்கிறிஸ்து மத [மெய்க்கிறிஸ்து மதம், இயேசு போதித்த போதனையே யன்றி வேறன்று] அநுசாரிகளான கிறைஸ்தவர்கள் வேருெரு பக்கத்தில் நிலை தளர்ந்திருக்கையில், "கடவுள் ஒருவரே கடவுள். அவர் (யூதருக்குமட்டுமல்ல) எல்லாருக்கும் கடவுள். அவரிடம் சிபாரிசு பண்ணுவதற்கு மத்தியஸ்தர் வேண்டாம். அவருக்குப் பிராயச்சித்த பலியொன்றும் வேண்டா. அவருக்கு மகன்சாமி என்ருெரு இரண்டாம் நம்பர் சாமி இல்லை. ஈசா நபி, தேவதாசரே யன்றிக் கடவுளல்லர். அவர் அவ்வாறு ஒரு நாளும் போதித்தவரும் அல்லர்.'' என்று வற்புறுத்தின மகான் யாவர்? முகம்மது நபியே. (இதனல், முகம்மது நபி பெரியர், ஈசா நபி சிறியர் என்பது வராது).

4. மதுபானஞ் செய்துவந்த அரபியரை அத் தீமையினின்று உய்வித்தவர் யாவர்? முகம்மது நபியே.

5. இருபது, முப்பது, நாற்பது மனைவியரை விவாகஞ் செய்துவந்த அரபியர், ஏகபத்தினி விரதம் பூணுவதே தக்கதென்றும், அப்படி வாழ இயலாதவர், இரண்டு மூன்று நான்கு மனைவிகளுக்குமேல் விவாகஞ் செய்யலாகாது என்றும் எல்லை குறித்தவர் யாவர்? முகம்மது நபியே. (இவ் விஷயத்தில் முகம்மதுவைக் குறை கூறுர் ஹிந்துக்கள், அவர்களுடைய மதமும் பலதார விவாகஞ் செய்ய இடம் கொடுக்குமாதலால்; இயேசுக் கிறிஸ்துவும் பலதார விவாகத்தை நேரே கண்டித்தவ ரல்லர். ஆயினும் அவருடைய போதனையும் அவருடைய சிந்தையும் மனுஷ சமுதாயத்தில் பரம்பினல், பலதார விவாகத்திற்கு இடமே இராது என்பது மெய்யே.)

6. முகம்மது நபி தாமே பல மனைவியரை விவாகஞ் செய்தது சரி யென்று சொல்லோம். சந்திரனிடத்திலும் களங்கமுண்டு. களங்கமிருப்பினும், சந்திரன் சந்திரனே.

7. முகம்மது நபி வாள்பிடித்துப் படையெடுத்துப் பல்லாயிரவர் மடிய யுத்தஞ் செய்ததும், யுத்தம் செய்ய இடம் கொடுத்ததும் சரி யென்று யாம் சொல்லோம். ஆயினும் இவ் விஷயத்திலே அவரைக் குற்றங் கூறுர்

ஹிந்துக்கள், குரு க்ஷேத்திரத்திலே யுத்தஞ் செய்யும்படி அருச்சுனனை வற்புறுத்தினவன் ஸ்ரீ கிருஷ்ணனாகையால். கடந்த யுத்தத்திலே பல கோடிக் கிறைஸ்தவர்கள் ஒருவரை யொருவர் கொல்ல எழுந்து நின்றார். இவர்களும் முகம்மதுவைக் குறைகூற நாவெழாது நிற்பர்.

8. அடிமை வியாபாரம், வைப்பாட்டி யுடைமை முதலிய தீமைகளை முகம்மது நபி நீக்கினாரில்லை. முகம்மது நபி நீக்காத தீமைகளுக்காக அவரிடம் குற்றம் பாராட்டாமல் அவர் செய்த நன்மைகளை யுணர்ந்து அவரை வியந்து, இப்படிப்பட்ட முனிவரரை யெழுப்பிய கடவுளைத் துதிப்பதே நமது கடமை. முகம்மது நபிக்குச் சமாதானம் உண்டாகுக.

# இலியாவின் கதை

ருஷிய மகான் லியோ டால்ஸ்டாய்

எழுதிய சிறு கதை

ஸ்ரீ. K. விசுவநாதையர், B. A., L. T., சித்தூர்.

வட தேசத்தில் இலியாவென்ற ஒருவன் இருந்தான். அவனுடைய தகப்பனார் அவனுக்குக் கலியாணஞ் செய்வித்து, ஒரு வருஷ காலத்திற்குள் காலஞ் சென்றார். இலியாவினுடைய பிதிரார்ஜித சொத்து மிகவும் குறைவு. அவனுக்கிருந்த ஆஸ்தி யெல்லாம், இரண்டு பசு மாடுகளும், இருபது ஆடுகளுந்தான். ஆனால், அவன் மிகவும் செட்டுடன் குடித்தனஞ் செய்து வந்ததினால், சிறிது சிறிதாகத் தனவந்தனாக ஆரம்பித்தான். விடியற் காலையில் எழுந்திருப்பான். நாள் முழுதும் தன் மனைவியோடு நன்றாக உழைத்துப் பாடுபடுவான். அயலார்களை விட, அதிக நேரஞ்

சென்ற பின்னரே, இரவில் உறங்கப் போவான். ஒவ்வொரு வருஷமும் அவனுடைய ஆஸ்தி அபிவிருத்தி யடைந்தது. இப்படி, முப்பத்தைந்து வருஷ காலங்களாகக் கஷ்டப்பட்டு திரண்ட செல்வத்திற்கு அதிபதியானன்.

இப்பொழுது, அவனுக்கு முன்னூறு குதிரைகள் இருந்தன; நூற்றைம்பது மாடுகளும், இரண்டாயிரம் ஆடுகளும் இருந்தன. அவனுடைய குதிரைகளையும், ஆடு மாடு மந்தைகளையும், பார்த்துக் கொள்ள, அநேக வேலைக்காரர்கள் அவனிடத்தில் வேலை செய்தார்கள். அநேக ஸ்திரீகள் பால் கறந்து, வெண்ணெய், பாலாடைக்கட்டி, குதிரைப் பாலிலிருந்து செய்யும் ஓர் இனிய பானமாகிய 'கூமிஸ்', முதலியன செய்து வந்தார்கள். அவனுக்கு ஒரு விதமான குறைவு மில்லாதிருந்தது. அயலார்கள் ஒவ்வொருவரும், பொறாமை யடையும்படியான அளவு, ஐசுவரிய சம்பத்துக்களை அனுபவித்தான்.

" அவன் மிகுந்த அதிர்ஷ்டவந்தன்; அவனிடத்தில் வேண்டியவைகள் எல்லாம், நிறைந்திருக்கின்றன. அவன், தரித்திரக் கொடுமைக்காக, ஒரு பொழுதும், இறக்கவேண்டிய அவசியமேயில்லை'' என்று பலரும் சொல்வதுண்டு.

உத்தியோகஸ்தர்களும், கனவான்களும், அவனுடைய சிநேகத்திற்கு ஆவல் கொண்டு, அவனிடத்தில், அன்புடனும், மரியாதையுடனும் பழகினர்கள். விருந்தாளிகள், அநேக இடங்களிலிருந்து, அவனைப் பார்க்க வந்தார்கள். அவர்கள் எல்லோரையும், விசுவாசத்துடன் அங்கீகரித்துப் பஞ்சபக்ஷ்ய பரமான்னங்களுடன் உபசரிப்பான். அவன் வீடு நித்திய கலியாணமாகவே தோன்றும்.

இலியாவுக்கு இரண்டு பிள்ளைகளும், ஒரு பெண்ணும் இருந்தார்கள். அவன் அவர்கள் எல்லோருக்கும் கலியாணஞ் செய்து வைத்தான். அவன், ஏழையாகவிருந்த காலத்தில், அவன் குமாரர்கள், அவனோடு வேலைசெய்து, ஆடு மாடு குதிரைகளைப் பார்த்து வந்தார்கள். ஆனல், அவன் இப்பொழுது, செல்வவானுக விருக்கையில், அவர்கள் வழி தவறி நடக்க ஆரம்பித்தார்கள்: ஒருவன் குடிக்கத் தலைப்பட்டான்; மூத்தவன், ஒரு கள்ளாட்டத்தில் வெட்டுண்டு இறந்தான். இளையவனுடைய மனைவியோ பிடிவாதம் பிடித்தவளாக விருந்தாள். மாமனர் வார்த்தைக்கு அடங்காள். இலியா தன் குமாரனுக்குப் பாகம் பிரித்து, ஒரு வீடும், சில ஆடு மாடு மந்தைகளும் கொடுத்து, அவனை இஷ்டம்போல் நடக்க விட்டுவிட்டான்.

சில காலஞ் சென்றபின், கோமாரி முதலான வியாதிகள் தீவிரமாக வந்து, அநேக ஆடு மாடுகள் இறந்தன. அதற்கு அடுத்த வருஷம், கொடிய பஞ்சம் நேர்ந்தது. தானிய சாகுபடியும், வைக்கோல் சாகுபடியும், நஷ்டமாயின. இன்னும் அதிகமான ஆடு மாடுகளும், பனிக் காலத்தில் மாண்டன. மலைப் பிரதேசத்து மாராடர்கள் அவன் குதிரைகளைக் கொள்ளை யடித்தார்கள்.

இங்ஙனம், அவன் செல்வம் சிறிது சிறிதாக க்ஷீணித்தது; மதிப்பும் கௌரவமும் குறைந்தது; அவன் சரீர திடமும் தளர்ந்தது. எழுபதாவது வயதில், தன் அங்கிகள், ரத்தின கம்பளங்கள், குதிரைச் சேணங்கள், வண்டிகள் முதலிய எல்லாவற்றையும் விற்கும்படி நேர்ந்தது. கடைசியில், ஓர் ஆடு கூட இல்லாமல் யாவற்றையும் விற்றுய் விட்டது. தரித்திரத்தின் கொடுமைக்கு முழுவதும் ஆளாகிவிட்டான்.

எங்ஙனம், இவ் வறுமை நிலையை அடைந்தோம் என்று அவனால் உணரமுடியா வண்ணம், அவ்வளவு விரைவில், ஒன்றுமில்லா ஏழையானான். தானும், தன் வயது சென்ற மனைவியும், வேறொருவரிடத்தில் கூலி வேலை செய்ய அமருவதைத் தவிர வேறு வழி ஒன்று மில்லாமற் போய்விட்டது. இப்பொழுது அவன் அணிந்திருந்த சொக்காயும் தன்னுடன் நிற்கும் மனைவியுந்தான் ஆஸ்திகளாக இருந்தன. அவன் குமாரன் தூரதேசஞ் சென்றிருந்தான். அவன் பெண்ணும் இறந்துவிட்டாள். அவ்வயோதிகர்களுக்கு அந்திய காலத்தில், உதவிபுரிய ஒருவருமில்லை.

ஆனால், அவர்களுடைய அயலில் வசித்த, மஹமத்ஷா என்பவர் அவர்களைக் கண்டு பரிதாபப்பட்டார். அவர் அதிகப் பணக்காரருமல்ல, ஏழையுமல்ல; அவரோ சுகமாக ஜீவனஞ் செய்தார்; மனிதரும் நல்லவர். இலியாவின் உதாரகுணம் அவர் ஞாபகத்திற்கு இடைவிடாமல் வந்துகொண்டே யிருக்கும்; இலியாவின் வறுமை நிலையைக் கண்டு அவர் மிகத் துக்கித்தார்.

ஒரு நாள், அவர் இலியாவை அழைத்து, "நீங்களும், உங்கள் மனைவியும், என்னுடன் வசியுங்கள், கோடை காலத்தில் உங்களால் இயன்றவளவு, என் திராக்ஷைத் தோட்டத்தில், வேலை செய்யுங்கள். குளிர் காலத்தில் நீங்கள் என் ஆடு மாடுகளைப் பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் மனைவி, குதிரைகளைப் பார்த்துக் கொண்டு, பால் கறந்து, பாலாடைக் கட்டி, "கூமிஸ்" பக்ஷணங்கள் செய்யட்டும். நான் உங்களைப் போஷித்து, உடை

களையும் வாங்கித் தருகிறேன். உங்களுக்கு இன்னும் எவை தேவையோ அவைகளைச் சொல்லும் பக்ஷத்தில், நான் அவைகளையும் உங்களுக்குக் கொடுக்கிறேன்,'' என்றார்.

இலியா அவர் வார்த்தைக் கிணங்கி, அவருக்கு வந்தனமளித்து, அவர் வீட்டில் தன் மனைவியுடன், வேலை செய்து கொண்டு வசித்தார். முதலில் அவர்களுக்கு அது கஷ்டம்போலிருந்தது; ஆனால் கூடிய சீக்கிரத்தில், அப்படி இருக்க வழக்கப்பட்டுத் தங்களால் இயன்ற வரையிலும் உழைக்க ஆரம்பித்தார்கள். மஹமத்ஷா வானவர், அவர்களால் தனக்கு அனுகூலமும், லாபமும் இருக்கிறதை விரைவில் அறிந்து கொண்டார். அவ்விருவயோதிகர்களும், ஒரு காலத்தில் எஜமானர்களாக விருந்ததனால், எல்லா வேலையும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் ஒரு பொழுதும், சோம்பலுடன் உட்காருவதே யில்லை. எப்பொழுதும் தங்களால் இயன்றவளவு உழைத்துக் கொண்டே யிருப்பார்கள். மஹம்மத்ஷா, அவர்கள் உயர்ந்த பதவியிலிருந்து, இவ்வளவு தாழ்ந்த ஸ்திதிக்கு வந்ததைப் பற்றி, அடிக்கடி மனத்தில் நினைத்து, பரிதாபப் படுவார்.

ஒரு நாள், அவர் வீட்டிற்கு, தூர தேசத்திலிருந்து, சில விருந்தாளிகள் வந்தார்கள். அவர்களுடன், மிகக் கனம் பொருந்திய ஒரு "முல்லா" கூட வந்திருந்தார். இலியா, அவர்களுக்காக, உயர்ந்த ஆகார பதார்த்தங்களையும், தின் பண்டங்களையும் சேகரித்து, முதல்தரமான சாப்பாட்டைத் தயார்செய்து வைத்தார். அவர்கள் எல்லோரும் திருப்தியுடன் போஜனஞ் செய்த பின்னர், இரத்தின கம்பளங்களில் உட்கார்ந்துகொண்டு, வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது, இலியா தன் வேலைகளை முடித்துவிட்டு, அந்தப் பக்கத்தில் போய்க்கொண்டிருந்தார். மஹமத்ஷா, தன் விருந்தாளிகளில் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தார். அவர் போவதைக் கண்ணுற்றுத் தன் சிநேகிதரிடத்தில், "அதோ போகிற கிழவரைக் கவனித்தீரா?" என்றார்.

நண்பர், "ஆம்! கவனித்தேன்; அவரைப் பற்றி என்ன?" என்று வினவினார்.

"அவர், ஒரு காலத்தில், இந்தப் பக்கங்களில் இருந்த பணக்காரர்கள் எல்லோரையும் விட மிகுந்த செல்வராக விருந்தார். அவர் பெயர் 'இலியா'. ஒருவேளை நீங்கள் கூட அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம்" என்றார் மஹமத்ஷா.

"அவரைப் பற்றி நான் நன்ருகக் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் இதுவரையிலும் பார்த்ததே யில்லை. ஆனல், அவர் கீர்த்தி தூர தேசங்களில்கூட நன்ருகத் தெரிந்த விஷயமே." என்ருர் நண்பர்.

"இப்பொழுது அவருக்கு ஒன்றுமில்லை. அவர் இங்கே வேலை செய்து பிழைக்கிருர். அவர் கிழவி பெண் குதிரைகளைப் பால் கறக்கிருள்" என்ருர் வீட்டுக்காரர்.

நண்பர், மிகுந்த ஆச்சரியப்பட்டு, "அப்படியா! என்ன பரிதாபம்! செல்வம் சகடக்கால் போலச் சுழன்று, ஒருவரை உயர்த்தி, மற்ருெருவரைத் தாழ்த்தும் என்று, பெரியோர் சொல்லிய மூதுரை, உண்மையாய் விட்டது. அது இருக்கட்டும்; கிழவர் இவ்வளவு தாழ்ந்த ஸ்திதியை அடைந்ததற்காக, மிக நொந்து கொள்ளுகிருரா? இல்லையா?" என்று, விஷயம் தெரிந்து கொள்ள விருப்பினவராய் வினவினர்.

"அது யார் சொல்ல முடியும்? அவர் மிகுந்த அமைதியோடும், பொறுமையோடும் இருக்கிருர். தன் வேலையைச் சரிவரவே சிரத்தையுடன் செய்து வருகிருர்." என்ருர், மஹமத்ஷா.

நண்பர், "அப்படியானல், நான் அவருடன் நேரில் பேசட்டுமா? அவரிடத்திலிருந்து உண்மையைத் தெரிந்துகொள்ளலாமா?" என்று அனுமதி கேட்டார்.

"அதற்கென்ன தடை? அப்படியே செய்யலாம். நானே அவரைக் கூப்பிடுகிறேன்," என்று சொல்லி, "தாதா! இங்கே வாருங்கள்! சிறிது "டீ"யும் "கூமிசம்" பானம் பண்ணுங்கள். உங்கள் கிழவியைக் கூட அழைத்து வாருங்கள்" என்று மஹமத்ஷா இலியாவை அழைத்தார்.

இலியாவும், சந்தோஷத்துடன் தன் மனைவியை அழைத்து வந்து, தன் எஜமானனுக்கும், விருந்தாளிகளுக்கும் வந்தனமளித்து, கடவுளின் நாமத்தை உச்சரித்துக்கொண்டு, கதவண்டை உட்கார்ந்தார். அவர் மனைவியும், திரையின் பின், எஜமானி பக்கத்தில் உட்கார்ந்தாள். இலியாவிடத்தில் ஒரு கோப்பை "கூமிஸ்" கொடுத்தார்கள். அவர் அதை மரியாதையுடன் பெற்றுக் கொண்டு, "கடவுள் எல்லோருக்கும், சௌக்கியத்தை அளிப்பாராக!" என்று பிரார்த்தித்து, சிறிது பானஞ் செய்து, கோப்பையைக் கீழே வைத்தார்.

அப்பொழுது நண்பர், "நல்லது, தாதா, முன் இருந்த ஐசுவரியத்தை நினைக்க உங்களுக்கு வருத்தமாக இருக்கவில்லையா?

முன்னம் நீங்கள் எல்லா வைபவங்களையும் அனுபவித்தீர்கள். இப்பொழுதோ, துக்கமாக ஜீவிக்கிறீர்கள். நீங்கள் வருத்தப்பட்டுக் கொண்டு தானே இருக்கிறீர்கள்?'' என்று வினயமாய்க் கேட்டார்.

இலியா, புன் சிரிப்புச் சிரித்து, "என் சுகத்தையும், கஷ்டத்தையும் சொல்லும் பக்ஷத்தில், நீங்கள் நம்பமாட்டீர்கள். அதோ உட்கார்ந்திருக்கிற என் மனைவியைக் கேட்பதே நல்லது. அவளோ ஸ்திரீ ; அவள் மனதில் ஒன்றும் தங்காது. அவளுடைய உள்ளத்தில் இருப்பதெல்லாம் நாவில் வந்துவிடும். உண்மையை, உள்ளபடியே, ஒன்றும் விடாது சொல்லி விடுவள்.' என்றார்.

விருந்தாளி, திரைப்பக்கம் திரும்பி, "பாட்டி ! நீங்கள் முன் அனுபவித்த சுகத்தைப் பற்றியும், இப்பொழுது இருக்கிற துர்திர்ஷ்ட திசையைப் பற்றியும் உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ அதைச் சொல்லுங்கள்.'' என்று வேண்டிக்கொண்டார்.

படுதாவின் பக்கலில் இருந்த வண்ணமாகவே, கிழவி, "எனக்குத் தோன்றுகிறதைச் சொல்லுகிறேன், கேளுங்கள். ஐம்பது வருஷ காலமாக, நானும் கிழவரும், எங்கே சுகம் இருக்கிறதென்று தேடிக்கொண்டே வசித்தோம். இப்பொழுது கையில் ஒன்றுமில்லாததனால், சரீரத்தால் உழைத்துப் பாடுபட்டு வசிக்கிறோம். இப்பொழுதே நாங்கள் உண்மையான ஆனந்தத்தை அனுபவிக்கிறோம். எங்களுக்கு இனி வேறொன்றும் தேவையே யில்லை," என்றாள்.

விருந்தாளிகளுக்கு இதைக் கேட்க மிக ஆச்சரியமாக இருந்தது. எஜமானனும் ஆச்சரியப் பட்டார். அவர் தன் ஆஸனத்திலிருந்து எழுந்து, கிழவியை நேரில் பார்ப்பதற்காகத் திரையை ஒதுக்கினார். அவள், கையைக் கட்டிக்கொண்டு இலியாவைப் பார்த்துப் புன் சிரிப்புச் சிரித்த வண்ணமாக இருந்தாள். இலியாவும் அவளை நோக்கிப் புன்னகை செய்தார். பிறகு அவள், "நான் உங்களோடு வேடிக்கைக்காகப் பேசவில்லை. அரை நூற்றாண்டு ஆனந்தம் என்பது எங்கே யிருக்கிறது என்று தேடித்தேடிப் பார்த்தோம். செல்வம் இருக்கும் வரையிலும் அது காணப்படவேயில்லை. ஆனால், இப்பொழுது எல்லா மிழந்து, உழைக்கிறோம், யாதொன்றிலும் இல்லாத ஆனந்தத்தை இப்பொழுதே கண்டோம்'' என்றாள்.

"ஆனால், எதில்தான் உங்கள் ஆனந்தமிருக்கிறது ?" என்று நண்பர் மீண்டும் வினவினார்.

"நான் விபரமாகச் சொல்லுகிறேன் கேளுங்கள். எங்களுக்குச் செல்வமிருந்தபோது, ஒரு நிமிஷங்கூட மனச் சமாதானமேயில்லை. ஒருவரோடொருவர் நல்ல பேச்சுக்கள் பேசிக்கொள்வதற்காவது, ஆத்மாவைப்பற்றி நினைப்பதற்காவது, அவகாசமே கிடைக்கவில்லை. எப்பொழுதும் ஏதாவது கவலையிருந்துகொண்டே யிருக்கும். முதலில், விருந்தாளிகள் வந்த வண்ணமாகவே யிருப்பார்கள். அவர்கள் எங்களைப்பற்றிக் கெடுதலாக எண்ணிக் கொள்ளாதிருக்கும் பொருட்டு, அவர்களுக்கு எவ்விதம் உபசாரம் செய்வது என்று எப்பொழுதும் யோசனைதான். விருந்தாளிகள் சென்ற பிறகோ, வேலைக்காரர்களை, 'உஷார்' பார்த்தால், அவர்கள் தங்களால் இயன்றவளவு தூங்கவும், உணவைப் பெற்றுக்கொள்ளவும், முயலுவர். நாங்களோ, அவர்களை இளைப்பாற விடாது, முழு வேலையும், வாங்க முயலுவோம்; இங்ஙனம் பாவத்தைச் சம்பாதித்தோம். இது வொழிந்தால், ஆட்டுக் குட்டிகளையும் கோழிகளையும், கன்றுகளையும், ஒனாய் கொன்றுவிடுமோ என்ற கவலை ஒரு பக்கம்; குதிரைகளைத் திருடர்கள் தூக்கிக்கொண்டு போய் விடுவார்களோ என்ற கவலை மற்றொரு பக்கம். படுக்கையில் போய்ப் படுத்துக்கொண்டால், ஆட்டுக்குட்டிகளை ஆடுகள் நசுக்கிவிடுமோ என்ற யோசனையால் நித்திரை வராது. இதற்காக, இரவில் எழுந்து, நாலாபக்கமும் சுற்றிப்பார்ப்போம். ஒரு வேளை கவலை யற்றுச் சிறிதுநேரம் இருக்க நேர்ந்தால், அதற்குள் புதிதாக ஒரு கவலை தயாராக விருக்கும்—பனி காலத்தில் இவ் வாடு மாடுகளுக்கு எவ்விதம் போதுமான புல் முதலியன சேகரிப்பது என்பது. இதுவுமன்றி, எனக்கும் கிழவருக்கும் கூட ஒத்துக்கொள்ளாது. அவர் ஒன்று சொல்லுவர், நான் ஒன்று சொல்லுவேன். இருவருக்கும் சச்சரவுதான்; பாபச் சொற்கள் தான். இவ் விதமாக, ஒரு கவலையிலிருந்து மற்றொரு கவலைக்குத் தாண்டியும், ஒரு பாபத்திலிருந்து மற்றொரு பாபத்தைப் பெருக்கியும், சுகமாக விருப்பது இன்னதென்று தெரியாமலே, வசித்து வந்தோம்." என்று கிழவி உரைத்தாள்.

"சரி, இப்பொழுது எங்ஙனம் சுகப்படுகிறீர்கள்?" என்று நண்பர் உடனே வினவினர்.

"இப்பொழுதா! அதையும் கேளுங்கள்! நாங்கள் அதிகாலையில் எழுந்திருக்கிறோம். நானும் கிழவரும் அன்புடன் பேசிக்

கொள்ளுகிறோம். சண்டை போட்டுக்கொள்ள ஒன்றுமில்லை. எஜமானனுக்கு உழைப்பதே தான் கவலை. கவலைப்படுகிறதற்கும் ஒன்றுமில்லை. எஜமானனுக்கு எங்களால் நஷ்டம் வராமல், லாபம் வரும்படியாக எங்களால் இயன்றவளவு முழுமனதுடன் பாடுபடுகிறோம்; நாங்கள் வீட்டிற்குத் திரும்பும்போது, எல்லாம் தயாராக விருக்கின்றன. காலை போஜனம், மத்தியான போஜனம், இரா போஜனம், "கூமிஸ்" பானம், ஒன்றும் குறைவில்லை. குளிர் ஒடுக்கினால், கம்பளிச் சொக்காய் இருக்கிறது கணப்புச் செய்துகொள்ள வேண்டிய சுள்ளி குச்சிகளுமிருக்கின்றன; ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளவும், ஆத்மாவைப் பற்றி நினைக்கிறதற்கும், கடவுளைத் தியானம் செய்வதற்கும், வேண்டிய அவகாசமிருக்கிறது. ஐம்பது வருஷங்களாகச் சுகமென்பது எங்கே யிருக்கிறதென்று தேடி, இப்பொழுதே இங்கே கண்டு கொண்டோம்" என்று கிழவி சொன்னாள்.

விருந்தாளிகள் எல்லோரும் நகைத்தார்கள். இலியா அவர்களை நோக்கி, "சகோதரர்களே! இது வேடிக்கை வார்த்தையல்ல. மனித வாழ்க்கை யென்பது இதுவே. நாங்கள் கூட செல்வமெல்லாம் இழந்த பொழுது, அஞ்ஞானத்தால் அழுதோம். கடவுள், உண்மையை எங்களுக்கு, இப்பொழுதே, கருணையால் காண்பித்தார். அதை உங்கள் க்ஷேமத்திற்காகச் சொன்னோம். தன்னை மறந்து, வாழ்க்கையில் பற்றற்று, முழுமனதோடு, உற்சாகத்தோடு, பிறருக்குப் பாடுபடுதலே ஆனந்தம்; அது செல்வத்தில் இல்லை யென்பது திண்ணம்." என்று கூறினார்.

கௌரவம் பொருந்திய 'முல்லா'வும், "இவைகள் ஞானம் பொதிந்த மொழிகள். இலியா சொல்வதெல்லாம் உண்மை. அவ்வாறே, வேதங்களிலும் எழுதப்பட்டிருக்கின்றன." என்றார்.

விருந்தாளிகளும், நகைத்தலை நிறுத்தி, ஆலோசனையில் ஆழ்ந்தார்கள்.

# பாவலர் விருந்து

(570-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீமத் விபுலானந்த சுவாமிகள், மயிலை

நன்மாறன் :—"சுவை பலவென்று கூறுவார் கூறுக; யாம் வேண்டுவது இன்பச்சுவையே" எனப் போஜராஜன் உரைத்தான். இன்பப் பொருள் எப்பொருளினுஞ் சிறந்ததே. அப்பொருளினைப் பெறுவாருக்கு வந்து எய்துகின்ற நன்மையைப்பற்றி அன்பராகிய நீவிர் அனைவருங் கூறினீர். அப்பொருளினை யளிக்குந் தெய்வத்தின் புகழைக் கூறுவது இன்றியமையாச் சிறப்பினதாமாதலினால், தேவர்களுக்குள்ளே அழகும் இளமையுஞ்சான்ற காதற்றெய்வத்தைப் பற்றி ஒரு சில குறிப்புக்கள் கூற முற்பட்டேன். "காதல் இளமை சான்றது," என யான் கூறிய கூற்றுக்கு ஆதாரம் எதுவோ வென்னில், "இனம் இனத்தைச் சாரும்" என்றபடி காதல் என்றும் இளையோரைச் சார்ந்து நிற்பதுவேயாம். அஃதன்றி, இத்தெய்வம் மெல்லென்ற நீர்மையது. ஆடவர், மடவார், தேவர், அரம்பையர் என்றின்னோருடைய இருதய கமலத்தின் மேல் நடந்து, பூக்களாகிய பாணங்களினாலே அவர் மனத்தில் இன்ப வேட்கையை உண்டு பண்ணுகின்றதன்றோ? இக்காரணத்தினால் இத்தெய்வம் மென்னீர்மையதாமெனவும் அருளுடையதாமெனவும் அறிதல் வேண்டும். தறுகண்மையுள்ள விடத்துக் காதல் இல்லை. ஆதலால் காதல் என்றும் அருளையே சார்ந்துநிற்கும் என்பது பெறப்படுகின்றது. இனி இத்தெய்வம் வீரத்திற் சிறந்தது எனவும் அறிதல் வேண்டும். புயவலிபடைத்த விறல் வீரரைத் தன்வயப்படுத்தி யடக்கியாளும் திறமையுடைய காதற்றெய்வத்தினும் பார்க்கச் சிறந்த வீரர் உளரோ? தேவர் சேனாபதியையும் காதல் வென்றுவிட்டதென்றால், காதலுக் கிணையான வீரர் வேறு யாவருளர்? வித்துவசக்தியிற் காதலுக்கிணையான பாவலர் பிறர் இலர்.

காத லுளத்திற் கதுவக் கடல்புடைசூழ்
பூதலத்து மைந்தர் புலவராய்க்—கோதில்

தமிழ்தனைவ ராதலினற் றுவில்புகழ்க் காத
லமிழ்தமொழிச் செம்புலவ னும்.

அழகினை விழைந்து நிற்பது காதல். அழகின் மேலுள்ள விழைவினலன்றோ, சிற்பர், ஓவியர் என்றின்னோர் தமது வேலையைச் செவ்வனே செய்கின்றனர்? அழகினை விழையும் விழைவினலன்றோ, அவனியில் நன்மக்கள் தோற்றுகின்றனர்? பிரிவு நீக்கத்து மகிழ்வினை யழிப்பதும், விழாக்காலத்தும் குரவை மன்றத்தும் விழைவொடு தோன்றி யுவகையை யளிப்பதும், பகைமையை நீக்கி யொன்றுகூட்டுவதும், சமூக வாழ்க்கைக்கு அழகினை யளிப்பதும், வாழ்வினுந் தாழ்வினும் ஆதாரமாவதும் காதற்றெய்வத மன்றோ? ஆதலினல் இத்தெய்வத்தின் புகழினை வியந்து பாடுவதும், அதனோடு உடன் சேர்ந்திருப்பதும் அறிவுடையா ரனைவருக்கும் கடனாகும். [என நன்மாறன் கூறிமுடிக்கச் சபையிலிருந்தோர் உவகையினற் கைகொட்டி யார்ப்பரித்தனர்.]

சாத்தனர்:—[மருத்துவன் றமோதரனரை நோக்கி] பார்த்தீரோ, நண்பரே! அரசர் பெருமானது உரை சிறக்கும் எனவும் என்பாடு அல்லல்தான் எனவும் நான் எற்கனவே கூறிய உண்மையைக் கண்டு கொண்டீரல்லவா?

தாமோதரனர்:—அரசர் பெருமானுரை சிறக்குமென்ற அளவிற் கண்டு கொண்டேன்; ஆனல் தங்களுக்கு அல்லல் வந்தெய்துமென்பது எவ்வாற்றானும் பெறப்படவில்லை.

சாத்தனர்—என்! நண்பரே! பலவேறு வகைப்பட்ட சொல்லணியும் பொருளணியும் பொலிந்து விளங்கிய அரசருரைக்குப் பின்பு உரைவிரிப்பது எத்தன்மையோருக்கும் அரியதொன்றல்லவா? யாதும் பேசாது சிலையுருவம்போல் மௌனமா யிருந்துவிடலாமோ வென்றெண்ணினேன். அறிவீனனுகிய எனது நா ஆராயாது வாக்குப் பண்ணிய ஒரு வாக்குத்தத்தமுங் கிடக்கிறது. அன்பைப் பற்றி யான் என்ன அறிவேன்? காதற்றெய்வத்தின் புகழாக யான் சொல்லக் கூடிய யாவுள? சொற்களை நேர் பெற அடுக்கிக் கூறும் வன்மையைத் தருகிற அலங்கார சாஸ்திரப் பயிற்சியும் எனக்கில்லை; ஆதலால் எனது உரை நகைக்கிடனுகு மென்பது வெளிப்படை. அன்பராகிய நமக்குச் சம்மதமாயின், அரசர் பெருமானிடத்துச் சில வினக்கள் வினவி என் மனத்தில் உதித்த சில சந்தேகங்களை நீக்கிக் கொள்ள விரும்புகிறேன்.

காவிரிப்பூம்பட்டினத்துக் கீரிக்கண்ணனார்:—தேவரீர் அங்ஙனஞ் செய்வது எங்களுக்குச் சம்மதந்தான்.

சாத்தனார்:—என்னுருயிர் நண்ப! நன்மாற! என் அரசே! நினது உரையை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டேன். காதற்றெய்வத்தின் மாண்பினை யறிந்தேன். காதல் தன்னைத் தான் காதலிக்கின்றதா? பிறிதொன்றினைக் காதலிக்கின்றதா? என்று ஒரு சந்தேகம் மாத்திரம் என் உள்ளத்தில் நிகழுகின்றது. தந்தை யென்புழிமைந்தனுண்மை யுய்த்துணரக்கிடப்பது போலக் காதலென்புழிக் காதலிக்கப்படும் பொருள் பிறிதொன்று உளதாக வேண்டும் என்பது எனது சிற்றறிவுக்குப் புலப்படுகின்றது. அரசருடைய கருத்து யாதோ அறியேன். ‘காதல் தன்னைத்தான் காதலிக்கிறதா? பிறிதொன்றினைக் காதலிக்கிறதா?’ என்பதே எனது வினா.

நன்மாறன்:—பிறிதொன்றினைத்தான் காதலிக்கின்றது.

சாத்தனார்:—நல்லது அரசே! பசியுடையோன் உணவைத் தேடுவானா? பசியில்லாதவன் உணவைத் தேடுவானா?

நன்மாறன்:—பசியுள்ளவன்தான் உணவைத் தேடுவான். யாண்டுக் குறைவு உண்டோ அவ்விடத்துத்தான் விழைவு ஏற்படும்.

சாத்தனார்:—அழகுள்ளவன் அழகினைக் காதலிப்பானோ, அழகில்லாதவன் அழகினைக் காதலிப்பானா?

நன்மாறன்:—அழகில்லாதவன்றான் அழகினைக் காதலிப்பான்.

சாத்தனார்:—நல்லது, அரசே! காதல் அழகினைக் காதலிக்கின்றது என்று கூறினீர். ஆதலால் காதல் அழகிற் குறைவுபாடுடையது என்பது பெறப்படுகின்றதா, அல்லவா? காதல் அழகில் நிறைவு உடையதாயின், அழகினைக் காதலிக்க வேண்டிய அவசியம் காதலுக்கு ஏற்படுமா?

நன்மாறன்:—குறைவுபாடுடைய தென்றுதான் சொல்ல வேண்டும்.

சாத்தனார்:—அங்ஙனமாயின் காதற்றெய்வத்தினும் பார்க்க அழகு சான்ற தேவதை பிறிதொன்றிலதெனக் கூறிய கூற்றுப் பிழைபடுகின்றதல்லவா?

நன்மாறன்:—ஆம், பிழைபடுகின்றது.

சாத்தனார்:—ஆதலால், காதற்றெய்வம் அவலட்சண வுருவமுடைய தல்லவா?

நன்மாறன்:—தேவரீருரைக்கு மறுமாற்றங் கூறமுடியாதவனா யிருக்கிறேன். இவ்வண்ணம் தர்க்கிப்பீராயின் நான் காதற்றெய்வத்துக்கு இயம்பிய நற்குணங்களனைத்தினையும் போக்கிவிடுவீர் என அஞ்சுகிறேன்.

சாத்தனார்:—என் அரசே! அங்ஙனமல்ல; எந்த விஷயத்தையுங் கூர்ந்து நோக்க வேண்டும். காதல் வேறு; காதலிக்கப்படும் பொருள் வேறு. காதலிக்கப்படும் பொருளுக்குள்ள குணங்களைக் காதலுக்கு ஏற்றிச் சொல்லி விடுவது அறியாமையின் பாலதாகும். அஃதன்றியும் ஒரு பொருள் நன்மை யெய்தப்பெறாதது என்ற வெல்லையில், அது தீமை நிறைந்தது என்று நிச்சயித்து விடுவதுங் கூடாது; நன்மை தீமையாகிய விரண்டும் பொருந்தப் பெறா இடைப்பட்ட நிலையொன்று இருக்கிறதல்லவா? நீவிர் புகழ்ந்து கூறிய காதற்றெய்வம் அந்த இடைப்பட்ட நிலையிலுள்ளது. ஆடவருக்கும் மடவாருக்கும் இடையேயுள்ள அன்பினுருவம், நீர் உரைத்த காதல். இவ்வன்பு ஒரோவழி நன்மை பயப்பது; ஒரோவழி தீமையை விளைவிப்பது. ஆதலால் இதனை நல்லதென்றாவது தீயதென்றாவது சொல்லுதல் கூடாது. அன்பின் வரலாற்றைப்பற்றிக் கலைச்செல்வியாகிய ஔவையாரிடம் யான் கேட்டறிந்த விஷயங்கள் சிலவுள; அவற்றை நீவிரறியும்படியாகச் சொல்லுகிறேன். முன்னொரு காலத்தில் தேவர்கள் ஒருங்கு கூடி விருந்தாட்டயர்ந்தார்கள். இவ் விருந்துக்குச் செல்வமும் 'வறுமையும் வந்திருந்தன. செல்வ மென்னு மாடவன் மதுவினை நிறைய வுண்டு அறிவழிந்த காரணத்தினாலே, அமராவதி நகரத்தின் ஐந்தரு நிறைந்த பூஞ்சோலையினுள்ளே அயர்ந்து நித்திரையாய் விட்டனன். இதனைக் கண்ட வறுமையென்னும் பெண்ணானவள், பல நலங்களோடுங் கூடி விளங்குகின்ற செல்வத்தைக் கூடி, ஒரு மகவினைப் பெற்றால் தனக்குப் பெருமை வந்தெய்தும் என வெண்ணிச் செல்வத்தினருகே போய்ச் சயனித்தனள். அதன் பின் வறுமை வயிற்றிற் கருவுண்டாகிச் சுப தினத்திலே காதல் என்னும் ஆண் மகவினை யீன்றனள். ஆதலினால், காதல் தாயின் குணம் மேற்கொண்டு பெருமூச்செறிவதும், நிலத்திற் புரள்வதும், வீடு துறந்தலைவதும் என்றித்தகைய தொழில்களைச் செய்கின்றது; ஒரோவழி தந்தையின் குணம் மேற்கொண்டு அடுத்தவரைக் கெடுப்பதும், மருந்து மந்திரத்தால் மயக்குவதும், பிறரை யிகழ்வதுஞ் செய்கின்றது. இத்தகைய காதல் அன்பின் ஒரு அம்சமாகும். அன்பு

தேவருலகத்துக்கும் மண்ணுலகத்துக்கும் இடையே போக்கு வரவு செய்கின்ற ஒரு தூதுவன் பேன்றது. நன்மையை நாடுவதே அன்புக்கு இயல்பு; அங்ஙனமாயினும் அறியாமையினாலே தீய பொருட்களை நாடி அவற்றால் துன்பத்தை யடைவது முண்டு. அறிவில்லாதாரது உள்ளத்து எழுகின்ற காதல் கேவலம் சரீரத்தின் அழகை நாடி நிற்பது. சரீரமோ மூப்பு விளிவுடையது. எறியும் வேலொத்த கண்ணினையுடைய மடநல்லார், ஆண்டு பல கழியக் கோல்கொண்டு வழிகாணும் முதுமைப் பருவத்தை யடைவார். ஆதலால் நிலைத்து நிற்கின்ற கல்வியழகு, நற்குண நற்செய்கை, இவற்றின் மேற் காதல்வைப்பார் அறிவுடையார்; கீர்த்தி யென்னும் அழியாப் பொருளைப் பெறுதற்கு விரும்பினோர், அழிபொருளாகிய தமது உடலின் மீது சிறிதேனும் பற்றுவைக்காது, போர்க்களத்தைக் காதலித்து நிற்பார். நித்தியத்துவத்தை யார்தான் விரும்பாதார்? அழிந்து போகிற குழந்தைகளைப் பெறுதற்கு உலகத்து மானிடர் எவ்வளவு தவஞ் செய்கிறார்கள். நிலைபெற்ற புகழ் என்னுங் குழந்தையைப் பெறுவதற்கு அதனினும் பார்க்கக் கோடி மடங்கு தவஞ்செய்ய வேண்டுமல்லவா? அழகுள்ள பொருண் மேல் இயல்பாக ஏற்படுகின்ற அன்பினைப் பெருக்குவோன் இம்மை மறுமைப்பயன் அனைத்தினையும் பெறுவான். அறத்துக்கும் மறத்துக்கும் அன்பே துணையாவது.

(1) குணதிசையிற் பரிதியெழக் கமலமலர்
 அகம்நெகிழ்ந்த குறிப்புக் கண்டேன்,
மணவணிநாள் விரவிவர மணமகளின்
 முககமல மலரக் கண்டேன்,
இணையணுக உவகையினாற் குதுகலிக்கும்
 பெண்புறவின் இயல்பு கண்டேன்,
அணைவர்தனித் துணைவரெனின் அகநெகிழ்தல்
 அன்பாமென் றறிந்தேன் யானே.

(2) அணிஇரவி கடலில்விழ அரவிந்தம்
 சோர்ந்துவிழும் அல்லல் கண்டேன்,
இணைபிரிந்த இளம்பறவை சிறையடித்து
 நனிவருந்தும் இன்னல் கண்டேன்,
கணவனுடல் பதறிவிழக் கதறிஅழு
 மடமகளின் கவற்சி கண்டேன்,
துணைவர்பிரிந் தேகுங்கால் துயருறுதல்
 அன்பென்னத் துணிந்தேன் யானே.

(3) சாபத்தைக் காத்தேந்திப் போர்க்களத்தில்
இறக்களண்ணிச் சார்வார்க் கண்டேன்,
தீபத்தின் மிசைவிழுந்து சிறைஎரிந்த
சிறுவிட்டிற் செய்கை கண்டேன்,
பாபத்தின் உருவாய விலைமகளைக்
காதலித்தோர் பான்மை கண்டேன்,
ஆபத்தை நோக்காமல் உட்புகுதல்
அன்பென்ன அறிந்தேன் யானே.

(4) ஈசா! நின் தனையல்லாற் பிறவேண்டேன்
எனும் தொண்டன் ஏற்றம் கண்டேன்,
ஆசான்தன் திருவடிக்கே அனைத்துமெனும்
மாணுக்கன் ஆற்றல் கண்டேன்,
நேசா! என் பொருள் உயிரை
நினதெனக்கொள் எனுநண்பன் நேர்மை கண்டேன்,
கூசாமல் உடல்பொருள் ஆவியைக்கொடுத்தல்
அன்பென்னக் குறித்தேன் யானே.

(5) வெள்ளநீர் தருமேகம் வேற்றுமையில்
லாதுதவும் மேன்மை கண்டேன்,
வள்ளலா யிருந்தோர்தாம் வறுமைவந்தும்
பிறர்க்கிரங்கு மாண்பு கண்டேன்,
கொள்ளுவீர் எனஇளநீர் கொடுக்கின்ற
செழுந்தெங்கின் குறிப்புக் கண்டேன்,
உள்ளநேர் விழைவின்றிக் கொடுத்துதவல்
அன்பென்ன உணர்ந்தேன் யானே.

(6) தன்மகன்சான் ஹேனென்ன னனிமகிழ்ந்து
களிகூர்ந்த தாயைக் கண்டேன்,
தன்மகன்நோய் தீர்ப்பதற்காத் துயில் நீத்துப்
பசிகிடந்த தகவு கண்டேன்,
தன்மகன்நல் வெற்றிபெறத் தவப்பயனை
விரும்பிநல்கும் தன்மை கண்டேன்,
மன்னுநீர் வையகத்தில் அன்னையன்பு
சிறந்ததென மதித்தேன் யானே.

அன்பின் வான்முறை கூறிய "பாவலர் விருந்து" முற்றும்.

# ஸம்ஸ்கிருத சுவடிகள்

(912-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ. R. அனந்தகிருஷ்ண சாஸ்திரி, சாந்திநிகேதனம்

வித்தியாநகரம்.—13–14-வது நூற்றாண்டுகளில் வெகு பிரசித்தியை படைந்தது; இது வேத பாஷியம் முதலானவை யெழுதப்பட்ட இடம். வித்தியாரணியர் என்கிற ஒரு மகான் அவதரித்து, வேதத்தையும் கர்மாநுஷ்டானத்தையும் திருப்பி ஸ்தாபித்தார். இவர் எழுதின நாலுவேதங்களின் சாகை பாஷியங்களும், அப்படியே ஒவ்வொரு சாஸ்திரங்களுக்கும் எழுதிய வியாக்கியானங்களுமில்லாவிட்டால், இந்தக் காலத்தில் ஒருவராலும் வேதத்தின் அர்த்தமும் சாஸ்திரங்களின் அர்த்தமும் சொல்ல முடியாது. இவர், புத்தகங்களை வைத்து கொண்டுதான், இப்பொழுதுள்ள வித்துவான்கள் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் புத்தகங்கள் எழுதுகிறார்கள். இவை இல்லாவிட்டால், நமது வேத சாஸ்திரங்கள் சூரியனில்லாத பகல் போல் தோன்றும்; இந்துக்களுக்கு வித்தியா கௌரவமும் கிடையாது. மூன்று பெயர்களில் இந்தப் புஸ்தகங்கள் வந்திருக்கின்றன. அவை யாவன, ஸாயணர், மாதவர், வித்தியாரணியர். இம்மூன்று பெயர்களும் ஒன்றோ வேறோ என்கிற விஷயத்தை விசாரிக்கிற இடம் இதல்ல.

வித்துவான்கள் ஞாபகத்திற்கு ஒரு விஷயஞ்சொல்லுகிறேன். இப்பொழுது எழுதிவந்திருக்கிற வேத பாஷிய முதல், ஸாயணர் மாதவர் வித்தியாரணிய ரென்ற பெயருடன் வந்திருக்கிற சகல கிருந்தங்களையும், ஒருவரே செய்கிறதாயிருந்தால், அந்த வித்துவான் தினந்தோறும் பத்துமணி நேரம் விடாமல் வேலை செய்து, அதைப் பிரதி செய்ய நூறு வித்துவான்கள் நியமிக்கப்பட்டு, அந்த வித்துவான்களும் அர்த்தத்தைக் கவனித்து எழுதுகிறதாகவிருந்தால், சுமார் நூறு வருஷங்களாகும். இந்தக்

கணக்கும், இப்பொழுது அகப்பட்டிருக்கிற புத்தகங்களை வைத்துச் சொல்லுகிறேன். அவர்களின் பேரில் குறிக்கப்படுகிற எல்லா கிருந்தங்களும் அகப்படுகிற பக்ஷத்தில், இன்னம் நூறு அல்லது ஐம்பது வருஷங்கள் சேர்க்க வேண்டும். தினம் பத்து மணி விடாமல் யார் வேலை செய்வார்கள்? மற்றும் உட்கார்ந்து குனிந்து எழுதுகிறதும் சிரமம். அன்றியும், ஸாயணர் வித்தியா வாழ்வு கி. பி. 1350 முதல் 1379 வரை யென்று சில வித்துவான்கள் சொல்லுகிறார்கள். அவர் பூமியில் வாழ்ந்தது 80 வயதுக்கு மேல், அதில் வித்தியா வாழ்வு 29 வருஷம். இதுவே இந்த காலத்தில் அதிகம். தவிரவும், அவர் எழுதிய வேத பாஷியம் முதலான ஒவ்வொரு கிருந்தமும் காலக்கிரமத்தில் நாசமடையலா மென்று பயந்தே, ஒவ்வொன்றுக்கும் நான்கு பிரதிகள் செய்து, சிருங்கேரி, துவாரகா, ஜகன்னாதம், காசி ஆகிய ஊர்களுக்கு அனுப்பியது; மற்றும் சிலர் தங்கள் சொந்த உபயோகத்திற்காகச் சில பாகங்களை யெழுதியும், எழுதிவித்து விற்றுப் பாத கண்டம் முழுதும் வியாபிக்கச்செய்தும் வந்திருக்கின்றனர். அதில் துவாரகைக்கு வந்த ருக்வேத பாஷியம், ஸாயணர் காலத்தில் எழுதியது, ஜாம் நகரில் ஒரு வைதிகர் வீட்டில் அகப்பட்டு, இப்பொழுது பரோடா லைப்ரரியில் வைக்கப்பட்டிருக்கிறது. அதின் முடிவில், அதை எழுதிய கால தேச சரித்திரங் கூறப்பட்டிருக்கிறது. மனிதருடைய துக்கம் சிரமம் முதலானவற்றை யோசித்துப் பார்த்தால், தினந்தோறும் பதினாயிரத்திற்கு மேல் பண்டிதர்களை நியமித்து, அவர்களுக்கு உபசாரஞ் செய்து வேலை சரியாகப் பூர்த்தியாக வேண்டுமானால், அந்த வித்தியாரணியரும் அவர் ராஜாவும் எப்படி யிருந்திருக்கவேண்டும் என்று, கொஞ்சம் படித்த வித்துவான்கள் யோசித்துப் பார்க்கட்டும். இப்படியும் 500 வருஷங்களுக்கு முன் ஒரு காலமிருந்தது. அதின் அடையாளமாக புத்தகங்களும் நூற்றுக்கு மேல் அகப்பட்டிருக்கின்றன. வேதத்தில் ஒரு முக்கிய மான ருக்கை யெடுத்து, அதற்கு வியாகரண முறைப்படி முன்பின் சரிவர அர்த்தஞ்செய்து, அதுவும் வான சாஸ்திர முறைப்படி கணக்கு முதலானவைகள் இசையும்படிசெய்து எழுதவேண்டுமானால், சாதாரணமாக, ஒரு மகா வித்துவானுக்கு, ஒரு தினத்திற்குமேல் ஆகும். மற்றும் அதற்கு வேண்டிய உப கருவிகளோ, இந்தக் காலம் மாதிரி அச்சுக் கிடையாது; எல்லாம் முகஸ்தியிலும்? சிலவை

ஏடுகளிலுமிருக்கலாம். அதையும் நாம் கவனிக்கவேண்டும். ருக்கு வேதம் சுமார் 10,000 (பதினாயிரம்) ருக்குக்கள் அடங்கியது. யஜுஸ்ஸில் மூன்று சாகைக்கு பாஷியம்; அப்படியே மற்ற வேதங்கள்; பிறகு சிரௌதங்களின் வியாக்கியானம்.

காஞ்சி - திராவிடதேசம் - பினாகினீ - காவேரி-தாம்பிரபர்ணீ - தீரங்கள் முதலான இடங்கள்:—வடக்கேயிருந்து வந்த ஆரியர்கள் அந்தந்த ஸ்தலத்து ராஜாக்களால் வெகு உபசாரமடைந்து, தினந்தோறும் கர்ம சிரத்தையை வெளிப்படுத்திவந்தமையால், ஜாஸ்தி சிரௌத புஸ்தகங்களும், மீமாம்ஸையும் அகப்படும். ஒவ்வொரு கிராமத்திலும் ஆபஸ்தம்ப ஸூத்திரம் பாஷிய ஏடுகளும், விஷ்ணு சிவ புராண ஏடுகளும் கிடைக்கும். யாகஞ் செய்கிறது ஆவசியமானதினால், அதற்கு மற்ற இரண்டு வேதங்களும் ஒத்தாசையாக யிருப்பதினால், ருக்குக்கும் ஸாமத்திற்கு சில பிராமணர்களை வரவழைத்து, அங்கங்கே சௌகரியப்படி ஸ்தாபித்தார்கள். அதர்வ வேதக்காரார்கள் வடக்கேயிருந்து வரவில்லை. ஆகையால், நூற்றில் 90 யாஜுஷம்; 5. ருக்கு; 5. ஸாமம். இவ்விதமாக, கொஞ்ச காலம் திராவிட தேசம் கர்மானுஷ்டானத்திலும் வேத விஷயத்திலும் மேன்மையடைந்து, வட தேசத்திலிருந்து பார்க்கவந்த ஆரியர்கள் மெச்சும்படி பெருமைப்பட்டது. இப்பொழுது, ஞானமும் அனுஷ்டானமும் போய், கேவலம் வெளி வேஷ மாத்திரமிருப்பதால், சகல கலகத்திற்கும் அசூயைக்கும் இருப்பிடமாக இருக்கிறது.

மலையாளம். (கேரளம்.) இது கன்னியா குமாரி முதல் கள்ளிக்கோட்டை வரையும், கேரளமென்கிற பெயரால் வழங்குகிறது. இந்தப் பூமியைப் பரசுராமன் சிருஷ்டி செய்து, வடக்கே நேபாலம் முதலான இடங்களிலிருந்து அனேக பிராமணர்களை வருத்தி ஸ்தாபித்ததாக, கதையிருக்கிறது. இவர்கள் கேரளத்தை விட்டு வெளிப்படாமல் எப்பொழுதும் வேதங்கள் சாஸ்திரங்களைப் படித்து வந்ததினால், தங்கள் வீடுகளில் அவர்கள் வரும்பொழுது கொண்டுவந்த சாஸ்திரங்களை ரக்ஷித்து வந்தார்கள். இப்பொழுது காஷ்மீரத்தில் அகப்படும் புஸ்தகம், மலையாளத்தில் பழைய மலையாள அக்ஷரத்திலிருக்கிறது; வேறு ந்டுவிலிருக்கிற ஒரு தேசத்திலும் கிடைக்கிறதில்லை. அப்படியே அனேக அபூர்வ கிருந்தங்கள், வேறெங்கும் கிடைக்காதவை, கேரளத்தில் அகப்படுகின்றன. இதற்குக்

காரணமாவது, ரக்ஷணையும் பாடஞ் செய்த சிதாலவோலையுமே. ஜன சங்கியை எடுக்கிற மாதிரி வீடு வீடாக நம்பூரி யென்கிற பிராமணர்கள் வீட்டிலும் மற்றுமுள்ள எல்லா ஜாதியார் வீட்டிலும் நன்றாகப் பரிசோதனை செய்தால், இன்னும் என்ன அபூர்வ கிரந்தங்கள், இதுவரை கேளாதன, அகப்படுமோ, தெரியாது. நாட்டிய சாஸ்திரம் கேரளத்தில் வியாக்கியனத்துடன் கிடைக்கும். அதினால் திருவிதாங்கூர் கெவரண்மென்டானது மகா மகோபாத்தியாயர் கணபதி சாஸ்திரியவர்கள் மூலமாக வெகு அபூர்வ கிரந்தங்களை அச்சிட்டுவருகிறது. இவ்விதமான புஸ்தகங்கள் சாதாரணமாக மற்ற இடங்களில் சேர்ந்து சுமார் 200 மயிலுக்குள் கிடையாது.

இவ்விதமாக நம் பரத கண்டத்தில் முக்கியமான தலைமை ஸ்தலங்களை குறிப்பிட்டேன். அந்தந்த முக்கிய ஸ்தலங்களைச் சுற்றியிருக்கிற கிராமங்களில் அனேகமாக அவர்கள் தலைமை ஸ்தலங்களில் காபி செய்த பிரதிகளேயிருக்கும். சிலவை அபூர்வமாக வெளியிலிருந்தும் வந்திருக்கலாம். டாக்டர் ஆபர்ட்டு என்கிற ஒரு ஜர்மன் வித்துவான், சுமார் 40 வருஷங்களுக்கு முன், மதிராஸ் கெவரண்மெண்டுக்காக தென் இந்தியாவிலிருக்கிற ஏடுகளுக்கு ஒரு லிஸ்டு எடுத்து, இரண்டு தொகுதிகளாக அச்சிட்டிருக்கிறார். அதைப் பார்த்தால் நம் கிரந்தங்கள் எந்த எந்த விஷயங்கள், கிராமங்களில் சிதறிக்கிடக்கிற தென்று தெரிந்து கொள்ளலாம். அப்படியே பம்பாய், கல்கத்தா முதலான முக்கிய இடங்களிலு மிருக்கிற ஏடுகளுக்கு லிஸ்டு உண்டு.

வடக்கே முக்கியமான பிராமணர்கள் வீட்டில் புஸ்தகம் பார்க்கப்போனால், அனேகமாக அவர்களிடத்திலிருக்கிற புஸ்தகங்களுக்கும் லிஸ்டு எடுத்து நம்பர் போட்டு வரிசையாகக் கட்டி வைத்திருப்பார்கள். பெரிய வித்துவான் இருந்த வீட்டில் சுமார் நம்பர் இரண்டாயிரம் வரைப் போகும். சாதாரண வீட்டில் 400 அல்லது 500 க்கு குறையாது.

(தொடரும்.)

1013

## பலதுறைப் பொறுக்குமணிகள்
## பத்திரிகை ஆராய்ச்சி.

(971-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

### I. மதவிஷயக் குறிப்புக்கள்

#### 133. புத்தர் "அறநெறி"

(ஸ்ரீலஸ்ரீ இலக்குமணப்போற்றிகள் மொழி பெயர்த்தது — இரட்டைப் பாக்கள்.)

1. நமது வாழ்வெல்லாம் நாம் நினைப்புக்கொண்டிருப்பதன் முடிபாயிருக்கின்றது; அதற்கு நம்முடைய நினைவுகளே ஆதாரங்களா யிருக்கின்றன, அது நம்முடைய எண்ணங்களால் அமைந்திருக்கின்றது. ஒருவன் தீய எண்ணத்துடன் பேசுகிறதானால் அல்லது நடக்கிறதானால், வண்டியின் சக்கரம் அதை இழுக்கிறவனுடைய காலடியைப் பின்பற்றிச் செல்லுகிறதுபோலத், துன்பமானது அவனைத் தொடருகின்றது.

2. நமது வாழ்வெல்லாம் நாம் நினைப்புக்கொண்டிருப்பதன் முடிபாயிருக்கின்றது; அதற்கு நம்முடைய நினைவுகளே ஆதாரங்களா யிருக்கின்றன, அது நம்முடைய எண்ணங்களால் அமைந்திருக்கின்றது. ஒருவன் தூய எண்ணத்துடன் பேசுகிறதானால், அல்லது நடக்கிறதானால், அவனை ஒரு பொழுதும் விட்டு நீங்காத சாயையைப் போல, இன்பமானது அவனைத் தொடருகின்றது.

3. அவன் என்னைத் திட்டினான், அவன் என்னை அடித்தான், அவன் என்னை தோற்கடித்தான், அவன் என்னிடம் திருடினான்—எனும் எண்ணங்களுக்கு இடங்கொடுக்கிறவர்களிடத்தில் பகைமையானது ஒரு பொழுதும் ஒழியாது.

4. அவன் என்னைத் திட்டினான், அவன் என்னை அடித்தான், அவன் என்னைத் தோற்கடித்தான், அவன்

என்னிடம் திருடினன்—எனும் எண்ணங்களுக்கு இடங் கொடாதவர்களிடம் பகைமை ஒழிந்து விடும்.

5. ஏனென்றால், பகைமையானது எக்தக் காலத்திலும் பகைமையினால் நீங்குகிற தில்லை; பகைமை அன்பினால் நீங்குகின்றது; இது பழமையான தோர் விதியாம்.

6. நாம் அனைவரும் இவ்விடத்திலே முடிவடைய வேண்டுமென்பதைச் சிலர் அறியார்; ஆனால் மற்றவர்கள் அதை அறிகின்றனர்; ஆதலால் அவர்களுடைய சண்டைச் சச்சரவுகள் ஒழிகின்றன.

7. ஒருவன் தன் புலன்களை அடக்காமலும், சுக போகங்களில் மிதமிஞ்சியவனும், சோம்பலுள்ளவனும், துர்பலமுள்ளவனும், சிற்றின்பங்களையே எதிர் பார்த்துக் கொண்டிருப்பவனு மிருக்கில், காற்றானது துர் பலமுள்ள மரத்தைப் பிடுங்கி எறிவதுபோல (தீ நெறி காட்டும்) மாரனானவன் அவனை நிச்சயமாய் வென்றுவிடுவான்.

8. ஒருவன் தன் புலன்களை நன்றாய் அடக்கியும், சுக போகங்களில் மிதமுள்ளவனும், விசுவாசமுள்ளவனும், திடமுள்ளவனும் சிற்றின்பங்களை நோக்கா திருப்பின், காற்றானது கல் மலையை அசைக்க முடியாததுபோல, மாரன் அவனை நிச்சயமாய் வெல்ல முடியாது.

9. தன்னைப் பாவத்தினின்றும் சுத்தி செய்து கொள்ளாமல் காவி உடைதரிக்க விரும்புகிறவன், மித வரம்பையும் உண்மையையும் மதியாதவன், காவி உடைக்குப் பாத்திரன் அல்லன்.

10. பாவத்தினின்றும் தன்னைச் சுத்தி செய்து கொண்டவன், சகல அறங்களினும் நன்கு நிலை பெற்றவனும், மித வரம்பையும் உண்மையையும் மதிக்கிறவனும் காவி உடைக்கு உள்ளபடியே பாத்திரனு யிருக்கிறான்.

11. பொய்யை மெய்யாக நினைத்தும், மெய்யைப் பொய்யாகவும் காண்கிறவர்கள், உண்மையை ஒரு போதும் அடைகிறதில்லை; ஆனால் பயனற்ற இச்சைகளைப் பின் பற்றுகின்றனர்.

12. மெய்யை மெய்யாகவும் பொய்யைப் பொய்யாகவும் அறிகிறவர்கள், உண்மையை அடைகின்றனர்; உண்மையான விருப்பங்களைப் பின்பற்றுகின்றனர்.

13. உலைந்த கூரையுள்ள வீட்டினூடே மழை பிரவேசிக்கிறதுபோல, இச்சையானது ஆலோசனை யற்ற மனசினூடே பிரவேசிக்கின்றது.

14. நன்றாய் வேயப்பெற்ற கூரையையுடைய வீட்டில் மழை பிரவேசியாததுபோல, நன்றாய் ஆலோசிக்கும் மனத்தினூடே இச்சை பிரவேசிக்க மாட்டாது.

15. தீமை புரிபவன், இவ் வுலகத்தில் துக்கப்படுகிறவன், மறு உலகத்தில் துக்கப்படுகிறான்; இரண்டிலும் துக்கம் அடைகிறான். தன் சொந்தக் கிரியையின் தீமையைக் காணும்பொழுது அவன் துக்கப்படுகிறான், கஷ்டப்படுகிறான்.

16. நல்லொழுக்கமுடையவன், இவ் வுலகத்தில் இன்பம் அடைகிறான், மறு உலகத்தில் இன்பம் அடைகிறான், இரண்டிலும் இன்ப முறுகிறான். தன் சொந்தக் கிரியையின் தூய்மையைத் தான் காணும் பொழுது, அவன் இன்பமடைகிறான், ஆனந்திக்கிறான்.

17. தீமை செய்கிறவன் இவ் வுலகத்தில் கஷ்டமடைகிறான், மறு உலகத்தில் கஷ்டமடைகிறான்: இரண்டிலும் கஷ்டமடைகிறான். அவன் தான் செய்துள்ள தீமையைப் பற்றி நினைக்கும் பொழுது கஷ்டம் அடைகிறான், தீ நெறியிற் செல்லும் பொழுது அதிகமாய்க் கஷ்டமடைகிறான்.

18. நல்லொழுக்கமுடையவன் இவ் வுலகத்தில் சந்தோஷமுள்ளவனாயிருக்கிறான், மறு உலகத்தில் சந்தோஷமுள்ளவனாயிருக்கிறான், அவன் தான் செய்துள்ள நன்மையைப்பற்றி நினைக்கும் பொழுது சந்தோஷமுள்ளவனாயிருக்கிறான், நன்னெறியிற் செல்லும் பொழுது அதனினும் அதிக சந்தோஷமுள்ளவனாயிருக்கிறான்.

19. யோசனையில்லாதவன் (தரும சாஸ்திரத்தில்) பெரும் பாகத்தை மனப்பாடமாகச் சொல்லியும் அதனைச் செய்யாவிடில், குரு ஸ்தானத்தின் உரிமை அடையான். பிறருடைய பசுக்களை எண்ணிக்கை இடுகிற இடையனைப் போலே தான் இருக்கின்றனன்.

20. தருமப் பிரமாணத்தைப் பின் பற்றுகிறவன், அதிற் சிறிது பாகத்தை மாத்திரம் மனப்பாடம் சொல்லினும், இச்சை பகைமை மூடத்தனம் இவற்றைக் கைவிடில், அவன் உண்மை ஞானத்தையும் மன அமைதியையும் உடையவனாய், இவ் வுலகத்திலாவது எதிர் உலகத்திலாவது யாதொன்றையும் எதிர் பாராதவனாய், உள்ளவாறே குரு ஸ்தானத்துக்கு உரியவனா யிருக்கிறான்.

## II. கல்வி விஷயக் குறிப்புக்கள்.

134. சென்னைச் சர்வகலா சங்கம்--இச் சங்கத்தின் பரிபாலன சபையார் (Senate) 16-3-1925 மாலையில் கூடி, வினுவிடைகளுக்குப் பின், அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தையும் மற்ற விஷயங்களையும் ஆலோசிக்கத் தொடங்கி, மொத்தம் மூன்று நாள் பிற்பகல்களில் வேலை செய்தனர்; அப்பால், காரிய அட்டவணைப்படி இன்னும் பல விஷயங்கள் மீந்திருந்தும், அவற்றைக் கவனியாமல் கைவிட்டு, மூன்ரும் நாள் மாலையில் கூட்டங் குலைந்து போயினர். அறிவிலும் படிப்பிலும் சிறந்த சர்வகலா சங்கத்தாரின் கடமைப்பற்றே இவ்வாருயின், பொது ஜனங்களை எவரே பழிக்கலாகும்! 'சம்பளமில்லாத வேலை சளபளா' என்பது இதனுல் துலங்குகின்றது. முதல் நாளிருந்த ஊக்கமும் உற்சாகமும் பொறுமையும் மறு நாளில்லை; மூன்ரு நாளிலே, கூடினவர் சிலராயும், அவர் தம் கண்களும் கடியாரத்தின் மீதுமா யிருந்து, குறித்த வேலைகளை முடிக்காமல், சந்தைக் கூட்டம்போல் குலைந்து போயினர். இம் மூன்று நாள் நடபடிக்கைகளில் ருசிகரமான சிலவற்றை மட்டும் சுருக்கிக் கூறுவோம்:-1. உப அத்தியக்ஷ சென்னும் வைஸ் சான்ஸலரின் சம்பளம், மாதம் ரூ. 2500 இன்றி ரூ. இரண்டாயிரமாகக் குறைக்கப்பட்டது. 2. இந்தியா கவர்ன்மெண்டார் நன்கொடை யளித்த பணத்தைக் கொண்டு, பத்து லக்ஷம் ரூபாவில் ஒரு பெரிய புஸ்தக சாலையும் வித்தியா மண்டபமும் கட்டுவதென்று தீர்மானமாயிற்று. 3. வித்தியார்த்திகளை யெல்லாம் சில காலம் கட்டாயப்படுத்தி இராணுவ மறத் தொழிலிற் பழக்க வேண்டு மென்னும் பிரேரணை தோற்றுப்போய், மறப் பயிற்சியை விரும்பிவேண்டுவோர்க்கு மட்டும் தக்க சாதனங்களும் உதவிகளும் அளிப்பதாகத் தீர்மானமாயிற்று. 5. சர்வகலா சங்கத்தின் முக்கிய அங்கத்தினரும் பட்டதாரிகளும் பட்டப்பரிசளிப்புக் காலத்தில் தரித்துக்கொள்ளும் விசேஷமான ஆடைகள், விதேசித் துணிகளாலன்றிச் சுதேசிக் கதர்த் துணியால் செய்தனவாயிருக்கலா மென்று தீர்மானிக்கப்பட்டது. 5. சர்வகலா சங்கத்தின் ஆஸ்தியையும் வரவு செலவுகளையும் ஆராய்ந்து நிருணயித்துத் தக்கபடி ஒழுங்கு செய்ய ஒரு கமிற்றி ஏற்படுத்தப்பட்டது. 6. கேட்ட கேள்விகளுக்குச் சங்கத்தாரளித்த பதில்களாலும், தமிழ் அகராதியைப் பற்றிக் கொண்டுவரப்பட்ட பிரேரணையினுலும், அதைப் பற்றிய ஊழல்கள் பல வெளிப்

பட்டனவாயினும், அவ் வேலையை வீண் செலவின்றிச் சுருக்கி முடிக்கவேண்டுமென்ற பிரேரணை தோற்றுப் போயிற்று. 7. தாய் மொழிகளில் கல்வி போதனை முறைகளை நிருணயிக்கும் கழகங்களிலே ஆங்கில மறியாத் தனி மொழிப் பண்டிதர்களைவிட, தாய் மொழிப் பயிற்சியும் மேனாட்டுக் கல்விப் பயிற்சியும் ஒருங்கே பெற்றுப் பட்டம் பெற்ற மேதாவிகளின் விபாபகமே மேலிட்டிருக்கவேண்டும் என்ற பிரேரணையும்; 8. பாடப் புஸ்தகங்களை நியமிப்பதில், இந்திய அச்சுப் பிரசுராலயங்களின் முன்னேற்றத்தைக் கவனிக்கவேண்டுமென்ற பிரேரணையும், வித்தியா கழகத்தார் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டன. 9 வித்தியார்த்திகள் பி. ஏ. பட்டம் பெறுமுன் விவாகஞ் செய்துகொண்டு கிரகஸ்தர்களாகக் கூடாதென்ற பிரேரணை தோற்றுப் போயிற்று. 10. ஆந்திர தேசத்திலே ஒரு பிரத்தியேகமான புதிய சர்வ கலாசாலை ஏற்படுத்துவதென்று தீர்மானமாயிற்று.

## II. சில்லறைக் கலம்பகம்.

135. மண் புழு (Earthworm)வின் அதிசய உழைப்பு.--மேல் ஆபிரிக்காவிலே, யோருபாலாண்டென்னும் இடத்திற் செய்த பரிசோதனைகளால், ஓர் ஏக்கர் நிலத்தில் இரண்டு லக்ஷம் மண் புழுக்கள் வரை இருக்கின்றனவென்றும்; அவை, ஆண்டுதோறும் ஒரு சதுர மைல் பரப்பிலே 62,000 டன் பளுவுள்ள மண்ணைப் புரட்டி வெளித்தள்ளுகின்றன என்றும்; இவ்வண்ணமாக, முப்பதாண்டுகளிலே, பூமியில் இரண்டடி ஆழத்துக்குட்பட்ட மண் முழுதும் மண் புழுக்களால் உழுது புரட்டப்பட்டுக் காற்றையும் வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் அடைந்து, நன்றாக்கப் படுகிற தென்றும் துலங்கியிருக்கின்றது. மண் புழுக்கள் ஸன்னமா யுழுத தூளிகளையே உழவர் மோட்டாவா யுழுகின்றனர்.

136. அமெரிக்காவைக்கண்டு பிடித்தவர் யார்? புதுவுலகம் என்னும் அமெரிக்கா கண்டத்தை கிறிஸ்தோபர் கொலம்பஸ் என்பவர் கி. பி. 1492-ம் ஆண்டிலே கண்டு பிடித்தாரென்பது பொது நம்பிக்கை. இது தவறென்றும் கொலம்பஸுக்கு ஐந்நூறாண்டுகளுக்கு முன்பு கி. பி. பத்தாவது நூற்றாண்டில் தானே, நார்வேயி லிருந்து படகேறிச் சென்ற வைக்கிங்ஸ் என்னும் மாலுமி வீரர்கள் அமெரிக்காவை அடைந்தன ரென்றும்; அவர்களைக் குறிக்கும் சின்

னங்கள் சில, இப்பொழுது அங்கே யகப்பட்டு, இதை ருசுப்படுத்துகின்றன வென்றும் கூறுகின்றனர். அவர் களுக்கும் மிகப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னர், இந்திய திராவிடர்கள் தென் அமெரிக்கா வரைச் சென்றிருந்தன ரென்னும் கூற்று, இன்னும் தக்க ஆதார பூர்வமாக நிலை நாட்டப் பெறவில்லை.

137. கௌதம புத்தர் பிறப்பிடம்....கபில வாஸ்துவின் அரசனும், சாக்கியர் தலைவனுமான சுத்தோதனனது மனைவி மாயாதேவி, பிள்ளைப் பேற்றை எதிர் நோக்கித் தன் கணவ னாரை விட்டுத் தான் பிறந்த ஊர் செல்லும் வழியிலே, உலும்பினி என்னும் சோலையிலே, கௌதம புத்தரை யீன் றனள்; அவ்வண்ணம் நேர்ந்த அகாலமான பிரசவத்தினுல், ஏழா நாள் உயிர் துறந்தனள் என்பது, ஆராய்ச்சிக்காரர் துணிவு. இந்த உலும்பினிச் சோலை, இக் காலத்தில் ரும் மிண்டி என்றும் லும்பினி என்றும் வழங்குகின்றது. இது நேபாலத்திலே யிருக்கிறது, உஸ்கா பஜார் என்னும் இடத்திலிருந்து பல்லக்கேறி எட்டு மணி நேரம் பிரயாணஞ் செய்து, அப்பால் யானை யேறிச் சென்றால், இவ்விடத்தை யடையலாகும். இப்பொழுது இது, சுமார் நான்கு ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள ஒரு பெரிய மேடாயிருக்கிறது. அசோக சக்கரவர்த்தி இவ்விடத்தைச் சென்று தரிசித்து, இதைக் குறிப்பிக்கும் ஒரு சாஸன ஸ்தம்பத்தையும் நாட்டியிருக் கிறார் அந்த அசோக ஸ்தம்பத்தின் அருகே இப்பொழுது ஒரு கோயிலுமிருக்கிறது— மா.

138. விநோதமான ஏரிகள்.-பண்டைக் காலத்திலே பாற் கடல் முதலாகிய ஏழு கடல்கள், பொன் வெள்ளி மலைகள் முதலிய மிக விந்தையான விஷயங்கள் இருந்தனவென்று, புராணங்கள் கூறும். அவை ஒன்றும் இக்காலத்தில் நமது கண்களுக்குத் தட்டுப்படுவதில்லை. ஆயினும் இக்காலத்தில் எரி மலைகள் கல்லாறுகள் எண்ணெய் ஊற்றுக்கள் போன்ற வேறு சில மிகவும் விந்தையான விஷயங்கள் காணப்படு கின்றன.

மேற்கு இந்தீஸ் (West Indies) என்று சொல்லப் படும் தீவுகளுள் ட்ரினிடாட் (Trinidad) என்னுமிடத்தில் ஓர் ஆச்சரியகரமான ஏரி இருக்கிறது. அந்த ஏரியில் நீர் கிடையாது; அதற்குப் பதிலாக பிச் (Pitch) என்னும் கீல் காணப்படுகிறது. அந்த ஏரியின் விஸ்தீரணம் சுமார் நூறு ஏக்கர் இருக்கும். அதனின்று வருஷா வருஷம் இரண்டு லக்ஷம் டன் நிறையுள்ள பிச் (Asphalt) ஏற்றுமதியா

கிறது, அந்த ஏரியிலுள்ள பிச் சானது பார்வைக்குச் சேறுபோல் காணப்படினும், அதன் மீது சாதாரணமாக நடக்கலாம்; அது விலகி நமது கால் உள்ளே இறங்காது. பகலில் தோண்டிப் பிச் எடுபட்டதால் பள்ளமான இடங்களெல்லாம் இரவில் மூடிக் கொள்கின்றன. மறுநாள் காலையில் ஏரி பள்ளம் மேடின்றி ஒரே மட்டமாகவே காண்கின்றது. ஆயினும், வருஷா வருஷம் ஏராளமாக வெளியே பிச் எடுக்கப்படுவதால், ஏரியின் மட்டம் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வருகிறது.

இன்னொரு விநோத ஏரியானது பிரிடிஷ் கிழ் ஆப்பிரிக்காவில், கெநியா (Kenya) என்னும் குடியேற்ற நாட்டில் காணப்படும் மகதி ஏரி (Magadi Lake). அது பத்து மைல் நீளமும் இரண்டு மூன்று மைல் அகலமும் உள்ளது. அதில் நீர் கிடையாது; ஸோடா (Soda) என்னும் ஒருவகை உப்புத்தான் அதன் நீராகும். மேலே இருந்து அந்த ஏரியை நோக்கினால், நீளமாக ஒரு வெண்போர்வையை விரித்தது போலிருக்கும். அதைத் துளைத்துத் தோண்டி எவ்வளவு ஆழம் இருக்கிறது என்று பார்க்க முயன்ற முயற்சிகள் ஒன்றும் பயன்படவில்லை. தோண்டத்தோண்ட மேன்மேலும் புதிது புதிதாக அவ்விடத்தில் ஸோடா உப்புப் படிந்து வருவதால், அந்த ஏரியை ஸோடா நிறைந்த அக்ஷயபாத்திர மென்றே சொல்லலாம். அதிலிருந்து வருஷா வருஷம் சுமார் ஒன்றரை லக்ஷம் டன் ஸோடா ஏற்றுமதியாகிறது.

இவைபோல இன்னும் வேறு சில ஏரிகள் இருக்கின்றன. நியூ ஸீலண்டு (New Zealand) என்னும் தீவுக்குப் பக்கத்திலுள்ள வெள்ளைத் தீவு எனப்படும் (White Island) தீவில், ஓர் ஏரியில், கந்தகத் திராவகம் கலந்த நீர் காணப்படுகிறது. அந்த நீரிலிருந்து உண்டாகும் காற்றானது உயிருக்குச் சேதத்தை விளைக்கவல்லது. அந்த ஏரி சுமார் அறுபது ஏக்கர் விஸ்தீர்ணமுள்ளது. —அ,

உலகத்திலே பெரிய பாலம்.—அமெரிக்காவிலுள்ள மிஸிஸிபி நதியின் மீது பெரிய பாலமொன்று கட்டப்போகிறார்கள்; அதன் நீளம் 4 மைல்; அதற்காகும் செலவு 28 லட்சம் பவுன்; அந்தப் பாலத்தின் மத்தியில், 1500 அடி தூரத்திலே, பாலத்தைத் தூக்கவும் இறக்கவும் வசதியிருக்கும்; பெரிய கப்பல்கள் பாலத்திற்கு அடியில் போவதற்காகவே இவ் வேற்பாடு—லோ.

**ஜமக்காளங்களைப் புதுப்பிக்க.**—சிறிது அம்மோனியா (Ammonia) திராவகம் கலந்த வெந்நீரால் அவற்றை நன்கு துடைக்கவும்.

**துணிகளை வெளுப்பாக்க.**—நன்றாகத் துவைத்த பின்பு, கடைசியாய் அலசும் நீரில் சிறிது வெண்காரத்தைக் (Borax) கரைத்து அலசவும். இப்படிச் செய்து இஸ்திரி போடுவது, கைக் குட்டைகளுக்குக் கஞ்சிபோடுவதைவிட மேலானது.

**இரும்படுப்பைத் துலக்க.**—சாதாரணமாய் உபயோகிக்கும் கரித்தூளைத் (Black Lead, Graphite) தனியாக உபயோகிக்காமல், சிறிது கற்பூரத்தைலத் (Turpentine) தோடு கலந்து உபயோகித்தால், அடுப்பும் பளபளப்பாகும் துருவும் வருது—அ.

**புஸ்தகம் துணி முதலியவற்றைக் காப்பாற்ற.**—பூச்சிகள் அரிக்காமல் நாம் சாதாரணமாய் "பூச்சி உண்டையை (Naphthalene Balls) உபயோகிக்கிறோம். அதைவிடச் சிறந்ததும் நாள் நிற்பதுமாகும் "பேதி உப்பு (Epsom Salt or Magnesium Sulphate) என்று, Dr மிட்செல் Dr. Mitchell) என்னும் ஓர் ஆஸ்திரேலிய ஹெல்த் ஆபீஸர் (Health Officer) கண்டு பிடித்திருக்கிறார். பேதி உப்பைப் பெட்டி அலமாரி முதலியவைகளில் தெளித்தால், கரப்பான் பூச்சி, (Cockroach) துணிப் பூச்சி (Silver-Fish) கிருமி ஒன்றும் நெருங்காவாம்—ரேகு.

---

## குசிகர் குட்டிக் கதைகள்

மூன்று பாகங்களில் 22 கதைகள்

மொத்தம் விலை ராப்பர் 1—8—0.

ஷை டக்ஸீன் 1—8—0.

பஞ்சாமிர்தம் ஆபீஸ்,

மயிலாப்பூர், சென்னை.

# நாகரிக சமூகவாழ்க்கைக் குறிப்புக்கள்



காத்மா காந்தியைச் சென்னை நகர பரிபாலன சபையார் உபசரித்த போது, மற்ற நகரங்களில் காணப் படாத ஓர் அசங்கியமான வழக்கத் தைச் சென்னையிலேதான் முதல் முதல் தான் கண்டு வருந்தியதாக அவர் சொன்னார்: அதாவது, வீதியின் பக்கங்களில் மல ஜலபாதைகள் கழித்து அசுத்தஞ் செய்வதே. அநாகரிகமான இவ்வழக்கத்தைப் பட்டணங்களில் மாத்திர மில்லை, கிராமங்களிலும் காண லாம். அப்படிப்பட்ட அசங்கியத்தைக் காணும் தோறும், ஒரு விளக்குமாற்றை யெடுத்துக் கொண்டு தானே சுத்தஞ் செய்ய விரும்புவதாகவும்; மேல் நாட்டார் நாகரிகத் தையும் பழக்க வழக்கங்களையும் தான் வெறுத்துப் பழித்த போதிலும், அவர்களிடமிருந்து இந்தியர் கற்றுக் கொள்ளுதற் குரிய சுகாதார முறைகள் பல உண்டென் றும், காந்தி கூறினார். இந்த விஷயத்தில், படியாத பாமர ஜனங்கள் மாத்திரமன்று,படித்துப் பட்டங்கள் பெற்றுள்ள அறிவாளர்களில் சிலரும் குற்றவாளிகளே என்பது, அநுபவ சித்தாந்தம். சென்னை நகரத்திலேயே, நாகரிக உடைகள் உடுத்த படிப்பாளிகள் சிலர், போலீஸ் காரன் வருகிறானா என்று அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டு, ரஸ்தா வோரத்திலே பட்டப் பகலில் உட்கார்ந்து அசங்கியஞ் செய்வதைப் பார்க்கலாம்; இராக் காலத்திலோ, இது சகஜம். வீட்டுக் கொல்லைப் புறமுள்ள கக்கூஸை விட்டு விட்டு, குழந்தைகளைக் கொண்டு வந்து வீட்டுவாசலில் ரஸ்தாவோரத்தில் அசங்கியஞ் செய்ய விடுவதும், நாடோடி வழக்கமாயிருக்கிறது. சென்னைக் கடற்கரை யோரத்திலும்; ஜனங்கள் நற்காற்றை யுட்கொண்டு, உல்லாசமாய்ப் பொழுது போக்குதற் கென்றே ஏற்படுத்தி

மிக்க பணம் செலவழித்துப் பாமரிக்கப் பட்டு வரும் நடைபாதைகளிலுமே, ஜனங்கள் அசங்கியம் செய்கின்றனரே! சென்னை நகரபரிபாலன சபையின் கமிஷனராயிருந்த மலோனி துரையென்பவர், இந்தியர் எல்லோரும் ஒரே சமூகத்தினரா என்பதைப் பற்றி வேடிக்கையாய் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்தபொழுது 'காசி முதல் கன்னியாகுமரி வரை, ஒளிவு மறைவின்றி, நினைத்த மாத்திரத்தில் நினைத்த விடத்தில் அசங்கியஞ் செய்யும் வழக்கத்தில், இந்தியரெல்லோரும் ஒரே மாதிரிதான்' என்று பரிகசித்தார். இந்த ஏச்சு முழுதும் பொய் யென்று சொல்ல முடியாது. இதை மனதில் வைத்து, இந்த வழக்கத்தை எல்லோரும் நிறுத்த முயலவேண்டும்.

2. இராசாங்க அதிகாரமும் தற்சுதந்திரமும்—பின் வருவது, தாமஸ் ஹக்ஸ்லி என்ற, பெரும் புகழ் பெற்ற ஆங்கிலேய மேதாவி எழுதியது ; நாகரிக ஜனசமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் கவனிக்கத் தக்கது:—

"நான் விஷக்காற்றை உட்கொண்டு விஷநோய்களை (Typhoid, Diphtheria) அடையும்படி, என் அண்டை வீட்டுக் காரன் தன் வீட்டுச் சாக்கடைகளை அசுத்தமாய் வைத்திருப்பது, நான் ஜீவனோடிருப்பதைத் தடுத்து, ஒரு துப்பாக்கியைக் கொண்டு அவன் என்னைச் சுடுகிறேனென்று பயமுறுத்துவது போலவே யாகும் ; வைசூரி நோய் எளிதில் பரவும்படி, அவன் தன் குழந்தைகளை அம்மை குத்தாமல் வைத்திருப்பது, விஷமிட்ட பக்ஷணத்தை என் குழந்தைகள் கண்டெடுத்துத் தின்னும்படி, அவன் வழியில வைத்திருப்பது போலவே யாகும்; தாமே வேலை செய்து சம்பாதித்துப் பிழைக்கும்படி தன் பிள்ளைகளைப் படிப்பிக்காமல் அவன் மூடர்களாய் வைத்திருப்பது, நான் சம்பாதித்ததைக் கொண்டு நான் சுகமாய் வாழமுடியாமல், ஜெயில்களையும் அன்னதான சத்திரங்களையும் வைத்துப் போஷித்தற்கு வேண்டிய அதிக வரிப்பணத்தை நான் கொடுக்கும்படி, அவன் என்னைக் கட்டுப்படுத்துவது போலவே யாகும். ஒரு ஜன சமூகத்திலே நாகரிகம் எவ்வளவு சிறப்படைந்திருக்கிறதோ, அவ்வளவுக்கு, அந்த சமூகத்திலே ஒருவன் செயல் மற்றவர்களை யெல்லாம் பாதிக்கும் ; ஒருவன் தவறு செய்தால், அதனால் விளையுந் தீங்குகளினின்றும் மற்றவர்கள் தப்பித்துக் கொள்வது சிரமமாகும். இதனால், போலீஸ் வேலை மாத்திரம் செய்து, சண்டைகள் களவுகளைத் தடுப்பதுதான்

அரசாங்கத்தார் கடமை என்று கூறுவோருங் கூட, பொது நலத்தையும் பொது ஜன சுதந்திரங்களையும் பாதிக்கும் விஷயங்களிலே அரசாங்கத்தார் தலையிட்டு, ஜனங்களின் நடத்தையை ஒழுங்கு படுத்தத் தான் வேண்டுமென்று, ஒப்புக் கொள்ளாமல் தீராது.”

(தொடரும்)

# இந்திய தேசியக் கல்வி

(ஸ்ரீஜத் லாலா லஜபதிராய்)

ஸ்ரீ. அ. மாதவையர், B.A.,
மொழி பெயர்த்தமைத் தெழுதியது.

## முகவுரை.




லாலா லஜபதிராய் அவர்கள் ‘ இந்தியாவில் தேசியக் கல்விப் பயிற்சி விஷயப் பிரசினை” The Problem of National Education in India) என்ற பெயரால் இங்கிலீஷில் எழுதியுள்ள சிறந்த நூலைச் சில நாள்களுக்கு முன் நான் முதன் முதல் வாசித்த பொழுது, கல்விப் பயிற்சி முறைகளில் சிற்றறிவும் குறுகிய அநுபவமுமே யுள்ள என் கொள்கைகள், பேரறிவும் அகன்றாழ்ந்த அநுபவமும் வாய்ந்தவரான அவர் கொள்கைகளோடு பல முகங்களில் ஒத்திருப்பதை அறிந்து மனமகிழ்ந்தேன். அப்பால், ‘தேசியக் கல்வி’ விஷயத்தில் தெளிவான உறுதியான அடிப்படை அறிவு நமது பொதுஜனங்களுக்குள் இல்லாமையையும், படிப்புள்ளவர் தேசபக்தர் என்று விளங்கும் பலர்க்குள்ளுமே இவ்விஷயத்தில் விபரீத ஞானமே மிகுந்திருப்பதையும் தெரிந்து விசனப்

பட்டுக்கொண் டிருந்தவனதலின், என் அபிப்பிராயங்களை எலாது புறக்கணிப்பவர் தாமும், உலகப் பிரசித்திபெற்ற உத்தம தேசபக்தரும் பேரறிவாளருமான லாலாஜியின் அபிப்பிராயங்களை எடுத்தோதினல், அவ் வண்ணம் அலக்ஷியஞ் செய்யத் துணியார் என்றெண்ணி, ஆங்கிலம் அறியாத் தமிழ்மக்களுக்கு, இவ் விஷயத்தில் அவர் கொள்கைகளை எடுத்துக் கூறுதல் நற்பயனை விளைக்க வல்ல தேசத் தொண்டாகுமெனக் கருதி, அவ் வாங்கில நூலைத் தமிழில் மொழிபெயர்க்க லாலாஜியின் அநுமதியை வேண்டிப் பெற்றேன். இவ்வாறு தன் நூலைத் தமிழில் மொழி பெயர்க்க அநுமதி யளித்ததற்கு, யானும் தமிழுலகமும் லாலாஜிக்குக் கடமைப்பட்டுள்ளோம்.

> " தாயின் புறவ துலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார் "

என்பது பொய்யா மொழி.

ஆங்கிலத்திலுள்ள லாலாஜியின் மூலநூல் மிக விரிவாயும் (256 பக்கங்கள் அடங்கியது), பிறதேசங்களில் வழங்கும் கல்வி போதன முறைகளிலும் கல்வி புகட்டுங் கலையிலும் பழக்கமில்லாதவர்க்குச் சில விடங்களில் எளிதிற் பொருள் விளங்காததாயு மிருத்தலால், அந் நூலில் உள்ளன யாவற்றையும் உள்ளபடியே மொழிபெயர்த் தெழுதுதல், மிகப் பயன்படாதென்று தோன்றுகின்றது. இதனல், மூல நூலில் சில பாகங்களைப் பொருந்த மொழி பெயர்த்தும், சிலவற்றைச் சுருங்கத் தொகுத்தும், சில வற்றை விளங்க விரித்துரைத்தும், சிலவற்றை அறவே நீக்கியும், காரண காரிய வியவகாரத் தொடர்ச்சியும் விஷயங்களின் கோவையும் சிதைவுருமல் மாத்திரம் கவனித்துக்கொண்டு, சாமானியத் தமிழ் மக்களுக் கேற்றபடி அமைத்தெழுதவே தீர்மானித்திருக்கிறேன். மூலத்தில் லாலாஜி கூறும் அபிப்பிராயத்தோடு பொருந்தாது முரணும் யாதொன்றையேனும் யான் கூற நேர்ந்தால், அவ்விடத்தில் அதைத் துலக்கிக் குறிப்பது என் கடமையாகும். இத் தன்மையனவான விலக்கிடங்கள் நீங்க, இம் மொழிபெயர்ப்பு முழுதும் லாலாஜியின் கூற்றெனவே கொள்ளலாம். பத்திரிகையின் இந்தக் காசிலேயே மொழி பெயர்ப்பைத் தொடங்கிவிட்டால், அடுத்து வரும் இரண்டாம் ஆண்டு முதல் (அஃதாவது, அடுத்த சித்திரை மாதக் காசு முதல்) சந்தாவைப் புதிதாய்த் தொடங்குவார்க்கு முதற் பகுதி இல்லாமற்போ மாதலின், அடுத்த

காசு முதல் மொழி பெயர்ப்பு ஒழுங்காய்ப் பிரசுரமாகும், லாலாஜியின் ஆங்கில நூல் 12 தலையங்கங்களில் அமைந்திருப்பதால், அடுத்த ஆண்டுக்குரிய பத்திரிகையின் 12 சஞ்சிகைகளில் அந்த நூலைப் பிரசுரித்து முடிக்கலாமென்றெண்ணுகிறேன்.

(தொடரும்.)

## விகட விநோதம்.

I. பிரயாணி—வில்லிவாக்கத்துக்குப் போகும் கடைசி வண்டிக்கு ஒரு டிக்கட் கொடும்.

டிக்கட் கோடுப்பவர்—அது புறப்படும் வரை நீர் உயிரோ டிருப்பீரா?

---

II. வீட்டில் குடியிருப்பவன்—17 பெருச்சாளிகளும், 43 தேள்களும் எனக்கு அவசரமாய் வேண்டும்.

சிநேகிதன்—ஏன்? எதற்காக?

வீ. கு—இந்த வீட்டுக்குக் குடி வந்தபோது, எப்பொழுதுமுள்ள ஸ்திதியிலேயே இதைவிட்டுப் போவதாக ஒப்பந்தம். நானோ, மாற்றிப் போகிறேன். இந்த 3 மாதங்களில் நான் கொன்ற பெருச்சாளிகளையும் தேள்களையும் பழையபடி, வீட்டுக்குச் சொந்தக்காரனுக்கு, ஒப்படைக்க வேண்டும்.

---

III. பாட்டி.—அடே! நான் குளிச்சாச்சு; கிட்ட வாராதே; தள்ளிப்போடா; புண்ணியமுண்டு உனக்கு! நீ பறையனே, கிட்ட வாராதே!

குதிரைக்காரன்—எங்கே போகிறாய், ஆய்ச்சி?

பாட்டி—மஹாத்மா காந்தியை தரிசனம் பண்ணப் போகிறேன்.

# கம்ப ராமாயண இன்கவித் திரட்டு

(965-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ.வே.ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C. வேள்ளக்கால்

[தேவர் மனிதர் மிருகங்கள் முதலிய உயிர்த்தொகைகள் இராக்கதர் தொகைக்கு உறையிடவும் போதா. இந் நகர வித்தாரம் அபாரமானது. இதன் ஒரு தெருவிலிருந்து மற்றொரு தெருவுக்கும் போதல், ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்குப் போதல் போலாம்.]

யான், இராம பிரானுக்கு இலங்கைச் சேனை அளவைத் திரும்பிச் சென்று செப்பும்போது, மல் வீரர் படை பெரிதென்பேனோ, வாள்வீரர் படை பெரிதென்பேனோ, விற்படை பெரிதென்பேனோ, எப் படை பெரிதென்பேன் என்னும் இவை போல்வன பலவும் எண்ணி, இனி இராக்காலம் சமீபிப்பதால் இரவிற் சஞ்சரிப் போராகிய இராக்கதர் இங்கு வர நேரினும் நேரும் என்று, அவர் அறியாவாறு அநுமான் தன் உடலைச் சுருக்கி மறைவானான். சூரியனும் தன் ஒளியை ஒடுக்கி மறைந்தான்.

இருள் இராவணனுடைய * பாவம் போல வளர்ந்து அவன் பழிபோலப் பரந்தது. செவ்வந்தி வானமும் காரிருளும் நெருப்பும் புகையும் நிகர்த்தன.

இராக்கதர், இராவணன் ஏவலால், 'இந்திரன் சந்திரன் இயமன் முதலியோருடைய உலகங்களுக்குச் செலலுற்றனர். இராவணனுக்குப் பணிவிடை புரியத், தேவமாதர் வித்தியாதர மடவர் இயக்க மகளிர் நாக கன்னியர் ஆகிய இவர்கள் விண் வழியே விரைந்து சென்றனர். அவ்வாறே தேவரும் அசுரரும் நாகரும் இயக்கரும் வித்தியதாரும் வேறு தேவ கணத்தினருமாகக் குற்றேவல் செய்யக் கூட்டங் கூட்டமாகச் செல்வோர் 'தாமதமாய் விட்டது, இராவணன் கோபிப்பான்' என்று தலை மாலையும் கழுத்து மாலையும் மேலாடையும் சரிந்து விழ விரைந்தோடினார்கள்.

---

* பாவம் கருமை யென்பதும் தருமம் வெண்மை யென்பதும் கவிமரபு.

இராவணன் முதலிய இராக்கதர்களின் பாவமாகிய கோடை காய்ந்து வாட்டியதனால், ஈரப் பசையற உலர்ந்திருந்த தருமமாகிய பயிர், அநுமானாகிய மழை வரப் பெற்றதனால், முளைத்தெழுதல் போலச் சந்திரன் உதித்தெழுந்தது.

கீழ்த்திசைக் கிறைவனாகிய இந்திரனுக்குச் சத்துருவாகிய இராவணன், அநுமான் வந்ததனால், வாழ்வற்றான், இந்திரன் வாழ்வுற்றான் என்ற மகிழ்ச்சியால் கீழ்த்திசையாகிய பெண்ணின் முகம் பொலிவது போலச், சந்திரன் பொலிந்தது.

இராவணனுக்கு அடங்கி யொடுங்கி ஒதுங்கிப் பதுங்கியிருந்த இந்திரன், இனிப் பகை ஒழிந்த தென்று பயம் நீங்கித் தனக் குரிய கிழக் திசையினின்று கெம்பீரமாக வெளியே புறப்பட, அவன் சாமரைகள் போலக் கடலலைகள் எழுந்து விழுந்து விளங்க, அவன் கொற்ற வெண்குடை போலச் சந்திரன் பொலிந்தது.

ஆகாயமாகிய புருடன் சந்திரனாகிய வெள்ளிக் குடத்தினால் பாற்கடலின் பாலை முகந்து பூமிமேற் பொழிந்தாற் போல வெண்ணிலா எங்கும் பரவியது.

ஆகாயம், காமதேனு வென்ற வானுலகப் பசுவாகச், சந்திரன் அப்பசுவின் பால் மடியாக, அம் மடியினின்று சுரந்து வழிந்து பரந்த பாற்பரப்புப் போல நிலாப் பரப்புத் தோன்றியது.

17\. எண் உடை அனுமன்மேல் இழிந்த பூமழை,
மண் இடை வீழ்கில; மறித்தும் போகில;
அண்ணல்வான் அரக்கனை அஞ்சி ஆய்கதிர்
விண் இடைத் தங்கின போன்ற, மீனெலாம்.

இ-ள். நட்சத்திரங்க ளெல்லாம், அநுமான் மீது (வானவர் மகிழ்ந்து வாழ்த்தி வாரி இறைக்க) விழுந்த மலர் மழை, இராவணனுக்குப் பயந்து மண்ணில் வீழாவாய்த் திரும்பவும் (மேல் நோக்கி விண்ணில்) போகாவாய் (இடையே) அந்தரத்திலே தங்கியவற்றைப் போன்றன.

எண்—ஆலோசனை; அறிவு; மதிப்பு. இழிந்த—இறங்கிய. மறித்தும்—திரும்பவும். அண்ணல்—பெருமை. ஆய்தல்—ஆராய்தல், நுணுகுதல். கதிர்—சூரியசந்திரர்; கிரணம். ஆய் கதிர் விண்—ஆராய்தற் குரிய சூரிய சந்திரர் (வழங்கும்) வானம்; நுணுகிய கிரணங்கள் (பரத்தலை) உடைய வானம்.

"தேவர்களின் சம்மந்தமான அசேதனங்களும் (அறிவில்லாப் பொருள்களும்) இராவணனிடத்து அஞ்சுகின்றன வென, அவனது அதிபயங்கரமான தன்மை இங்கு வெளியாம்."

அவ் இரவில் மல்லிகை யரும்புகள் மலர; அவற்றில் வண்டுகள் தேனுண்ண மொய்த்தல், பகைப் பொருள்களாகிய இருளும் நிலவும் பல பல சிறு சிறு பிரிவுகளாய் ஒன்றோடொன்று நெருங்கிச் சண்டை யிடுதலை ஒத்திருந்தது.

நிலா இலங்கை முழுதும் பரவியது அந் நகருக்கு வெள்ளை வஸ்திரங் கொண்டு உறையிட்டது போன்றது.

18. இகழ்வரும் பெருங்குணத் திராமன் எய்ததோர்
பகழியின் செலவென, அநுமன் பற்றினால்,
அகழ்புகுந் தரண்புகுந் திலங்கை அன்னவன்
புகழ்புகுந் துலாயதோர் பொலிவும் போன்றதே.

இ-ள். இராமனது புகழ், (தனக்கு) அநுமான் (ஆதாரமாக அவ்) ஆதாரத்தினால், அவன் அம்பின் (தடையற்ற வேகமான) போக்குப்போல (இலங்கையைச் சூழ்ந்த கடலாகிய) அகழைத் தாண்டி மதிலையும் தாண்டி இலங்கை (எங்கும்) உலாவி (ப்பரவி) யதையும் ஒத்தது (அந்த நிலா)

இகழ்வு அரும்—இகழ்தல் (செய்தற்குரிய குற்றமொன்றும்) இல்லாத. [அருமை இன்மை குறித்தது. பகழி—அம்பு. செலவு—செல்லுதல், பற்று; ஆதாரம்—தாங்கும் இடம். அரண்—மதில். உலாவியது உலாயதென விகாரமாயிற்று. பொலிவு—அழகு; விளக்கம்.

இராமன் பகழியின் செலவென, அன்னவன் புகழ், அகழ் புகுந்து, அரண் புகுந்து, இலங்கை புகுந்து உலாயது போன்றது (நிலவு) என இயைக்க.

அநுமான் இலங்கை நகரத்துட் செல்லக் கருதித், தான் இருந்த பவளமலையினின்று புறப்பட்டுக், கடலே அகழியாகப் பெற்று வானத்துச்சிவரை வளர்ந்த மதிற் பக்கத்தில் வந்தான்.

19. கலங்கல்இல் சுடுங்கதிர்கள் மீதுகடி தேகா,
அலங்கல் அயில் வஞ்சகனை அஞ்சியெனின், அன்றால்;
இலங்கைமதில் இங்கிதனை ஏறல்அரி தென்றே
விலங்கி அகல் கின்றன விரைந்தென வியந்தான்.

இ-ள். சந்திர சூரியர்கள் இராவணனுக்குப் பயந்து (இலங்கைக்கு) மேலே செல்கின்றனவென்றால், (அப்பயம் அவ்வாறு செல்லாமைக்குக் காரணம்) அன்று; (வேறு யாது காரணமெனின்,) இந்த மதிலை ஏறுதல் ஏலாததென்றே (அக் கதிர்கள்) விலகி அப்பாற் செல்கின்றன. (என்க) என்று ஆச்சரியப்பட்டான். (அநுமான்).

கலங்கல் இல்—(கலங்கிய நீர் நிறமாறுதல் போல) நிறம் மாறுதல் இல்லாத. கடுமை—விரைவு. அலங்கல் அயில்—(வெற்றி மாலை (அணிந்த) வேல். அரிது—ஏலாதது (சங்க அகராதி).

இதன் முன் இப்படலம் உக—ம் கவியில் இம்மதிலொளி கண் கூசுவித்தலால் சூரியன் இலங்கைமேற் செல்லானென்ற வருணனையை இக்கவி நினைவுறுத்துகின்றது.

[அநுமான், இராவணன் ஆணையின்றி உட் செல்லார்க்கு இயமன் வாய் போன்ற மதில் வாசலைக் கண்டான். அது, மகாமேரு மலை ஊடறுத்து இடைவெளி செய்யப்பட்டது போன்றதென்றும், கடல் நீர் முழுதும் செல்லுவதற்கு இட்ட மதகையொத்ததென்றும், இராவணனை எதிர்க்க ஈரேழுலகத்தவரும் வந்தால், அவர்கள், சிலர் பின் சிலர் செல்லும் அவசியமின்றி, அனைவரும் ஒருமிக்கச் செல்லப் போதிய அகலமுடையதென்றும் எண்ணினான். அவன், இத்தனையென்று வரையறை செய்ய இயலாத பெருந்தொகையான வான விளக்குக்கள் இருளை விழுங்கி விளக்கஞ் செய்யப்பெற்று இயமனும் அஞ்சும்படியிருந்த அந்த வாயிலிலே, செம்பட்ட மயிரும் சினத்தீச் சுவாலிக்கும் செங்கண்களும் கோரப் பற்களும் கரிநிறமும் உடையராய்க் கொடிய பல ஆயுதங்கள் பூண்டவராய் எண்ணிலடங்காதவராயுள்ள இராக்கத வீரர் காவல் செய்து கொண்டிருத்தலைக் கண்டான். கண்டு எத்தேவர் எவ் அசுரர் வேறெவர்தாம் இக் காவலைக் கடக்கவல்லார் உளர்? ஒருவரும் இல்லை; யான் கருங்கடல் கடந்தது கடினமன்று; இந்தக் காவற் பெருங்கடலைக் கடப்பது தான் கடினம்: இக் காவலாளருடன் போர் தொடங்கினால், அது முடிய நாள் பல கழியும்; சீதாதேவியைத் தேடிக் காணுதற்கு இடையூறும்; இவ் வாயில்வழி உட்புகுதல் எளியதன்று; அன்றியும், 'இவ் வழியே இந் நகருட் பிரவேசிக்க' எனப் பகைவன் நியமித்திருக்கிற வழியே புகுதல் பலசாலிகளுக்குத் தகுதியன்று; ஆதலால், சூரி

யனும் தாண்டாத மதிலை வான் வழியாகக் கடந்து இந் நகரின் உள்ளே புகுவேனாக வென்று, அவ்வாயிலை விட்டு அம் மதிலின் வேறொரு பக்கம் சென்றான்.

அங்கே இலங்கைக்கு அதிதேவதையாய் அதனைக் காக்கும் இலங்கைமாதேவி, வான் வழிச் செல்லும் சூரியனைப் பற்றவரும் இராகு கேது வென்னும் பாம்புபோல, வான் வழிச் செல்லும் சோதிமானான அநுமானைப் பற்றுதற்கு வழி மறித்து நின்றாள். அவள், கூற்றுவனும் அஞ்சும் கோபமுடையாள். சந்திரனை இரண்டாகப் பிளந்து வைத்தாற் போன்ற வீரப் பற்களை யுடையாள்.

(தொடரும்.)

## மதுரைச் சரிதை

ஸ்ரீ.பி.தி. ஸ்ரீநிவாஸையங்கார், M.A., L.T., திருச்சிராப்பள்ளி




லகிலுள்ள நகரங்களிற் பல சிற்சில நூற்றாண்டுகளுக்கு அரசரது தலை நகரங்களாய்ப் பொலிந்து வாழ்ந்தன. மதுரை யம்பதியே பல்லாயிர மாண்டுகளுக்கு இடைவிடாமல் தலை நகராய் விளங்கின பெருமை உடைத்து. வைகை நதிக்கரையில் மருத நிலத்திலிருப்பதுமன்றி, ஒரு பக்கத்தில் முல்லை, குறிஞ்சி நிலங்களிலிருந்து வரும் வழியும், மற்றோர் புறத்தில் நெய்தல், பாலை நிலங்களிலிருந்து வரும் வழியும் கூடும் தாக்கிலிருப்பதால், தொன்றுதொட்டு வணிகம் ஓங்கி, உயர் நிலை பெற்றது மதுரை நகரம். பழங் கற் கருவிகளும், புதுக்கற் கருவிகளும் மதுரைக்கருகில் அகப்பட்டிருப்பதால், பன்னூறாயிர மாண்டுகளாய் மக்கள் இவ்வூரில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்று தெரிய வருகிறது. இரும்புக் கல்லை உருக்கி, இரும்பெடுத்துக்

கருவிகள் செய்யப் பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்தபோது பெரியகுளம், பழனி முதலிய இடங்களில் இரும்புக் கருவிகள் செய்தார்களென்றும், அவைகளை மதுரையில் வழங்கி வந்தார்களென்றும் ஊகிக்க அடையாளங்களுண்டு

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருடிகள் பார்த்த இருக்குவேத மந்திரங்களில் (சூரிய சந்திர வம்ச) அரசர்கள் முத்து மாலைகள் அணிந்ததாகவும், அவர் தேர்களை முத்துச் சிப்பியால் அலங்கரித்திருந்ததாகவும் சொல்லியிருக்கிறது. முத்துக் குளிப்பதென்பது மதுரை நாட்டுக் கடற்கரையிலன்றி வேறெங்குமில்லாததால், ஆரியா வர்த்தத்திற்கு மதுரையிலிருந்தே முத்தும், முத்துச்சிப்பியும் போயிருக்கவேண்டும். இவ்வளவு வணிகம் பெருக்கிருந்ததால், மதுரையில் அரசர் ஆட்சி செய்து இப் பெரும் வணிகத்தைப் பேணியிருக்கவேண்டும். இம் மன்னர் பாண்டிய



மதுரைப் புது மண்டபம்

குலத்தவராதல் வேண்டும். வேத மந்திரங்களைப் பார்ப்பது முடிவு பெற்றது மகாபாரதப் போர் நிகழ்வது முன்னம். அது 3500 வருஷங்களுக்கு முன் நடந்தது என்பது என் கொள்கை. அப் போரில் பாண்டியர் சேனையும் இருந்ததாகச் சொல்லும் பழஞ் செய்தியை நம்பாதிருப்பதற்குக் காரணம் ஒன்றுமில்லை. மகாபாரதப் போர் நிகழ்ந்து 500 வருஷங்கள் சென்ற பின்பு, வட நாட்டில் வடமொழி

இலக்கண ஆராய்ச்சி பெருகியது. அக்காலத்தில் அகத்திய கோத்திரத்தவர் ஒரு முனி தென்னாடு வந்து, பொதியில் மலையில் தவம் புரிந்துகொண்டு, பாண்டியர் பேருதவியால் நடந்த தமிழ்ச்சங்கத்துச் சிகாமணியாய்ப் பொலிந்து, தமிழிலக்கணம் ஒன்று ஏற்படுத்தினர். அந்நூல் இறந்தது. பிற்காலத்தில் இந்த அகத்தியத்தைத் திருப்பி எழுதினர் போலும்; அந்நூலும் இறந்தது. சிற்சில மேற்கோள்கள் மாத்திரம் அகப்பட்டிருக்கின்றன. அவை ஆரியமொழி கலக்காத பண்டையத் தமிழாகாமையால், பிற்காலத்தில் அகத்தியர் பெயரை வைத்து எழுதிய நூல் போலும்.

இற்றைக்கு 2500 வருஷங்களுக்கு முன் கௌதம புத்தன் இறந்த நாளில், விஜயசிம்மன் என்பான் ஒரு படையுடன் தாம்ரலிப்தி என்னும் ஊரில் கப்பலேறி, இலங்கை சேர்ந்து, தன் ஆட்சியை அங்கே நிலைநிறுத்தினன். அப்போது அத் தீவுக்குச் சிம்மளம் என்று பெயர் பிறந்தது. அப்போது அவன் பின் வந்த வீரர்களுக்கு மனைவிகளில்லாமலிருந்ததால், பாண்டிநாட்டிலிருந்து பெண்களை வரவழைத்து மணம் புரிந்தார்களென்று ஒரு பழங்காதை யுண்டு. அன்றியும் பாண்டி நாட்டுக்கும் ஆரியாவர்த்தத்துக்கும் போக்கு வரத்து மிகப்பெருகியதால், 'பாண்டிய' என்னும் தமிழ்மொழி ஆரியத்தில் நுழைந்து, அதற்கு வியுற்பத்தி (சொல் வளர்ந்த இலக்கணம்) காத்தியாயனர் என்றவர் இயற்றி, தனது காரிகையில் ஏற்றுவித்திருக்கிறார்.

கி. மு. நான்காம் நூற்றாண்டு முதல் வடநாட்டார் பலர் மதுரைக்கு வரத் தலைப்பட்டார். சமணமுனிவர்கள் அசோகர் தென்னாடு வந்துசேர்ந்து, அங்கே உள்ள மலைகளில் இயற்கையாய் அமைந்துள்ள குகைகளில் வாசம் செய்துவந்தார். இக்குகைகளில் முக்கியமானது மதுரைக் கடுத்த ஆனைமலையி லுள்ளது. அந்த ஆனைமலையில் அப்போது முதல் திருஞானசம்பந்தர் காலம்வரையில் குடியிருந்து பெருகினர்கள். பலகுகைகளில் சமணமுனிவர் இருந்து சமாதியுறும் நிலை பெறும்போது, குகைகளின் கல்லில் வெட்டியிருந்த படுக்கைகளின் மேல் படுத்துக்கொண்டு, அன்னாகார மில்லாமல் உயிரை விட்டார். இதற்குச் சல்லேசனம் என்று பெயர். சமணருடன் பிராமணரும் வடநாட்டிலிருந்து வந்து, ஆரியமுறை, ஆரியமொழி இவைகளைப் பரப்பினர்.

அக்காலத்தில் யவன (கிரேக்க) நாட்டிலிருந்து பாடலிபுத்திரத்தில் வாழ்ந்த மகாஸ்தனியோன் என்ற இராஜப் பிரதிநிதியானவன், மதுரையில் பாண்டியா என்னும் அரசி ஆண்டதாகவும், அவனுக்கு 500 யானைப்படையும், 4000 குதிரைப்படையும், 130,000 காலாட் படையும் இருந்ததாகவும் ஒரு புஸ்தகத்தில் எழுதியிருக்கிறான்.

முறையே மதுரையின் வணிகம் அதிகரித்தது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் மதுரையிலிருந்து யானைகளைக் கப்பலேற்றிக் கலிங்க தேசத்துக்கு அனுப்பினார்கள் என்று ஒரு கலிங்கநாட்டுக் கல்வெட்டில் இருக்கிறது. கலிங்கத்திலிருந்து பாம்பின் சட்டையைப் போன்ற மிகமெல்லிய ஆடை மதுரைக்கு அனுப்பினார்களென்று பழைய தமிழ்ச் செய்யுள்களிலிருந்து தெரியவருகிறது. அவ்வாடைக்குத் தமிழில் கலிங்கமென்றே பெயர். அது சாயந்தோய்த்ததும், தோய்க்காததுமான இருவகைத்தது. உள்நாட்டு வணிகமன்றி புறநாட்டுவணிகமும் வளர்ந்தோங்கிற்று. மதுரைக்கும் உரோமாபுரிக்கும் வர்த்தக சம்பந்தம் நாளுக்குநாள் அதிகமாயிற்று. மதுரையிலிருந்து உரோமாபுரிக்கு உடையும், மிளகும், நவரத்தினங்களும், பலவகை மரங்களும் ஏற்றுமதியாயின. ரோமாபுரியிலிருந்து பொன் நாணயங்களும், யவனப்பெண்களும் திராட்சைச் சாராயங்களும், குதிரைகளும் இறக்குமதியாயின. பொன் நாணயங்கள் கணக்கில்லாமல் வந்தமையால், உரோமாபுரி சாம்ராஜ்ஜியம் மெலிந்து அழியக் காரணமாயிற்று என்று, சரித்திர ஆராய்ச்சி செய்தவர்கள் சொல்கிறார்கள். உரோமாபுரி வர்த்தகர்கள் பலர் ஈராயிரம் வருஷங்களுக்குமுன் மதுரையில் குடியேறி, தாங்கள் வழிபட்ட கடவுளின் ஆலயங்கள் கட்டிக்கொண்டிருந்தனர். அவர்கள் வழங்கின சிறு நாணயங்களின் குவியல்கள் பலவிடங்களில் புதைத்து வைத்தவை இக்காலத்தில் வெட்டியெடுத்திருக்கிறார்கள். அவ்வர்த்தகர்களால் பாண்டியர்களின் புகழ் ஐரோப்பா முழுவதும் பரவி, இந்திய அரசர் எல்லோர்க்கும் 'பாண்டின்' என்று உரோமாபுரி நூல்களில் பெயரிடத்தொடங்கினார்கள். மதுரையிலிருந்து போன சரக்குகளால் உரோமாபுரிச் செல்வமெல்லாம் அழிந்துபோனதாக அந்நூல்களில் முறையிடத் தொடங்கினார்கள்.

கி. பி. முதல் நூற்றாண்டு பிறந்தது முதல் மதுரையின் சரித்திரத்தை ஆராய்ந்தறிய, கணக்கற்ற சாதனங்கள்

உண்டாயின. மூன்றும் சங்க மென்று ஒரு புலவர் சங்கம் 5 நூற்றுண்டுகளுக்கு நடந்தது. அக் காலத்தில் ஆரியச் செய்யுள் முறையல்லாது தனித்தமிழ் முறையில் அகவல்



மதுரை—வண்டியூர்த் தேப்பக்குளம்

கள் அளவற்றவை பாடினார்கள். இவைகளில் அழிந்து போனவை போக, மற்றவைகளை அகம், புறம், பத்துப்

பாட்டு முதலிய தொகைகளாகப் பிற்காலத்தியர் தொகுத்து வைத்திருக்கிறார்கள். அப் பாட்டுகளிலிருந்து அக்காலத்தில் மக்கள் வாழ்ந்த முறைகளும், மதுரைப்பட்டின நிலையும், மாந்தர் முருகனைத் தொழுது ஆற்றுப்பட்ட வழியும் எளிதில் புலப்படும். அப்போது ஆரிய வேள்விகள் அரிதே! அதனால் அவ் வேள்விகளை நடத்திவைத்த ஒரு பாண்டியனுக்குப் பல்யாகசாலை முதுக்குடுமி என்ற சிறப்புப் பெயர் பிறந்தது. ஆனாலும் மேற் சொல்லிய தொகைகளிலிருந்து வைதிக யாகங்களும், சைவாகமம், வைஷ்ணவாகமங்களில் சொல்லியிருக்கும் சிவ, விஷ்ணு பூஜை முறைகளும் தமிழகத்தில் அரிதாயிருந்தன என்று தெரிய வருகிறது. இத்தொகைகளில் சிவனது திருவிளையாடல்களைப் பற்றியாவது, திருமாலின் திருவவதாரங்களைப் பற்றியாவது ஒன்றுங் காணோம்.

கி. பி. ஐந்து, ஆறு நூற்றாண்டுகளில், சிவனிடத்திலும், விஷ்ணுவிடத்திலும் பக்தி பரவ ஆரம்பித்திருக்க வேண்டும்: ஏனெனில் ஏழாம் நூற்றாண்டு முதல் தேவாரமும், பிரபந்தமும் பாட ஆரம்பித்தார்கள். ஆனால் அப்போதிருந்த கோயில்கள் செங்கல்லாலும், மரத்தாலும் கட்டினவை; அக் காலத்துக் கோயிற் கட்டிடங்கள் அழிந்துபோய், அவைகளிருந்த விடங்களில் கற்பாறையால் பிற்காலத்தியர் கோயில்கள் கட்டியிருக்கிறார்கள். அப்போதே சமணமும், பௌத்தமும் தென்னாட்டில் மிகப் பரவியன. சமணரும், பௌத்தரும் வடமொழி யிலக்கிய முறையைப் பின் தொடர்ந்து, தமிழில் காவியங்களை இயற்ற ஆரம்பித்தார்கள். இதுவுமன்றி கி. பி. 550 இல் களப்பிரர் என்பார் பாண்டி நாட்டைக் கைப்பற்ற, பண்டைய பாண்டியர் குலம் அழிந்தது.

கி. பி 600-இல் கடுங்கோன் மன்னன் பாண்டியாகிராஜன் என்பான் களப்பிரரைத் தொலைத்து, மதுரையில் பாண்டிய ராட்சியை மறுபடி நிலைநிறுத்தினான். இது முதல் பாண்டிய வரசர் மாறி மாறி மாறன், சடையன் என்ற பட்டங்களைத் தரித்தார். ஆரிய முறைகள் மதுரையில் பரவின. அரசர், ஹிரண்ய கர்ப்பம், துலாபாரம் முதலிய ஆரிய முறைகளை நிகழ்த்தினர். பிராம்மணர்களுக்குப் பிரமதேயங்கள் அளித்து, தாமரப்பட்டயங்களில் அந்தத் தானத்தை வெட்டுவித்தார். சமண நெறியைச் சிலர் பின் தொடர்ந்தார். கடுங்கோன் பாண்டியன் கொட்போன் நெல்வேலிவென்ற நின்ற சீர் நெடுமாறன். இவன்

மனைவி மங்கையர்க் கரசியாரும், மந்திரி குலச்சிறையனாரும் ஆளுடைய பிள்ளையா ரென்னும் திருஞான சம்பந்த சுவாமியை மதுரைக்கு அழைத்து, இப் பாண்டியனைச் சமண நெறியிலிருந்து திருப்பின கதை சைவரெல்லோர்க்கும் தெரியும். இதை, 'தென்னாடு சிவம் பெருகச் செங்கோலுய்த்து' ஆண்டான், என்று சேக்கிழார் பாடினார்.

இவன் பேரன் பராங்குசன் சடையன் மாறன், சோ, சோழநாட்டைக் கைப்பற்றினான். இறையனாரகப் பொருளுரையிலுள்ள கோவைக்கு நாயகன். இவன் மகன் பராந்தகன் மாறன் சடையன். இவன் ஆண்ட காலத்தில் பாண்டி நாட்டில் முதல் முதல் கற்கோயில்கள் மலையைக்குடைந்து செய்ய ஆரம்பித்தார்கள். ஆனை மலையில் கி. பி. 770-ம் ஆண்டில் நரசிம்ம சுவாமி கோயிலும், திருப்பரங்குன்றத்தில் சுப்பிரமணிய சுவாமி கோயிலும் இவ்வாறு மலையில் குடைந்தெடுத்துச் செய்தவை. இக்காலத்தில் பாண்டி நாட்டில் வழங்கினது வெட்டெழுத்து.

பராந்தகன் பேரன் வரகுணன். 9-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தென்னாடெல்லாம் படையெடுத்து வென்றவன். இவனது கல் வெட்டுக்கள் கணக்கற்றவை, தமிழ் நாடெல்லாம் அகப்பட்டிருக்கின்றன. இவன் காலத்திலிருந்தார்போலும் மாணிக்கவாசக சுவாமிகள்; ஏனெனில் திருச்சிற்றம்பலக் கோவையில் வரகுணனை இருமுறை பாடியிருக்கிறார். வரகுணன் காலத்திற்குப் பின் பாண்டி நாட்டில் வைணவம் அதிகரித்தது. ஸ்ரீ வல்லப பாண்டியன் பெரியாழ்வாரை ஆதரித்தான். ஆண்டாளும், நம்மாழ்வாரும் இதற்குப் பின் வாழ்ந்தார்கள். கி. பி. 9-ம் நூற்றாண்டின் இறுதியில் தஞ்சைச் சோழர் செல்வாக்கு உயர, பாண்டியர் நிலை முறையே குன்றியது. சோழர் பலர் மதுராந்தகர் என்ற பட்டந்தரித்ததால், பாண்டியர் மகிமை அழிந்தது என்று தெரியவரும்.

கி. பி. 12-ம் நூற்றாண்டு இறுதி வரையில் சோழர் கொடி நாடெல்லாம் பறந்ததால், பாண்டியர் சிலர் கொலையுண்டு, சிலர் சோழர் கீழ்ச் சிற்றரசராய் வாழ்ந்தார். அப்போது சோழர் வலி மங்க ஆரம்பித்தது. மைசூரில் ஹளேபீடு என்னும் நகரத்தில் ஹொய்சளர் (தமிழில் போசள ரென்பார்) உயர் நிலை பெற்றார். அவர் சோழ நாட்டிலும் ஆண்டார். இவ்வாறு சில காலம் நிகழ, 13-ம் நூற்றாண்டின் முதலில் பாண்டியர் செல்வாக்கு மறுபடியும்

உயர்ந்தது. மாறவர்மன் சுந்தரபாண்டியனும் ஜடிலவர்மன் சுந்தரபாண்டியனும் தமிழக முழுதும் படையெடுத்துச் சென்று, பாண்டியராட்சியை எங்கும் பரவச்செய்தனர். இக் காலத்துப் பாண்டிய அரசர் மாறவர்மன் என்றும், ஜடிலவர்மன் என்றும் மாற்றி மாற்றிப் பட்டம் வைத்துக் கொண்டனர். இப் பாண்டியர் பற்பல கோயில்கள் கட்டினர்கள். பல கோயில்களுக்குக் கோபுரங்களும் மண்டபங்களும் மதில்களும் கட்டினர்கள். கயல்மீன் முத்திரை போட்ட கட்டிடங்களெல்லாம் இவர் கட்டினவை.

பதினன்காம் நூற்றூண்டின் முதலில் முகம்மதியர் தென்னடு மேல் படையெடுத்து வந்தார்கள். சோழர், பாண்டியர், போசளர் பலவீனமாயிருந்ததால் நாடெல்லாம் கைப்பற்றினர். மதுரை, இராமேசுவரம், கோயில்களை இடித்து, தவிடு பொடி யாக்கினர்கள். மக்களை மிக வருத்தப்படுத்தினர்கள். மதுரையிலும், சமயபுரத்திலும் சுல்த்தான்களை ஆள ஏற்படுத்தினர்கள். இவரது ஆட்சி 40 ஆண்டுகளுக்கு நிகழ்ந்தது. அப்போது அரங்கநாதனது உற்சவ விக்கிரகத்தை முதலில் மைசூரிலும், பின்பு திருவேங்கடத் திருமலையிலும் ஒளித்துவைக்க வேண்டியிருந்தது.

பதினன்காம் நூற்றூண்டின் நடுவில் தென்னட்டில் பாவின முகம்மதிய வெள்ளத்தை வடிய வைத்து, பின்பு இருநூறு ஆண்டுகள் வரைக்கும் அவ்வெள்ளம் வாராமல தடுத்த அணைபோல் விளங்கின விஜயநகர சாம்ராஜ்ஜியம், துங்கபத்திரைக் கரையில் மாதவாச்சாரியர் என்னும் அமாத்தியருடைய பேருதவியால் ஏற்பட்டது. உடனே சமயபுரத்திலும், மதுரையிலும் ஆண்ட சுல்த்தான்கள் தோல்வியுற்று நாட்டைவிட்டுப் போயினர். பாண்டிய அரசரும் விஜய நகரத்தார் கீழ் சிற்றரசராய் ஆண்டார். ஆனல் பாண்டியர் மகிமை குன்றியது. இக் காலத்தில் வாழ்ந்தவன் அதிவீரராம பாண்டியனென்னும் கவி.

15-ம் நூற்றூண்டில் விஜய நகர அரசரின் பிரதிநிதிகளாக பலிஜ நாயக்கர்கள் மதுரை வந்து சேர்ந்தார்கள். முறையே நாயக்கர் பலம் பெருத்தது. 16-ம் நூற்றூண்டின் நடுவில் நடு நாட்டு முகம்மதிய சுல்த்தான்கள் ஐவர் கூடி, விஜய நகரத்தாரைத் தலைக்கோட்டைப் போரில் தோற்கடித்து, விஜயநகர மாநகரை இடித்து, நாட்டைக் காடாகச் செய்தார்கள். விஜயநகர அரசர் பலம்குன்ற, மதுரை நாயக்கர் சுதந்தர அரசராய், மதுரையிலும் திருச்

சிராப்பள்ளியிலும் ஆள ஆரம்பித்தார்கள். இந்த வம்சத்தில் மிகப் பிரசித்திபெற்றவன் 17-ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமலை நாயக்கன். இவன் மதுரையில் உள்ள மீனாக்ஷி கோயிலையும், சொக்கநாத சுவாமி கோயிலையும் இடித்து, மிக அழகாய்க் கட்டினான். இதுவுமன்றி தெப்பக்குளம் வெட்டுவித்தான். தான் குடியிருக்க, அற்புத அழகுள்ள அரண்மனையும் கட்டிக்கொண்டான்.

முறையே நாயக்க வம்சத்தரசர் பலம் குன்றியது. 18-ம் நூற்றாண்டில் மராட்டியரும், மைசூராரும், சேதுபதியும், முகம்மதியரும், போராடத் தலைப்பட்டார்கள். பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலரும் இந்தக் கக்ஷிப் பிரதிகக்ஷிகளில் நுழைந்து, போர்களில் உதவி செய்யத் தலைப்பட்டார். நாடு சின்னாபின்னமாயிற்று. ஜனங்கள் பட்ட துன்பத்திற்கு அளவில்லை. இப்போர்களெல்லாம் அடங்கினபோது, மற்றவர் மகிமை மங்கி, பாண்டி நாடு ஆங்கிலர் ஆட்சிக்குள் வந்து, ஒரு நூறு வருஷமாய் மக்கள் கலகமில்லாமல் வாழ்ந்து வருகிறார்கள்.

---


## "தாருல் இஸ்லாம்"

### சித்திரப்படத்துடன் கூடிய சிறந்த செந்தமிழ்ச் சஞ்சிகை.

இதன் மேன்மையையும் அழகையும் அறியாதவர் இத்தமிழுலகிலும் உண்டோ? இது வரையில் 5000-த்துக்கு மேற்பட்ட அறிஞர்கள் இதனால் பெரும்பயன் அடைந்து வருகின்றனர். இஸ்லாத்துக்கும் இதர மதங்களுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும், மேன்மை தாழ்மைகளையும் நன்குணர்வதற்கு இஃதொன்றே சிறந்த பத்திரிகையாயிருக்கிறது. மத சீர்திருத்தத்துக்கும், ஆசார சீர்திருத்தத்துக்கும் கல்வியின் முன்னேற்றத்துக்கும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் இப்பத்திரிகையே கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இதன் அருமையையும் பெருமையும் ஆழ்ந்து நோக்குங்கால் இதன் சந்தா மிகக் குறைவானதாகவே காணப்படும்.

வருஷசந்தா ரூ. 3. தான். வெளிநாடுகளுக்கு ரூ. 4.

ஹிந்து சகோதரர்களுக்கும் சொதுஸ்தாபனங்களுக்கும் எல்லா மாணவர்களுக்கும்.

வருஷசந்தா ரூ. 2. வெளிநாடுகளுக்கு ரூ. 3.

ஒவ்வோர் ஆண் பெண் கையிலும் இப்புஸ்தகம் ஹஸ்த பூஷணமாய் விளங்கத் தக்கது. உடனே எழுதுங்கள்.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்
தபாற்பெட்டி நெ. 15, சென்னை.

1039

# தானே தானும்
# தக்கடி தங்கம்

(692-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

## 3. தக்கடி தங்கம் சொன்ன கதை.

தீவாளி கழிந்த மூன்று நாள், என் வேட்டகத்து வாசல் திண்ணையில் நான் உட்கார்ந்திருக்கும் பொழுது, தக்கடி தங்கம் வந்து சேர்ந்தான். அப்பொழுது மாலை மணி மூன்று தானிருக்கும்; வெயில் உக்கிரமாய்க் காய்ந்துகொண்டிருந்தது; தக்கடியும், வழக்கமான ஆடம்பரங்களின்றி, ஊர் வீதி வழியாக வராமல், ஊருக்கு மேல் புறமுள்ள தோப்பிலிருந்து வந்தான்; அதனால் அவன் தனியே வந்து சேர்ந்தான்; நான் கொடுத்த ஜெயில் துண்டை அரையில் உடுத்திருந்தான்.

"அப்பனே! உன் மனசு நல்ல மனசு, அப்பனே! நீ நல்லா யிருக்கவேணும். அப்பனே!" என்று சொல்லிக்கொண்டு வந்து, என் பக்கத்தில் உட்கார்ந்தான். தீவாளி யன்று நடந்ததை நினைந்து, எனக்கு முதலில் சிறிது வெட்கமாயிருந்தது; கூச்சம் தணிந்த பின்பு, பொழுது போக்காக, அவனுடன் பேசத் தொடங்கினேன். "தக்கடி! நீ யார்? எந்த ஊர்? உன் கதையைக் கொஞ்சம் சொல்லு, கேட்கட்டும்," என்று பேச்சைக் கிளப்பினேன்.

"என்கதையா? அது பெருங்கதை யல்லவோ அப்பனே!

'பெற்றான் ஒரு பித்தன், எனைப் பெற்றாள்ஒரு சத்தி,
எற்றால் இனி, மத்தன், இவண் எய்தும் உயர் முத்தி?'

என்று பாடத்தொடங்கினான், தக்கடி தங்கம்.

"வேதாந்தம் போதும், தக்கடி; வேதாந்தமும் போதும், பாட்டும் போதும். உன் சரித்திரத்தை உள்ளபடி சொல்லு" என்று, பாட்டைத் தடுத்துக் குறுக்கிட்டு, மறுபடியும் கேட்டேன்.

"ஆகா! அப்படியா? பாட்டும் வேண்டாம், வேதாந்தமும் வேண்டாமா அப்பனுக்கு? என் சரித்திரமா வேணும்? சரி, சரி, சொல்லுகிறேன், கேள், அப்பனே. நான் பிறந்தது கருவூர், தெரிந்ததா? ஐயா பேர் குமரப்பிள்ளை; ஆத்தாள் பேர் வடிவழகிய மங்கை; தெரிந்ததா? நாங்கள் சாதியிலே பாணர்.—"

"பாணர் என்றால், யாழ் வாசிக்கிறவரா?"

"இல்லை, அப்பனே, யாழ்ப்பாணரில்லை: தையற்காரர்; மான மூடி ஆள்விழுங்கிச் சட்டைகள் தைக்கும் தையற் பாணர்."

"உள்ளபடி உனக்கிட்ட பெயரென்ன?"

"தானே தானும் தக்கடி தங்கத்துக்குப் பல பெயருண்டு; ஸகஸ்ர நாமம் தெரியுமா, அப்பனுக்கு?"

"வேதாந்தம் வேண்டாம் என்கிறேனே; உனக்கு ஐயாவும் அம்மையும் முதலில் இட்ட பெயரென்ன? அதைச் சொல்."

"அவர்களிட்ட பெயரா?

வான மாமலை என்றவன் ஒரு
கூன மாமலை யாயினன்;
தான லாதினை வேறிலான், அவன்
தானே தக்கடி தங்கமே."

கேட்டதில்லை பாட்டு, அப்பனே?"

"உன் முதற் பெயர் வானமாமலையா? நான் கேட்டதில்லை இந்தப்பாட்டு. உன் சரித்திரத்தைப் பாட்டாகப் பாடி யிருக்கிறாயா, என்ன? எப்பொழுது இந்த,—கூன் ஏற்பட்டது? பிறவியிலே இல்லையா?"

"அப்பனே! என்ன கேள்வியிது? குமரப்பிள்ளைக்கும் வடிவழகிய மங்கைக்கும் கருவூரிலே சனித்தபிள்ளை கூனாகவும் பிறக்குமா? இவ்வளவு தானா அப்பன் யுக்தி?" இதைக் கேட்டவுடன் எனக்கும் கொஞ்சம் கோபமும் திகைப்பும் உண்டாயிற்று. அவன் சுபாவமாய்ப் பேசுகிறானென்றும்,

இன்னும் பிறபொருட் கதையாக வேதாந்தமே பேசுகிருனென்றும், புரியவில்லை. அதைத் தெரிந்து கொள்ள விரும்பி: "என்ன, தக்கடி, எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே; நீ என்ன, இன்னும் ஈரடியாய் வேதாந்தம்தான் பேசுகிருயா? அல்லது யதார்த்தமாய்ப் பேசுகிருயா?" என்று கேட்டேன்.

அதற்குத் தக்கடி: "எது அர்த்தமோ அதைத்தானே தக்கடி பேசுவது; வேறு பேச்சேது?" என்று பதில் சொன்னுன். என் சந்தேகம் நீங்கவில்லை; வேறு விதமாய் அதை நீக்கிக்கொள்ள எண்ணி; "அதிருக்கட்டும், தக்கடி, பிறவியிலே கூனல் இல்லையானுல், எப்பொழுது எதனுலே ஏற்பட்டது?" என்று கேட்டேன். இதற்கு விடையாகத் தக்கடி,

"ஐந்து வயதினிலே–தங்கமே–தெந்தனுப் பாடையிலே
மாரியம்மை வந்து–தங்கமே–வாரிவளைத்தானே."

என்று பாடினுன்.

"அப்படியா, வைசூரி அம்மை போட்டியா கூனல் வந்தது? சரி. உங்கள் சாதித்தொழில் நீ கற்றுக் கொள்ளவே யில்லையா? கலியாணம் செய்து கொள்ளவே யில்லையா?"

நான் இப்படிக் கேட்டவுடன்; தக்கடி:

"பாணனும் கோணன் ஆனுன்–தங்கமே,
பையனும் மையலானுன்;
ஆணும் அலியாச்சே–தங்கமே,
அம்மை விளையாட்டே!"

என்று பாடினுன். அதைக்கேட்க எனக்குப் பரிதாபமாயிருந்தது; ஆனுல், தக்கடி முகத்திலோ, குரலிலோ, எவ்வித விசனத்தையும் கிலேசத்தையும் காணவில்லை. அப்பால், நான்: "உனக்கு இவ்வளவு தமிழ்ப் புலமையும் பாடும் சக்தியும் எப்படி வந்தது, தக்கடி?" என்று கேட்டேன். உடனே அவன் திண்ணையிலிருந்து கீழே தெருவில் குதித்து,

"குருநாதன் அருள்நாதன் எங்கோ–தமிழ்
தருநாதன் தக்கடிக் கருள்நாதன் எங்கோ,
கருவூரில் வருநாதன் எங்கோ–அவன்

கருணைகரன் அருள் உருநாதன் எங்கோ!
ஜல்! ஜல்! தானே தானும் தக்கடிதக்கம்! ஜல்!, ஜல்''

என்று குதித்துப் பாடிக்கொண்டே ஓடிப்போய் விட்டான்.

—கோ. கோ.

## விகடப்பா

## தெருவாசகம்.

1. முத்திநெறி யறியாத :—என்னும் மெட்டு—

கொத்தமல்லி குடமிளகாய் கொத்தவரை கொடிமிளகு
கத்திரிக்காய் கறிவேப்பிலை காய் கனிகள் கணக்கிலவாய்
தித்திக்கும் செங்கரும்பும் தெவிட்டாத தேன்பாகும்
மெத்தஇளம் வெற்றிலையும் விற்றிடுமே வீதியிலே!

2. திருவெம்பாவை மெட்டு—

எங்கையிற் கள்ளை எமக்கே இருபானை
இங்குக் கொடுக்க, மகிழும் எம் உள்ளத்தால்,
எங்கள் பெருமான்! உனக்கொன் றுரைப் போம் கேள் :
எந்தோள்கட் காவடியை அன்றெதவும் எந்தற்க ;
எங்கால் இதற்கலா தெத்தூதும் எகற்க;
கங்குல் பகல் எக்கண் இக் கள்ளன்றிக் காணற்க ;
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்,
எங்கெழிலென் ஞாயிறெ மக்கேலோ ரெம்பாவாய் ?

3. திரு அம்மானை மெட்டு :—

பொல்லாத பார்ப்பார்தம் சூழ்ச்சி இதைப்போலுண்டோ !
வல்லார்க்குப் பெண்டாகி, மற்றவர்தம் பூட்ஸையும்,
சொல்லா இழி சொல்லும், சூளுரையும், சோர்வுகளும்,
செல்லாச் சினமும், சிறுமையும் கொள் சேவகங்கள்
எல்லாம் அவர்க்கேயாம், ஏதும் நமக்கிலையாம்!
பல்லார் அறிய இதைப் பாடுதுங்காண் அம்மானாய்.

—மா.

## பன்னிரண்டாவது அதிகாரம்

கோபாலையருக்கு மிஸ்ஸிஸ் மூடி மூலமாக ஜேன்கே இரகசியக் கடிதம் அனுப்பியதற்கு இரண்டு நாள்களுக்குப் பின்னர், மாலை ஐந்து மணியிருக்கும், ஏதோ வேலையின் மீது வெளியே போயிருந்த தாமஸ் கே வீடு திரும்பி வந்தவுடன், பங்களாவின் முன்முற்றத்திலே பூத்தொட்டிகளின் நடுவே போட்டிருந்த ஒரு நாற்காலியில் களைப்புடன் சாய்ந்துகொண்டார். பங்களாவின் பின்புறமுள்ள கொட்டகைக்கு வண்டி வந்து சேர்ந்தும் தன் தந்தை பங்களாவுக்குள் வழக்கம்போல் வாராமையினால், ஜேன்கே, வாசற் பக்கம் போய்ப் பார்க்க, தன் கண்களை மூடிக் கொண்டு அவர் படுத்திருப்பதைக் கண்டாள். உடனே பட்லரை அழைத்து டீ கொண்டுவரச் சொல்லிவிட்டு, விரைந்து சென்று, அவர் படுத்திருந்த நாற்காலியின் கையின்மேல் உட்கார்ந்துகொண்டு, அவர் முகத்தை மெது வாய்த் தடவிக்கொடுத்து: "ஏன் அப்பா, களைப்பாயிருக்கிறதா? தலையை வலிக்கிறதா? உடம்பு சுகமில்லையா?" என்று, பக்ஷத்தோடும் பரபரப்போடும் விசாரித்தாள்.

கே—இல்லை, ஒன்றும் விசேஷ மில்லை, ஜென்னி. வரும் வழியிலே ஏதோ சிறிது நெஞ்சு படபடத்தது; கொஞ்சம் களைப்பா யிருக்கிறது.

ஜேன்— டீ கொண்டுவரச்சொன்னேன், டாக்டருக்கு ஆளனுப்பட்டுமா ?

கே—வேண்டாம்; டாக்டரைப் பார்த்து விட்டுத் தான் வருகிறேன்; ஒன்றும் விசேஷமில்லை யென்றுதான் அவரும் சொன்னார்.

ஜேன்—ஹிருதயத்தைச் சோதித்துப் பார்த்தாரோ?

கே—பார்த்தார்; பயப்படும்படி ஒன்றுமில்லை என்றார்.

இதற்குள் டீ வந்துசேர, ஜேன், தன் தந்தைக்கு ஒரு கோப்பையில் டீ கலந்து கொடுத்தாள். அவர் அதை

வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டே, மீண்டும் அவளுடன் பேசலானார்.

கே.—உன்னைப் பற்றித்தான் கவலையாயிருக்கிறது. இன்று ஒரு சங்கதி கேள்விப் பட்டேன்: அதைக் கேட்டதுமுதல் கவலை அதிகமே.

ஜேன்.—ஏன், என்ன கேள்விப்பட்டீர்கள்? என்னைப் பற்றி ஏன் அதனால் கவலை அதிகப்படவேண்டும்?

கே.—அந்தப் பிராமண டாக்டர் மீதுள்ள எண்ணம் இன்னும் உனக்கு மாறவில்லையே?

ஜேன், இதற்கு ஒன்றும் உடனே பதிலுரையாமல், தலையைக் கவிழ்ந்து கொண்டாள்.

கே.—அவனைப் பற்றி ஒரு சங்கதி காதில் விழுந்தது. அது உண்மையானால், அப்படிப்பட்டவனை நீ நினைத்தலும் தகாது. வெறும் தூர்த்தனும் அவன்.

இதைக் கேட்டவுடன் ஜேன் நெஞ்சு படபடத்தது; அவள் மனத்தில் கோபமும் தாபமும் துக்கமும் கிளர்ந்து குழம்பின; அவள் கண்கள் நீர்ததும்பின. சிறிது நேரம் ஒன்றும் பேசாதிருந்தாள்; தன் தந்தையாக மேலொன்றும் சொல்லாமையால், அவள், "காதில் என்ன விழுந்தது?" என்று மெதுவாய்க் கேட்டாள்.

கே.—என்னவா? முதல் மனைவி உயிரோடிருக்கும் பொழுதே அவன் தூர்த்தனாய்த் திரிந்தானும். இப்பொழுது யாரோ ஒரு பறங்கிக்காரியை வைத்துக்கொண்டிருக்கிறானும். இன்று நான் டாக்டர் ஹாயியைக் காணப் போனபோது, வக்கீல் சங்கரையர் அவருடன் பேசிக் கொண்டிருந்தார். அவரை நான் வெகுநாளாயறிவேன். 'இந்த நாளிலே பிராமணர்கள் பலவிதமாய்க் கெட்டழிந்து போகிறார்கள்; பழைய நாளைய வருணாசிரம தருமப்படி நடக்கவேண்டும்' என்பதுதான், எங்கும், எப்போதும் சங்கரையர் பாடும் பல்லவி; கருநாடக மனுஷர் அவர். இன்றும் அந்தப் பல்லவியை வழக்கம்போல் பாட ஆரம்

பித்தார். அப்பொழுது, அவர், டாக்டர் ஹயியைப் பார்த்து: “பிராமணன் டாக்டர் பரீக்ஷைக்குப் படித்து, அந்தக் காலேஜில் ஜாதி மத பேத மில்லாமல கண்ட பேரோடெல்லாம் சங்குகரையின்றிப் பழகுவதால், தன் ஜன்மத்தையே மறந்து, அப்பிராமணியமான விஷயங்களில் அரோசிகம் என்பதே போய், தாறுமாறாக வெள்ளைக்காரரைப்போலவே நடக்கத் தலைப்பட்டுவிடுகிறுன்” என்று சொன்னர். அதற்கு உதாரணமாக, டாக்டர் கோபாலை எடுத்துக்கூறி, அவன் இப்பொழுது. ஒரு பறங்கிக்காரியை வைத்துக்கொண்டிருக்கிறுனென்றும், அவனும் அவளும் ஹைகோர்ட்டுக்கு எதிரேயுள்ள சவுக்குத் தோப்பில் சாயங்காலம் அளவளாவிக் கொண்டிருந்ததை இரண்டு நாளைக்குமுன் தான் நேரில் பார்த்ததாயும் சொல்லி, தன் பல்லவியைப் பாடலானர். அப்படிப்பட்ட மட்டுமரியாதை யில்லாத, மானங்கெட்ட ஒரு தூர்த்தனை நீ சொப்பனத்திலும் நினைக்கலாமோ?

ஜேன்.—போன சனிக்கிழமை சாயங்காலமா?

கே.—சனிக்கிழமை யென்று நான் சொன்னேனே? சங்கரையர், ‘இரண்டு நாளைக்கு முன்’ என்றூர்; ஆனல் சனிக்கிழமைதா ஞகும். எப்பொழுதானல் என்ன? பிராமணர்களுக்குள் வியவஸ்தை கிடையாது. எத்தனை பெண்டாட்டிகள் வேண்டுமானலும் கலியாணஞ் செய்து கொள்வார்கள்; அதுவும் தவிர, இந்த விஷயத்தில் ஒரு வரம்பு மில்லை. சங்கரையர் சொல்வதைக் கேட்டால், பிராமணர்களுக்குள்ளுமே, இவன் பேர்போன தூர்த்தனென்று தோன்றுகிறது. இன்று தான் எனக்கிது தெரிய வந்தது. அதைக்கேட்டது முதல், அவன்மேல் உனக்குள்ள அபிமானத்தை எண்ணி என் மனம் வருந்துகிறது.

தான் இப்படிப் பேசினல், தன் மகளின் மனப் பான்மை வெளிப்படும்; அவள் காதல் முறிபடும்; “நான் தான் அவரைப் பார்த்து பேசுவது மில்லை, எழுதுவது மில்லை யென்று சபதம் செய்து கொடுத்திருக்கிறேனே;

நீங்கள் ஏன் எனக்காக வருந்தவேண்டும்? இப்படிப்பட்டவரை நான் ஒருபோதும் நினையேன்" என்று அவள் உறுதி கூறுவாள்; அப்பால், அவள் விவாகத்தைப் பற்றித் தான் ஒரு வாரமாய்க் கொண்டிருந்த உத்தேசத்தை வெளியிட்டு, அவள் மனத்தை அறியலாம் என்று தனக்குள் சூழ்ச்சிசெய்து, தாமஸ்கே இவ்வண்ணம் பேசலானர். ஆனல், அவர் எதிர் பார்த்தபடி, ஜேன் ஒன்றும் சொல்லவில்லை; அவள் பதிலே கூறவில்லை. அவரை முகமெடுத்து நோக்காமல், தலையைக் கவிழ்ந்துகொண்டு, தன் சிந்தனையில் ஆழ்ந்தவளாயிருந்தாள். தாமஸ்கே, மேல் இனி எப்படிப் பேச்சைத் திருப்புவது என்று திகைக்கலானர். அந்தச் சமயத்தில்: "தங்கள் உடம்பு சுகமாயிருக்கின்றதா? இந்த நிமிடமே, என்றும் போலின்றிக் களைப்புற்றிருக்கிறீர்கள் என்று, பட்லர் கூறக் கேள்வியானேன். என்ன விசேடம்? கொஞ்சம் விஸ்கியும் ஸோடாவும் கொண்டு வரட்டுமா?" என்று பரிந்து விசாரித்துக்கொண்டே, பாக்கியம் வந்து சேர்ந்தாள்.

"வேண்டாம், அக்காள்; கொஞ்சம் டீ சாப்பிட்டார்கள், இப்பொழுது தாழ்வில்லை" என்று, ஜேன் உடனே பதிலுரைத்தாள்.

தன் தந்தை தினந்தோறும் சிறிது மதுபானம் செய்வதும்; அதற்குப் பாக்கியம் உடந்தையாயிருந்து, வேண்டியபோதும் வேண்டாத போதும் தூண்டி வருவதால் அந்த வழக்கம் பலப்பட்டு, அவர் குடிக்கும் மதுவின் அளவு நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருவதும்; அதனல், அந்த வழக்கத்தை வெறுக்கும் தன்னிடத்தில் தன் தந்தைக்குச் சிறிது கூச்சமும் பயமும், பாக்கியத்தினிடத்தில் அந்தரங்க விசுவாசமும் அந்நியோந்நியமும் ஏற்பட்டிருப்பதும், ஜேனுக்கு நன்கு தெரியும்.

"இல்லை, ஜேன்; உனக்குத் தெரியாது; இப்படிக் களைப்புற்ற சமயத்தில் விஸ்கியும் ஸோடாவும் சிறிதுட்

கொள்ளுதல்தான் ஏற்ற மருந்து; உடனே களைப்பு நீங்கி விடும். நான் சிறிது கொண்டு வருகின்றேன்" என்று சொல்லிக்கொண்டே பாக்கியம் திரும்பினள்.

"வேண்டாம், பாக்கியம், டீ சாப்பிடவிட்டுக் களைப் பில்லை. நீயும் உட்காரு; ஒரு சங்கதி பேசவேண்டும்; முக்கியமான சங்கதி" என்று கூறி, கேயும் தடுக்க, பாக்கியம் ஒரு நாற்காலியில் வீற்றிருந்து, "என்ன சங்கதி?" என்று கேட்டாள்.

தன் காதலர் தூர்த்தர் என்பதைப்பற்றியே தன் தந்தை பேசப் போகிறார் என்று, ஜேன் எண்ணினள். மிஸ்ஸிஸ் மூடி தன்னிடம் சனிக்கிழமை யன்று சொன்ன வார்த்தைகளால், சவுக்குத் தோப்பில் தன் கடிதத்தை மிஸ்ஸிஸ் மூடி கோபாலையருக்குக் கொடுத்ததைப் பார்த்து விட்டே சங்கரையர் தன் காதலரைத் தூர்த்தரெனப் பழிக்கலானார்; அது முற்றும் தவறு, என்பதை ஜேன் கண்டு கொண்டாள்; ஆயினும், உண்மையைத் தன் தந்தையிடம் வெளியிடுவது அசாத்தியமா யிருந்தது. இப்பொழுது மீண்டும் தன் தந்தை பாக்கியத்தினிடத் திலும் தன் காதலரை அவதூறாகப் பேசுவதை இருந்து கேட்க விரும்பாதவளாய், "இதோ ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டு, ஜேன் பங்களா விற்குள் போய்விட்டாள்.

"என்ன சங்கதி, ஐயா?" என்று, பாக்கியம் மீண்டும் கேட்டாள்.

தன் மகள் பிரிந்துபோய், தானும் பாக்கியமும் தனித்தவுடன், கே, முதலில் நினைத்தபடி யன்றி, தன் மகளைப்பற்றிப் பாக்கியத்தின் மூலமாய்த் தான் அறிய விரும்பிய விஷயத்தைப்பற்றிப் பேசலானார்.

கே.—ஏன், பாக்கியம், உனக்குத் தெரிந்திருக்குமே, இன்னும் அந்தப் பார்ப்பான்மேல் இவளுக்கு அதிகம் காதல் உண்டோ?

பாக்கியம்.—அப்படித்தான் தோன்றுகின்றது ; ஏன் கேட்கின்றீர்கள்.

கே.—அவன் வெறும் தூர்த்தனென்று இன்றே கேள்விப்பட்டேன் ; அவளிடம் சொன்னேன் ; ஒன்றும் பதிலே சொல்லவில்லை ; மனம் வேறுபட்டதாகவும் தெரியவில்லை.

பாக்கியம், "அவர் தூர்த்தரா ? ஐயோ பாவம் ! அப்படிப் பட்டவர் மீதா இவள் காதல் கொண்டிருக்கின்றாள் ? விதிவசமே இது. காதலுக்குக் கண்ணேது, காதேது ? ஜாதிமதம் வயது முதலிய வித்தியாசங்களை அது கவனிப்பதுண்டோ ? தாங்கள் அறியாத விஷய மில்லையே." என்று சொல்லிப் பெருமூச்செறிந்தாள். தாமஸ்கே, பாக்கியத்தைச் சிறிது திகைப்புடன் ஒரு கணம் விழித்துப் பார்த்துவிட்டு, அப்பால்: "ஆனால் இவளுக்கு அவன் மீதுள்ள காதல் மாறவே யில்லையா ?" என்று கேட்டார்.

"நான் எவ்வண்ணம் உறுதி சொல்வேன் ? காதல் விஷயத்தில் மட்டுமே ஒருவர் மனத்தை ஒருவர் அளந்தறிய முடியாது.

"கண்ணொடு கண்கள் கலந்தொத்தால் வாய்ப் பேச்சால்
என்ன பயனு மிலை"

என்று ஔவையார் கூறி யிருக்கின்றனர். ஒருவர் மனத்தை ஒருவர் அறிய முடியுமா ?" என்று பதிலுரைத்தாள்.

கே.—உன்னிடம் இதைப்பற்றி அவள் பேசுகிறதில்லையா ? நீங்கள் இருவரும் தோழிகளாயிற்றே, உனக்கு உண்மை தெரியாதா ?

பாக்கியம்.—எப்பொழுதாவது பேசுவதுண்டு ; நான் சொல்வதைப்பற்றித் தாங்கள் வேற்றுமையாய் நினைக்கவுங் கூடாது, மனஸ்தாபங் கொள்ளவுங் கூடாது ; அப்படியாயின் நான் ஒரு வார்த்தை சொல்லுகின்றேன்.

கே.—என்ன, என்னதது ?

பார்க்கியம்.—தன் தாய்வழி வந்த அபிமானமோ, மற்றென்றோ, நான் அறியேன் ; தங்கள் மகளுக்கே

பொதுவாய்ப் பிராமணரிடத்திலும் அவர்கள் பழக்க வழக்கங்களிலும் ஒருவித அபிமானமிருக்கின்றது. இவ் விஷயத்தில், தங்களைக்கொண்டு பிறந்தவ ளில்லை அவள்; நம்முடைய சத்திய வேதத்திலே அதிகப் பற்றுள்ள வளாகவும் தோன்றிலள், நான் கவனித்த வரை; இது மட்டும் என் மனத்திற் பதிந்திருக்கின்றது; காரணம் யாதோ நான் அறியேன்; தங்கள் மகள் இப்படி யிருப்பது முதலில் எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

தாமஸ் கே இதற்கொன்றும் பதிற் கூறிலர்; தன் சிந்தனையில் சிறிதுநேரம் ஆழ்ந்திருந்தார்; பாக்கியம், அவர் முகக்குறிக்ளைக் கவனியாதவள்போல் உற்றுக் கவ னித்துக்கொண் டிருந்தாள்.

கே.—அவளுக்கேற்ற வேறொரு நல்ல வரன் நாலைந்து நாள்களுக்கு முன் தெரிய வந்தது. அதைப் பற்றியே உங்களிடம் பேச எண்ணினேன்.

பாக்கியம்.—அவள் மனம் எப்படி யிருந்தாலுஞ் சரி; மற்றொருவரனைத் தெரிந்துகொண்டு, கூடிய சீக்கிரத்தில் மணவினையை முடித்து விடுவதே நலமெனத் தோன்று கின்றது; அப்பால், எல்லாம், தங்கள் மனம்போலத் திருந்தி விடுவாள். தங்கள் சொல்லைத் தட்டமாட்டாள்; ஒருவருக்குக் கட்டுப்பட்ட பின், தன் கடமைப்படியே ஒழுகுவாள்.

கே.—நான் கேள்வியான வரனுனல், துரிதமாகக் காரியத்தை முடிக்கவேண்டும்; இல்லாவிட்டால் கை தவறிப் போய்விடும். அந்த வரன் எல்லா விஷயத்திலும் எனக்குத் திருப்தியாயிருக்கிறது. இந்த மாதமே சீமையி லிருந்து திரும்பி வந்தவர்; ஸர்க்காரில் மாதம் முந்நூறு ரூபா உத்தியோக மாகிவிட்டது; வயதும் சிறுப்பமே; கண்ணுக்கு லக்ஷணமாயு மிருக்கிருர்; எல்லா விஷயத்திலும் சிலாக்கியமானவர்.

பாக்கியம்.—அவர் யார்?

கே.—நாளையே அவரை அழைத்து வரும்படி என் நண்பரிடத்திற் சொல்லி யிருக்கிறேன்; ஆனால், இவளுக்கு இன்னும் அந்தப் பார்ப்பான்மேல் தான் கிறுக்கென்றால், என்ன பிரயோசனம் ?

பாக்கியம்.—அவள் குழந்தையே இன்னும்! வயதுக்குத் தகுந்தபடி உலகத்தை அறியாதவள். அவளுக்கென்ன தெரியும்? தாங்கள் பார்த்து, இப்படித்தான் செய்ய வேண்டுமென்று தீர்மானமாய்க் கூறிக் காரியத்தை முடித்துவிட்டால், பிறகு எல்லாம் மனமொத்துப் போகும். இந்த விஷயத்திலே தாங்கள் தயவு தாக்ஷணியம் பாராட்டினால் ஒன்றும் முடியாது.

கே.—அவள் மனமுரண் டுள்ளவள்; சாதாரண விஷயங்களில், குழந்தையைப் போல நடந்தாலும், தன் மனத்தில் உறைத்துப்போன முக்கிய விஷயங்களிலே, அவளை அசைக்க முடியாது; பிடிவாதக்காரி; உனக்கு அவள் சுபாவம் இன்னும் தெரியாது.

பாக்கியம்.—ஆனால், அவளிஷ்டப்படியே, டாக்டர் கோபாலையருக்கே கொடுத்து விடலாமே?

கே.—என் உயிருள்ள வரை அதற்கு நான் இசைய மாட்டேன். அப்படிப்பட்ட ஒரு பார்ப்பானுக்கு என் ஒரே மகளைக் கொடுக்கிறதா! விவாகமில்லாமல் வேண்டுமானால் அவளிருக்கட்டும்; அவனை மணம்புரிய ஒரு நாளும் நான் சம்மதிக்க மாட்டேன்.

பாக்கியம்:—தங்கள் மனம் அப்படி உறுதியாயிருந்தால், விவாக மில்லாமலும் அவர் மீது காதலோடும் வைத்திருப்பதைக் காட்டிலும், அவனை எவ்வாறாவது, கட்டாயப்படுத்தியாவது, வேறொரு தகுந்த வரனுக்கு மணமுடித்து விடுவதே உத்தமமெனத் தோன்றுகின்றது. அப்படியே செய்து விடுங்கள்.

கே.—ஏதோ, நாளை எவ்வாறாகிறது பார்ப்போம். போனவள் இன்னும் திரும்பி வரவில்லை, பார்.

# பஞ்சாமிர்தம்

சித்திரப்படங்களுள்ள மாதப் பத்திரிகை

பத்திராதிபர்—அ. மாதவையர்

"நான் ஒருமானுடன்; நான் மதியாதன
மானுட வாழ்வில் இலை."

முதல் வருஷாந்த (1924-25) அநுபந்தம்

## I. முந்திய சில அபிப்பிராயங்கள்-நக்ஷத்திர மாலை

(1) *Mr T. V. Seshagiri Iyer, Ex-Judge. Madras High Court*—"Yours is just the kind of Magazine that is required. The articles are of varied interest, practical as well as scholarly. There is no pedantry, a point on which I lay great stress…I am satisfied…"

(2) செந்தமிழ்—"இக்கால நிலைமைக்கேற்றபடி தமிழ் மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய சிறந்த பல விடயங்கள் எழுதப்பட்டுள்ளன . . . இனிய தமிழ் நடையில் எழுதப் பட்டிருக்கின்றன . . . இது தமிழ் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு மிக்க உபயோகமுடையது . . ."

(3) *Sjt. C. Rajagopalachariar-Salem*—"The journal is very good."

(4) சன்மார்க்க போதினி, யாழ்ப்பாணம்—"இது சிறந்த சித்திரப்படங்களுடன் நல் விஷயங்களை படக்கி வெளிவருகிறது."

(5) *Sir P. Ramanathan of Ceylon*—"It promises to be useful."

(6) குமரன்—"பல அரிய வியாசங்கள் பொலிகின்றன. படங்களுடன் அழகான காகிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டிருக்கிறது."

(7) *The Hindu*—"* * * Such a Magazine as this would be a great benefit to the Tamil people. . The style is throughout simple and readable. We have no hesitation in saying that Mr. Madhaviah has achieved a very high standard of excellence…The Magazine deserves to be in every Tamil Home."

(8) தாருல் இஸ்லாம்--"இதில் பற்பல பிரபல்யர்களால் எழுதப் பெற்றுள்ள பல அரிய விஷயங்கள் காணப்படுகின்றன. இதுவரையில் இல்லாத விதமாய் இப்பத்திரிகை வெளி வந்திருப்பது பாராட்டற் பாலதே. இதைப்பலரும் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்."

(9) *Rev. H. A. Popley*—"...It is a feast of good things and well bears out its title...a vital contribution to the progress of the Tamil people.

(10) தெய்வபக்தன்-"பலதிறப்பட்ட செந்தமிழ் உரைநடைகளைத் தமிழ்நாட்டிற்கு முன்னம் உபகரித்துள்ள இப்பெரியோர், இப்பொழுது உண்மையான அன்புபூண்டு, உலகினர்க்கு அறிவூட்ட ஒற்றுமையுடன் உழைத்துப் பஞ்சாமிர்தத்தைப் பரிந்துதவ முன்வந்திருப்பது பெரிதும் பாராட்டத் தக்கது. பெயருக்கேற்பப் பல திறப்பட்ட இன்சுவைகளும் நிறைந்திருப்பது, படிப்போர்க்குப் பெரும்பயன் தருவதாம். பெரும் பொருள் செலவிட்டுப் பல சித்திரப்படங்களுடன் எண்பதுக்கு மேற்பட்ட பக்கங்களுடன் பலதுறையிலும் பொது ஜனங்களுக்கு அறிவூட்ட முன்வந்திருக்கும் இப்பத்திரிகை, ஆங்கிலத்தில் வெளிவரும் "மாடர்ன் ரிவியூ" போலத் தமிழ்ப் பேசுவார் ஒவ்வொருவராலும் பெரிதும் போற்றிப் படிக்கத்தக்கது ...."

(11) *Rev. F. Kingsbury*—"...I wish that before long *Panchamritam* will be tasted by the young and the old, in many if not in all Tamil homes..."

(12) கம்பநாடர்—"இதில் பலதுறைப் போக்கான விஷயங்களும், நவநாகரிகச் செய்திகளும், விகடத்துணுக்குகளும் வெளியாகின்றன. இத்தகைய பத்திரிகைகளைத் தமிழுலகம் போற்றாது விடுமெனின், அவ்வுலகம் தனது பெருமையைப் போற்றாது கைவிட்டதெனவே கருதப்படும். தமிழராவார் இதனை ஆதரித்தல் அவசியமாகும்."

(13) *Mr. K. G. Seshier, ex-Judge, Travancore*--"...read it with great interest . . has justified the naturally high expectations of those who know you...attractive, readable and informing, and I hope it will find its away into a large number of Tamil homes."

(14) தமிழ்நாடு—"பல அரிய விஷயங்கள் காணப்படுகின்றன. ... பல படங்களும் காணப்படுகின்றன. ஸ்ரீமான் மாதவையரின் இடைவிடா உழைப்பால் இச்சஞ்சிகை

"மாடர்ன் ரிவியூ" போன்ற ஆங்கில சஞ்சிகைகளுக்குச் சமமாகத் தமிழ்மொழியில் பிரகாசிக்குமென்று நிச்சயமாக நம்புகிறோம்."

(15) *Mr. S. Satyamurti,* B.A;B.L., M.L.C.:—"I like the Journal very much···"

(16) *The Educational Review*:--"···The topics dealt with embrace a variety of subjects···The style of language is simple, flowing and free, not academically turgid, nor descending to the colloquial. We wish our young brother a vigorous and prosperous life."

(17) தாய்நாடு—'பத்திரிகையின் ஒவ்வொருபக்கமும் பல அரிய விஷயங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்றது. . . கல்வி நலன் வாய்க்கப் பெற்ற சீராளர் பலர் விஷயதானஞ் செய்கின்றார்கள்..."

(18) *The Daily Express*--13-5-1924—"···Unlike other Tamil Magazines in this country Mr. Madhaviah seems to be intent upon making his Journal a really well-got up, neatly printed, interesting and readable one. The subjects are varied and cover all points of view and the list of contributors makes one prepossessed.···"

(19) விவேகபானு—தர்பான்—"பெயருக்கேற்ப அழகும் இனிமையும் பொருந்தி விளங்குகிறது....தமிழ்நாட்டில் பிரதிநிதிகள் என்று சொல்லக்கூடிய அறிஞர்கள் இதில் வியாசங்கள் எழுதுகிறார்கள் . . இப்பத்திரிகை உலகத்தில் தோன்றினமை தமிழ்மக்களின் பாக்கியமென்று சொல்லவேண்டும். இவரது முயற்சியை ஆதரிப்பதால், தமிழ் நலனுறுமென்று நாம் உறுதியாகக் கூறுவோம்."

(20) பண்டிதை அசலாம்பிகை யம்மாள்—"புத்துணவாகிய பஞ்சாமிர்த முதற்பதிப்பு வரப்பெற்றுச் சுவைகண்டின்புற்றேன். பழுதி யெய்தாது கிட்டிய இப் பஞ்சாமிர்தத்தினை எவரே விரும்பார்?"

(21) *The Indian Bookman*--:"···The articles are on various subjects—political, social, economic, literary, scientific and religious. In choosing his political writers, Mr. Madhaviah rightly allows readers of opposing parties to expound their views. In this way the magazine gives its readers opportunities to study the different sides of important questions. There are also stories adding interest to what otherwise might have been heavy reading···"

(22) நவசக்தி— “ * * * இனிய எளிய செந்தமிழ் எழுதுவோர் நமது தமிழ் நாட்டில் ஒரு சிலரே யுளர்; அவருள் ஸ்ரீமான் மாதவையர் ஒருவர். அவர் எப்பொருளையும் காய்தல் உவத்தலின்றி ஆராய்ந்து, தாங்காணும் உண்மையை அஞ்சாது வெளியிடுபவர் என்பதை நாம் செவ்வனே அறிவோம். தமிழ்ப் புலமையும் ஆங்கிலப் புலமையும், வேறு பல கலை அநுபவமும் பெற்ற ஒருவரால் நடாத்தப் படும் பத்திரிகையைத் தமிழ்நாடு ஆதரிக்க வேண்டுமென்று நாம் கூற வேண்டுவதில்லை. ... எவர்க்கும் பயன்படும் குறிக்கொண்டு நிற்பது கவனிக்கத் தக்கது....மனத்தைக் கவரத்தக்க கட்டுரைகள் பல மிளிர்கின்றன.”

(23) *The Indian Social Reformer:*—“...full of useful and interesting information, and the magazine will have a career of great usefulness in the Tamil Country. It is a sign of the times that highly educated and cultivated men like Mr. Madhaviah should devote themselves to the diffusion of sound information among the people by magazines of this kind. We wish our new contemporary every success.”

(24) சுதேசமித்திரன்— “ * * * வெகு ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம் . . . என்னென்ன நயங்கள் காணலாமென்று எதிர் பார்த்தோமோ அந்த நயங்கள் எல்லாம் அமைந்திருப்பதுபற்றி நாம் மிகவும் மகிழ்வெய்துகிறோம். * * * எல்லாத் துறைகளையும் தழுவிய பத்திரிகைகள் தமிழில் இது வரை இல்லையென்றே சொல்லலாம். பஞ்சாமிர்தம் தமிழுக்கு எற்பட்டிருக்கும் இக்குறையை நீக்கக் கூடியது என்பது விளங்குகின்றது. தமிழ்ப் பெருமக்கள் துணை நிற்பாரென்று எதிர் பார்க்கிறோம்.”

(25) இந்துசாதனம்--யாழ்ப்பாணம்— “ * * * இதில் இக்காலத்துக்குரிய அரிய வியாசங்களும் நானுச்சங்கதிகளும் அறிவு விருத்திக்கும் தேச முன்னேற்றத்திற்கும் உரிய கதைகளும், தேசத்தொண்டு புரிதலில் ஈடுபட்டு உழைக்கும் பல தலைவர்களால் வரையப்பட்டுள்ளன. இப் பத்திரிகை தமிழுலகத்துக்கு மிகவும் இன்றியமையாததாகும்.”

(26) லோகோபகாரி—சென்னை—“... பெயருக்கேற்ப அழகும் இனிமையும் பொருந்தி விளங்குகிறது ... இப்பத்திரிகை உலகத்தில் தோன்றினமை தமிழ்மக்களின் பாக்கியமென்று சொல்லவேண்டும்.”

(27) நாடார்குல மித்திரன்—"இப்பத்திரிகையின் மேன்மையை விளம்புதல் முடியுமோ! தமிழ் நாட்டு மகா ஜனங்கள் யாவரும் இதை வாசித் தின்புறுமாறு வேண்டுகின்றனம்."

## II. பிந்திய சில அபிப்பிராயங்கள்.

[முதல் ஆண்டின் முடிவில் பத்திராதிபர் வேண்டுகோளுக் கிணங்கிச் சந்தர்நேயர்களிற் சிலர் எழுதி யனுப்பிய அபிப்பிராயங்களில் சில பகுதிகள்]

(1) "I have no faith that more subscribers can be got by reducing the subscription. Comparing with the Magazines in English, an *Annual* subscription of Rs. 5-0-0 is quite a reasonable one. I do not think you can afford to keep on with the expenses of illustrations, get up and printing, side by side reducing the subscription. Generally the Tamil public is stingy in spending money for books and magazines as a source of cultural pleasure.

"As it is, there is nothing I can complain of with the style and matter of the magazine. It caters to all tastes, it has stories, humorous bits, patriotic extracts and so on. The style is easy for easy topics and elevated for high topics. To make it easier still, seems to me practically unsuited for subjects and for the progress of the language."

(2) "To increase the size and lower the rate seems to me to be daring a bit too much. *Panchamritam* is not the kind of magazine that panders to the popular low tastes and it was never intended as such either. To increase knowledge is your idea and you won't print highly sensational trash or detective stories..."

(3) "பத்திரிகையின் விஷயங்கள் பளுவாயிருக்கின்றன என்பது தப்பபிப்பிராயம்; கதைகள் முதலியவற்றை அதிகம் சேர்த்து விஷயங்களைக் குறைத்தெழுதினால், பத்திரிகைக்கு மதிப்பில்லை. தேசபக்தியையும் அறிவையும் வளர்க்கக்கூடிய அரிய பெரிய விஷயங்களைப் பெருக்க வேண்டும்...."

(4) "My opinion is that the journal should contain a higher percentage of light literature than heavy one. As for my part, I scarcely find time even to peruse the journal. I may tell you that practically your journal was not appreciated by my people..."

(5) "...The பொது ஜனங்கள் need not necessarily have all they wish. Their wishes have often to be moulded. The *style* should be made lighter and more colloquial..."

(6) "அதிகக் கதைகள் இல்லாமல் அரிய பெரிய விஷயங்களால் ருசிக்கச்செய்வதுதான் விசேஷம். அந்த விசேஷம் இப்பொழுது தங்கள் பத்திரிகையில் காணப்படுகிறது. அதை யெடுத்து விட்டால், மற்றப் பத்திரிகைகளுக்கும் பஞ்சாமிர்தத்துக்கும் பேதமில்லாமற் போய்விடும். என் நண்பர் பலரும் வியந்து புகழ்கிறார்கள்.... வேண்டுமானால், பத்மாவதி சரித்திரத்தை இன்னும் 4 பக்கம் அதிகமாக்கலாம்..."

(7) "வருஷ நெடுக வந்தும் தீராத "பத்மாவதி" தொடர்கதை என்னத்துக்கு?"

(8) "பத்திரிகை இப்போது நடத்தி வருகிறதே நன்றாயிருக்கிறது; ஆனால் என் சொந்த அபிப்பிராயத்தில், "கிறள்" "விகடப்பா" இவைகள் அவசிய மில்லை."

(9) "பாஷை தற்போதைவிட இலகுவாக்க வேண்டுவது அவசியமின்று; இங்கிலை நிலைப்பது உத்தமம்."

(10) "பத்திரிகையின் நோக்கத்தை அறிந்தவர்கள், இந்த ஐந்து ரூபாய்க்கே அதிக சந்தோஷத்தோடு வாங்கத்தான் செய்வார்கள். வருஷத்தில் ரூபா 5 கொடுத்து, இம் மாதிரியான சஞ்சிகையைப் படிக்கக்கூடிய சுமார் 10,000 பேர்கள்கூட இல்லாதபடி, அவ்வளவு ஏழ்மைத்தனத்தி லில்லை நம் தமிழ் நாடு; ஆனால் சிரத்தை யற்றிருக்கலாம்... அப்படிக் குறைப்பதானால்" * * * "போல் ஒரு ரூபாயாக்கினால், ஒருக்கால் சந்தாதார் தொகை பெருகும். அப்படிப் பெருகவேண்டுமானால், மேலான போதனைகள் கொண்ட இந்த வியாசங்கள் பிடிக்கா. ஆனால், அப்படி மாற்றினால், இது ஒரு சாதாரண சஞ்சிகையாகி, இதன் மதிப்பே போய்விடும்...தயவுசெய்து பத்திரிகையின் லக்ஷியத்தைக் கெடுத்து விடக்கூடா தென்று கேட்டுக்கொள்கிறேன்."

(11) ".... நம்மவர்க்குப் பத்திராகாபிமானம் இல்லாத குறையே இருவர் சந்தாதார் இப்படியெழுத நேரிட்டது. சந்தாத்தொகையைக் குறைத்தால் அதிகப்பேர் சந்தாதாராவர் என்பதில் எனக்கு நம்பிக்கை யில்லை. பத்திரிகையின் விஷயங்கள் பளுவாயிருக்கின்றன என்பது தப்பபிப்பிராயம்....வருஷ சந்தாவைக் குறைப்பதைவிட, பக்கங்கள் நூறுக்குக் குறையாமல் வெளியிட்டு வரலாம்; அல்லது,

சந்தாவைக் கூட்டிப் பக்கங்களை அதிகப்படுத்தலாம்.... கதைகளை அதிகஞ்சேர்த்து விஷயங்களைக் குறைத்து எழுதச் சொல்பவர்கள், கதைப் புஸ்தகங்களை வாங்கி வாசிக்கட்டும்...."

(12)...."தாங்கள் நம் தமிழ்மொழியின் அருமை பெருமைகளை நன்குணர்ந்தவர்களாதலின், அதனை இக்காலத்தி லிருக்கும் அநாதரவிலிருந்து பஞ்சாமிர்தம் மூலமாகக் காப்பாற்றி வருகின்றீர்கள். இத்தகைய பேருதவிக்கு நம் தமிழ் நாடும் மக்களும் என்றென்றும் தங்களுக்குக் கடமைப்பட்டுள்ளார்கள். இப்பொழுது சென்னை ராஜதானியில் உலவிவரும் தமிழ்ப் பத்திரிகைகளில், இப் பஞ்சாமிர்தமே தலைமை வகிக்கும் தன்மையுள்ளதா யிருக்கின்றதென்பது எனது துணிபு. * * *"

(13) "I would not reduce the price.It will not help you in the least and will only increase your deficit. The people who can pay Rs. 4 a year can usually pay Rs. 5."

(14) "You may reduce the annual subscription only if you are sure of increasing the number of subscribers."

(15) "* * நம் நாட்டைப்போன்ற தேசத்திற்கு, அதாவது ஏழைகள் நிரம்பியிருக்கும் நாட்டிற்கு, சித்திரப் படங்களும் மற்றொன்றும் அனுவசியம்.... பசியால் வருந்தும் ஒருவனுக்கு போர்த்துக் கொள்ள கம்பளி கொடுத்தால் எப்படி பிரயோஜன மில்லையோ, அதைப் போல் தானாகும்..."

(16) "...எனது அபிப்பிராய மென்னவென்றால், சந்தாவைக் குறைப்பதினாலாவது, அளவைப் பெரிதாக்குவதினாலாவது பிரயோஜன மில்லை. ஆனால், இன்னும் கொஞ்சம் வேகமுண்டாகத் தக்க உணர்ச்சியில் சில விஷயங்கள், தற்காலக் காங்கிரஸ் திட்டத்தை யொட்டி எழுதப்படல் வேண்டுமென்பதே."

## பத்திராதிபரின் தீர்மானம்

2-ம் வருஷம் (1925-26) முதல் சந்தா விகிதம்.

| | 1 மாதம். | 6 மாதம். | 3 மாதம். | தனிப்பிரதி. |
|---|---|---|---|---|
| உள் நாடு — | 4-8-0 ; | 2-6 -0 ; | 1-4-0 ; | 0-8-0 |
| வெளி நாடு— | 5-0-0 ; | 2-10-0 ; | 1-8-0 ; | 0-9-0 |

தபாற்கூலி—வேறு ; மாதிரிப் பிரதி—0-6-0.

## புஸ்தகங்களின் குறைந்த விலை விவரம்.

| | புஸ்தகத்தின் பெயர் | சாதாரண விலை | | | பஞ்சாமிர்தம் சந்தாதாரர்களுக்குமட்டும் குறைந்த விலை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | அ. | பை | ரூ. | அ. | பை |
| | தமிழ்ப் புஸ்தகங்கள்:-- | | | | | | |
| 1-3 | குசிகர் குட்டிக் கதைகள்-3-பாகங்கள் ஒவ்வொன்றும் 0-10-0. ... | 1 | 14 | 0 | 1 | 0 | 0 |
| 4 | முத்து மீனாக்ஷி-2-ம் பதிப்பு. ... | 0 | 8 | 0 | 0 | 5 | 0 |
| 5 | புதுமாதிரிக் கலியாணப் பாட்டு-2-ம் பதிப்பு. ... ... ... | 0 | 2 | 0 | 0 | 1 | 0 |
| 6 | பத்மாவதி சரித்திரம் 1-2-பாகங்கள் 5-ம் பதிப்பு சித்திரப் படங்களுடன். ... ... ... ... | 2 | 0 | 0 | 1 | 12 | 0 |
| 7 | விஜயமார்த்தாண்டம்-2-ம் பதிப்பு... | 1 | 4 | 0 | 1 | 0 | 0 |
| 8 | உதயலன்-ஷேக்ஸ்பியர் நாடகம். ... | 0 | 12 | 0 | 0 | 8 | 0 |
| 9 | குறள் நானூறு. ... ... ... | 0 | 4 | 0 | 0 | 3 | 0 |
| 10 | பாரிஸ்டர் பஞ்சநதம். ... ... | 0 | 6 | 0 | 0 | 3 | 0 |
| | மொத்தம் 10 புஸ்தகங்களுக்கும். | 7 | 2 | 0 | 5 | 0 | 0 |
| | இங்கிலீஷ் புஸ்தகங்கள்:— | | | | | | |
| 11 | Thillai Govindan—Fisher Unwin's English Edn. Published price 2/6 ... ... ... | 1 | 0 | 0 | 0 | 10 | 0 |
| 12 | The Story of the Ramayana Revised 2nd Edn. ... ... | 1 | 0 | 0 | 0 | 12 | 0 |
| 13 | Lieut. Panju: A Modern Indian. | 1 | 0 | 0 | 0 | 8 | 0 |
| | Kusika's Short Stories—Revised Edition ... ... ... | | | | | | |
| 14 | Part I—15 Stories 12 As. | 0 | 12 | 0 | 0 | 8 | 0 |
| 15 | Part II—12 Stories 8 As. ... | 0 | 8 | 0 | 0 | 6 | 0 |
| 16 | The Ballad of the Penniless Bride ... ... ... | 0 | 4 | 0 | 0 | 2 | 0 |
| 17 | Manimekalai: Tamil Classics for English Readers ... ... | 1 | 0 | 0 | 0 | 14 | 0 |
| 18 | Clarinda: A Historial Novel of S.India. A few dozen copies only | 1 | 8 | 0 | 0 | 14 | 0 |
| | Total for 8 English Books. | 7 | 0 | 0 | 4 | 10 | 0 |
| | மொத்தம் 18 புஸ்தகங்களின்விலை | 14 | 2 | 0 | 9 | 10 | 0 |

இலாபம் – ரூ. 4–8–0. குறிப்பு – தபால் கூலி வேறு.

பஞ்சாமிர்தம் ஆபீஸ்
மயிலாப்பூர் – சென்னை
31–3–1925

அ. மாதவையர்
பத்திராதிபர்

1059

# சிசுமரணம்

## அதன் காரணங்களும் பரிகாரங்களும்

ஸ்ரீமதி டாக்டர் S. முத்துலக்ஷ்மியம்மாள், M. B. & C. M.,
சென்னை.

இந்த நாட்டிலே சிசுக்கள் அகாலமாய் மரிப்பதன் காரணங்களை ஆராய்ந்து பார்த்தால், அவை பலவகைப் பட்டன என்பது துலங்கும்; அக் காரணங்கள்,——ஏழைகளின் வாழ்க்கை நிலைமை, பொது ஜனங்களின் அறியாமை, நம் நாட்டின் ஏழைமை, நமது பழக்க வழக்கங்கள், தொன்றுதொட்டு வரும் அம்பட்ட மருத்துவச்சி, முதலியனவாம்.

### I. ஏழைகளின் வாழ்க்கை நிலைமை.

(1) பட்டணங்களுக்குப் புறம்பேயுள்ள சேரிகளிலும், குக்கிராமங்களிலும் வசிக்கும் ஏழைகள்.

(2) பட்டணங்களில் வசிக்கும் ஏழைகள்.

(1) இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள், பொதுவாய் வெற்று வெளிகளிலும் புலங்களிலும் தம்முடைய வாழ்நாளில் பெரும்பாகத்தைக் கழித்து, மழையும் பனியும் குளிரும் மிகுந்த இராக் காலங்களில் மாத்திரம், தமது சிறிய குடிசைகளுக்குள்ளே அடைபடுகின்றனர். ஓர் இந்தியக் குடிசை எப்படிப்பட்ட தென்பதை நாம் எல்லோரும் அறிவோம். அதற்கு ஒரே ஒரு வாசலிருக்கும்; அதுவும்தான் மிகக் குனிந்தே உட்செல்லும்படி தாழ்ந்திருக்கும்; ஜன்னல் என்பதே கிடையாது. கூரையிலே சந்து பொந்து இடுக்குக்கள் இருந்தால், அவ்வழியாகத்தான் காற்றும் வெளிச்சமும் உட்செல்லும். இப்படிப்பட்ட ஒரு குடிசைக்குள்ளே, சமைத்தல், உறங்குதல், பிரசவங்கள், எல்லாம் நடக்கின்றன. துணிகளைத் துவைத்தல் வெளியே நடக்கும்; குப்பை கூளங்கள், வெளிப்புறத்தில் குவித்திருக்கும். இப்படிப்பட்ட குடிசைகள், ஓர் ஒழுங்கின்றி அங்குமிங்கும் நெருங்கியும் விலகியும் சேர்ந்துசேர்ந்திருப்பதைக் காணலாம். இவற்றில் வசிக்கும் ஜனங்களுக்குச் சுகாதார முறைகள் ஒன்றுமே

தெரியாது: கண்ட கண்ட விடங்களில் கார்ப்புமிழ்ந்து துப்பியும், மல ஜலபாதைகள் கழித்தும் அசங்கியஞ் செய்கிறார்கள். கோடை காலத்தில் இந்த ஆபாசங்கள் அவ்வளவு பாதிக்கிறதில்லை; ஆனால் அசங்கியங்களை உலர்த்திப் போகக்கும்படி வெயிலின் உஷ்ணமும், அல்லது அடித்து வாரிக்கொண்டு போய்விடும்படி மழையும், அதிகமா யில்லாத காலங்களிலே, குப்பைக் குவியல்களில் வாழ்ந்து பெருகும் ஈக்களாலும், குட்டங் குழிகளி லுள்ள நீரில் வாழ்ந்து பெருகும் கொசுக்களாலும் உண்டாகும் சுகக் கேடுகளைச் சொல்லி முடியாது.

இப்படிப்பட்ட அசங்கியங்களின் மத்தியிலே குழந்தைகள் தவழ்ந்தும் நகர்ந்தும் வளையவருகின்றன. கூலி வேலை செய்வோரின் குழந்தைகள், முதல் வருஷ முற்றிலும் தாய்ப்பாலே குடித்து வளருவதால், மற்றக் குழந்தைகளைவிட நல்ல ஸ்திதியி லிருக்கின்றன. தாய்ப்பாலின் சக்தியினால், இக் குழந்தைகள் சில வேளைகளில் உட்கொள்ளும் நோய்க் கிருமிகளும் அசங்கியங்களுங் கூட இந்தச் சிசுக்களை அதிகம் பாதிப்ப தில்லை; அவ்வளவு மகத்துவமானது தாய்ப்பால். தாயில்லாக் குழந்தைகளும், தாய் நோயுற்றுப் பலஹீன முற்றதால் தாய்ப்பால் குடிக்க முடியாத குழந்தைகளுமே, அதிகம் கஷ்டப்படுகின்றன. அப்பொழுதுதான் அறியாமையும் இல்லாமையும் ஒன்று சேர்ந்துகொண்டு, ஏழைகள் குழந்தைகளை நாசமாக்குகின்றன. இரண்டு மூன்று மாதமேயான சிசுக்களுக்கு, நல்ல பசுவின் பால் வாங்கப் பணமின்றி, அரிசி, சவ்வரிசிக் கஞ்சிகளைக் கொடுத்து, ஏழைத் தாய்மார் வளர்ப்பதை நான் பார்த்திருக்கிறேன். அன்றியும், இந்தக் கூலியாளர் குழந்தைகளும், ஓராண்டுக்குப் பின், மற்றக் குழந்தைகளைப் போலவே கஷ்டப்படுகின்றன. தனக்குப் பால் குன்றி வற்றிப்போனவுடன், தன் குழந்தையின் பசியைத் தணிக்கும்படி, ஏழைத்தாய், கண்ட கண்ட தின்பண்டங்களை யெல்லாம் குழந்தையின் வயிற்றில் திணிக்கிறாள். பெரியோருக்குதவுவது குழந்தைகளுக்கும் நல்லதே என்று அவள் மூடத்தனமாய் நினைப்பதால், மட்டு மிதமின்றி, அவள் தன் குழந்தைக்கு ஆகாரங் கொடுக்கிறாள். இப்படிப்பட்ட குழந்தைகள் அநேகர், ஓராண்டுக்குப் பின், கால் கைகள் சூம்பி, வயிறு புடைத்துப் பருத்து, மூக்குச் சளியும் வயிற்றுப் போக்கும் ஓய்வொழிவின்றிப் பாதிக்க, நாக்குப் பூச்சி, தொறட்டிப் பூச்சி முதலிய கிருமிகளால்

வருந்துகின்றனர். இக் குழந்தைகளில் பலர் மண்ணைத் தின்பதனாலும், மண்ணை யளைந்த கைகளைக் கழுவாமல் சாப்பிடுவதனாலும், அடிக்கடி குளிப்பாட்டி ஆடை மாற்றிச் சுத்தஞ் செய்யப்படாமையினாலும், சொறி சிரங்கு, படர்தாமரை, கரப்பான் முதலிய சரும வியாதிகளால் பீடிக்கப்படுகின்றனர்; இந்த வியாதிகள் அவர்களுடைய ஜீரண சக்தியையும் கெடுத்துக் குறைத்துவிடுகின்றன. ஏற்ற ஆகாரமும் சுகாதாரமான வாழ்க்கை வசதிகளும் இல்லாமையால் இக் குழந்தைகள் வருந்துவதுமன்றி, குக்கிருமல், சின்னம்மை, க்ஷயம், இன்ப்ளுயென்ஸா முதலிய தொற்றுவியாதிகள் அவர்களுக்குள் எளிதில் பரவுதலாலும் கஷ்டப்படுகின்றனர். இவர்களுக்கு வைத்தியரோ, அக்கம் பக்கம் வீடுகளிலுள்ள கிழவிகளும், "கைகண்ட மாத்திரை வைகுண்ட யாத்திரை" என்று சொல்லும்படியான மருந்துகளைக் கையாளும மூடப் பண்டிதர்களுமே. வைத்திய முறைகளில் கற்றுத் தேர்ந்த வைத்தியர்களை இவர்கள் கூப்பிடுவது மில்லை, அடுத்துள்ள ஆசுபத்திரிக்குச் செல்வது மில்லை; ஒரு வேளை அப்படிச் செய்வதாயிருந்தாலும், மற்ற மருந்துகளெல்லாம் கொடுத்துப் பார்த்துப் பலிக்காமல், நோய் முதிர்ந்த பின்பே செய்வர்.

இவர்களில் அநேகர், தாங்கள் ஆபத்தான நோயுற்ற போது, உடனே தக்க வைத்தியரை யழைத்து வேண்டிய சிகிச்சைகளைச்செய்யாமல், தேவபாதையினாலும் தெய்வங்களின் கோபத்தாலும் அந் நோய்கள் நேர்ந்தன வென்று மூடத்தனமாய் நம்பி, தேவாராதனைகள், கழிப்புக்கள், பலிகள் முதலியவற்றிலே காலத்தையும் அரிதில் தேடிய பணத்தையும் செலவழித்துப் பாழாக்குகின்றனர். இந்த விஷயங்களை யெல்லாம் யோசித்துப் பார்த்தால், இவர்களுக்குள் சிசு மரணம் ஏன் இப்பொழுதினும் அதிக மில்லை, சில குழந்தைகளேனும் எவ்வாறு திடகாத்திர சுக சரீரிகளாய் வாழ்கிறார்கள் என்றே ஆச்சரியப்பட வேண்டியதா யிருக்கின்றது.

(தொடரும்)

# பத்திராதிபர் குறிப்புக்கள்

(976-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

64. அரசியல் சீர்திருத்தக் கமிற்றியார் அறிக்கைப் பத்திரம்-ஏழைக் குடிகளின் பணத்தில் ரூபா 46,000 செலவாகி, இந்த ரிப்போற்டு வெளிவந்திருக்கிறது. இப்பொழுதுநடக்கும் இருகிளையாட்சியில் இந்தக் கமிற்றியார் சிபார்சுசெய்யும் முக்கிய சீர்திருத்தங்களாவன:—(1) காட்டிலாகாவை மந்திரிகளுக்குள்ளாக்குதல் (2) ஸ்திரீகளுக்கு வோட்டும் சட்ட சபை யங்கத்தினராகும் உரிமையுங் கொடுத்தல் (3) தொழிலாளிகள், தீண்டாச்சாதியர், இவர்களின் பிரதிநிதிகளை அதிகப்படுத்துதல் (4) ஆறுமாதம் வரை மட்டுமின்றி ஓராண்டு வரை சிறையிலிருந்தோருக்கும், சட்ட சபைகளில் மெம்பர்களாகும் உரிமை கொடுத்தல் (5) சட்ட சபை நிர்வாக சபைமெம்பர்களுக்குச் சில சுதந்திரங்கள் கொடுத்தல். இந்தத் திருத்தங்களால், இருகிளையாட்சியாம் நாய் வாலின் கோணல் சிறிதும் நிமிரா தென்பதும்; இந்தியர்க்கு எவ்விதத் திருப்தியு முண்டாகா தென்பதும் நிச்சயம். இந்தக் கமிற்றியும், செலவும் வீணே.

65. ஒரு புதிய சுமை—ஒரு சாதியார்க்குள், "வெட்டவெட்டச் சுமப்பையா?" "சுமக்கச் சுமக்க வெட்டுவையா?" என்று, மணமகனும் மணமகளும், ஒருவரை ஒருவர், விவாக காலத்தில் கேட்பதுண் டென்று கூறுவர். அஃதெவ்வாறாயினும், பிரிட்டிஷாரும் இந்தியரும், "வரியேற்ற யேற்ற இறுப்பையா?" "இறுக்க இறுக்க ஏற்றுவையா?" என்று கேட்டுக் கொள்ளுதல் பொருந்தும். இப்பொழுது ஏற்பட்டு நடைபெறும் அரசியல் திருத்தங்களால் நற்பயனொன்று மில்லை யென்று இந்தியர் முறையிடுவதும், அவை காரணமாக, பல வழிகளில் வெள்ளை உத்தியோகஸ்தர்களுக்கு அதிகப் பணத்தை லக்ஷக்கணக்காக வாரியளிப்பதும் ஒருபுறமிருக்க; இனிமேல் இந்தியாவில் வந்து சேவி

க்க வெள்ளைவாலிபர்கள் கூசிப் பின்னிடுவரென்றும், அவர்களுக்கு இதோபதேசஞ் செய்து, அவர்கள் மனத்தைத் தேற்றி, அவர்களை இந்தியாசெல்லும்படி சம்மதிக்கச்செய்ய வேண்டுமென்றும் கருதி, இந்தியாவில் இதுவரை சேவித்துப் பென்ஷன் பெற்றுவரும் மெஸ்டன் பிரபு, இங்கிலாந்திலேயுள்ள சர்வகலாசாலைகள் கல்லூரிகளுக்குச் சென்று, வாலிபர்களுக்குப் பிரசங்கஞ் செய்தனராம். இதனால் ஏற்பட்ட செலவையும் இந்திய வரிப்பணத்திலிருந்தே கொடுக்க வேண்டுமாம்! குதிரை தூக்கிப் போட்டுவிட்டுக் குழியையும் பறிக்கின்றதே!

66. கர்ஸன் பிரபுவின் மரணம்—நமது ராஜப் பிரதிநிதியாயிருந்து படாத பாடெல்லாம் படுத்திய இவர், தன் 66 வது வயதிலே, 19-3-1925 அன்று காலஞ் சென்றார். இவருடைய இறுமாப்பையும் வல்லாண்மையையும் தாங்க மாட்டாது ஆங்கிலேயர்களே தவித்தன ரென்றால், இந்தியர்களை இவர் ஆட்டிவைத்தது வியப்பாகாது. கல்கத்தா சர்வகலாசங்கத்தின் அத்தியக்ஷராக இவர்பிரசங்கஞ்செய்த காலத்திலே, இந்தியர் அனைவரும் பொய் பேசுபவர்கள் என்று, வாய் கூசாமல் நிந்தித்தார். அதற்குப் பதிலாக, இவரெழுதிய ஒருபுஸ்தகத்திலே, தன் வயதை மாற்றியும் வேறுவிதங்களிலும் இவர் கொரியாவிலே கூறின அபாண்டமான பொய்களை இவரே ஒப்புக்கொண்டிருக்கும் விருத்தாந்தத்தை, அமிர்த பஜார் பத்திரிகை எடுத்துக் காட்டிற்று. வங்காளத்தை இருபிரிவாக்கி வதைத்து, இராஜதானியை டில்லிக்குக் கொண்டு போனவர், இவரே. "கடவுள் அநுக்கிரகத்தினால் தீங்கிலிருந்தும் நன்மையே விளையும்" என்று, ஓர் ஆங்கில கவிஞர் கூறியுள்ளபடி, அந்தப் பெருந்தீங்கே இந்தியர்க்குப் புத்துயிரளித்த, தூங்கின சிங்கத்தை எழுப்பிவிட்டு, இந்தியரின் சுயராஜ்யக் கிளர்ச்சிக்கு அடிப்படையாயிற்று. அதனால், இந்தியாவுக்குப் பேருதவிசெய்த மகான்களில் ஒருவராக, இவரையும் எண்ணலாம். ஈடெடுப்பில்லாத இவருடைய செருக்கினால் இவ்வுலகத்தினர் பலர் இதுகாறும் சிறுமைப் பட்டதுபோல, அவ் வுலகத்தினர் பலரும் இனிச் சிறுமை எய்துவர் போலும்.

கர்ஸன் பிரபு இந்தியாவுக்குச் செய்த ஒருதவி மறக்கற்பாலதன்று: இந்நாட்டிலே புராதனமானவும், சரித்திர சம்பந்தத்தினாலோ சிற்பச்சிறப்பினாலோ மேம்பட்டனவுமான இடங்கள், கட்டடங்கள், பொருள்கள், முதலிய

வற்றையெல்லாம் சேமித்துப் பேணிவரும் ஏற்பாட்டை அவரே ஸ்தாபித்தார்.

67. **மகாத்மா காந்தி**—வைக்கத்திலே ஓராண்டாக நடந்து வரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஒருவாறு சமரசப் படுத்துதற்கென்றே புறப்பட்டு வந்து, கேரளத்திலும் தமிழ்நாட்டிலும் பலவிடங்கள் சென்று, பிரசங்கங்கள் செய்து, மீண்டனர். வந்த முக்கிய காரியம் முடிவு பெறவில்லை. திருவாங்கூர் மகாராணியாரும் திவானும் அளவுசங்கையின்றித் தம் அநுதாபத்தை வெளியிட்டனரேயன்றி, அநியாயத்தை நீக்கும் முறையில், தம் அதிகாரத்தைச் செலுத்தவில்லை. வைக்கத்துப்போராட்டம் ஓர் அடையாளமேயாம்: அவ்வித அநியாயம் தக்ஷிணமெங்குமே தினந்தோறும் மிகப்பல விடங்களில் நடைபெறுகின்றது. அரசர் பிரபுக்கள் செல்வர் அனைவர்களும், ஏழைகளைப் போலவே, தாமே தம் கையினால் நூல் நூற்க வேண்டுமென்று மகாத்மாகாந்தி கூறுவதன் அடிப்படை நியாயம், அவ்வாறு செய்தால்தான் செல்வர்களுக்கும் ஏழைகளுக்கும் அந்நியோந்நியமும் பரஸ்பர மன வொற்றுமையும் அநுதாபமும் ஏற்படும்” “தீண்டாமை” போன்ற அநியாயங்கள் நீங்கும், என்பதேயாம்; ஆயின், தன்கையால் நூல் நூற்க இசைந்து அவ்வாறே நூற்கும் கொச்சி (மாஜி) அரசர், “தீண்டாமை” நியாயமான வழக்கந்தான், ஹிந்து மதம் ஒப்பியதுதான் என்றும் கூறுகின்றனராம். அங்ஙனமாயின், அவரும், அவர் போன்ற செல்வர் பலரும், தத்தமக்குரிய வேறு முக்கிய வேலைகளைக் கைவிட்டு, சிறிது நேரம் வைக்கோற் புரி போன்ற நூலைமட்டும் நூற்பதினால் என்ன பலன்? இன்னார்கள் நூல் நூற்பதில் கைதேர்ந்து, அத்தொழிலை விருத்தி செய்து, விதேசித் துணிகளை வெருட்டிவிடுவரென்று, எவருமே எதிர்பார்க்கவில்லை. இந்த விஷயம், இன்னார் நூற்க முயலும் நூலையே போல், மிகவும் சிக்கலான, கரடு முரடானதொன்றாம்.

68. **காந்தியும் கன்னியா குமரிக்கோயிலும்.**—மகாத்மா காந்தி, கடலைத்தாண்டிப் பிறநாடுகள் சென்று வந்தவராகையினால், இந்தக் கோயிலார் அவரைக்கோயிலுக்குள் விடமாட்டோமென்று மறுத்து விட்டனர். இக்காலத்துச் சுதேச மன்னர் பலர், அடிக்கடி சீமை சென்று மீள்கின்றனர்; திருவாங்கூர் அரசரும் அவ்வாறு செய்யின், அவருக்குமே இக்கதிதான்போலும்! உலக குருவென்றும் தவசிரேஷ்டரென்றும், அவதார புருஷரென்றும், இந்தி

யாவில் மாத்திரமன்று, பிறநாடுகளிலும், பலர் மதித்துப் போற்றிப் பரவும் காந்தியே அக்கோயிலுட் செல்ல அருகரல்லரெனின், எவரே பின் அருகராவர்? இந்தியா வொழிந்த பிற சீமைகளிலே கடவுளே யில்லை என்பது இன்னார் மதமா? அல்லது, 'கடலோரத்திலே அலை நீர் நனைக்கக் கோயில் கொண்டுள்ள குமரியம்மன், கடலைத் தாண்ட மாட்டாது விழிக்கின்றனள்; ஆதலால், அதைத் தாண்டி மீண்டவரைக் கண்டால், அவளுக்கும் பொருமையுண்டாகும்' என்பது இன்னார் சித்தாந்தமா? தெரியவில்லை. காரணம் எதுவாயினும், 'கேரளம் பைத்தியக்காரர் நாடு' என்று விவேகாநந்தர் கூறியதே, இச்செய்தியைக்கேட்டவர்க்கு முதலில் நினைப்புக்கு வரும்.

69. மது விலக்கும் சென்னைச் சட்டசபையும்.—'கலாவிலாகா மந்திரியின் முறைகள் தவறு, அவரிடத்தில் நம்பிக்கையில்லை' என்று செய்த பிரேரணை, சட்ட சபையில் தோற்று விட்டது. பம்பாய் கவர்ன்மெண்டார் மதுவிலக்கைத் தம் குறியாக ஒப்புக்கொண்டு, அதைநோக்கி முயன்று வருகின்றனர்; சென்னை மாகாணத்திலே, இது கைகூடவில்லை. இம்மட்டோ, 'இப்பொழுதிருக்கும் குடி மிதமிஞ்சியதன்று; இதை நிறுத்த, ஒன்றுஞ் செய்ய முடியாது, செய்ய வேண்டுவது மில்லை' என்ற அபிப்பிராயத்தைச் சிலர் கொண்டிருக்கின்றனர். இதைக் குருட்டுமதி என்பதா? இருட்டுமதி யென்பதா? மதுவிலக்கைப்பற்றி மகாத்மா காந்தி செய்த பிரசங்கத்தைக் கேட்டவர் எவரும், இவ்விஷயத்தை அற்பமாக எண்ணி, கவலைப்படாதிரா ரென்பது திண்ணம். சென்னையின் கதி இவ்வாறாக, பின் வருவதை வாசிக்க மகிழ்வுண்டாகும்:—

“ கல்கத்தா முனிசிபல் எல்லைக்குள்ளாக இருக்கும் கள்ளுக் கடைகளையும் சாராயக்கடைகளையும், அபினி, கஞ்சா, மாஜினம் போன்ற லாகிரிவஸ்துக் கடைகளையும் முனிசிபல் எல்லைக்கு வெளிப்புறத்தில் கொண்டு போய் விடவேண்டுமென்றும், மரியாதையும் மதிப்பும் அங்கீகாரமுங்கொண்ட மருந்து வியாபாரிகளுக்கு மாத்திரம் ஏதோ குறிப்பிட்ட அளவு மது வைத்துக்கொள்ள லைசென்சு கொடுக்கலாமென்றும் கல்கத்தா கார்ப்பொரேஷனார் கடந்த 25-தேதி கூடிய மீட்டிங்கில் தீர்மானமொன்று கொண்டுவர, அது எவராலும் ஆக்ஷேபிக்கப்படாது நிறைவேறியது.”

70. இந்தப் பத்திரிகை.—இஃதுடன் முதல் ஆண்டு முடிகின்றது : முயற்சியோ, மிகப்பெரிது ; அதை இனிது நிறைவேற்றுதற்கு எனக்குள்ள அறிவும் ஆற்றலும் கைம்முதலுமோ, மிகச்சிறியன; நல்ல காரியத்துக்கு எல்லோரும் கைகொடுத்துதவுவர் என நம்பியே, இதில் உழைக்கப்புகுந்தேன்; அவ்வண்ணமே, பேரறிவாளர் பலர், என்பாலும் என் முயற்சியின்பாலும் அபிமானமுள்ளவர், எவ்விதக் கைம்மாறும் கருதாது, உள்ள முகந்து பலவாற்றிலும் எனக்கு உதவி செய்திருக்கின்றனர். 'நன்றியறிவு என்பது செய்த உதவியை மாத்திரமன்றி, வருங்காலத்திற் செய்வாரும் உபகாரத்தையும் முன்னினைந்து மகிழும் மனத்தில் எழும் உணர்ச்சி' என்பர். எனக்குதவிவரும் அனைவர்க்கும், அவ்வாறே மனமகிழ்ந்து, நான் என் வந்தனங்களைச் செலுத்துகிறேன்... அடுத்த ஆண்டு முதல், பத்திரிகையின் சந்தாவையும் புஸ்தகங்களின் விலைகளையும் குறைப்பதனால், தாங்க முடியாத நஷ்டம் எனக்கு நேர்ந்து விடாமலும்; மூன்றாவதாண்டு முதலேனும், ஏழைகளும் வாங்கிப்படிக்கும்படி, சந்தாவை இன்னும் தாழக்குறைக்க இயலுமாறும்; பத்திரிகைக் கெழுதும் பேரறிவாளர்க்கு ஏதோ சிறிதேனும் மரியாதை செய்ய இயலுமாறும்; தன்னலங்கருதிச் சர்க்கார் வேலையிலிருந்த ஆண்டுகளெல்லாம், என் கீழ்ப் பல சிப்பந்திகள் சேவிக்க, (முக்கிய விஷயங்களில் தவிர) பிறர் எழுதி யுதவியதற்குக் கையொப்ப மட்டுஞ் செய்து வந்தவன், பொது நலங்கருதி இப்பத்திரிகையை நடத்தி வரும் நிமித்தத்தினால், தானே குமாஸ்தா வேலையும் மஸால்ஜி வேலையும் இப்பொழுது போல் செய்ய வேண்டாது, அத்தியாவசியமான சிறுசிப்பந்தியை நியமித்துக்கொண்டு, என் முழுக்கவனத்தையும் பத்திரிகாசிரியத் தொழிலிலே செலுத்தும்படி செழிக்குமாறும், தமது நண்பர்களிடம் சந்தாநேயர்கள் வேண்டிப்பேசி, பல புதுச் சந்தாதார்களையும் விளம்பரங்களையும் சம்பாதித்துத் தரும்படி, பிரார்த்திக்கிறேன். இதுவரை ஐவர் முன்பணம் அனுப்பியுள்ளார்; பன்னிருவருக்கு, அவர் வேண்டியபடி, இந்தக்காசே வி. பி. போஸ்டில் செல்கின்றது; மற்றச்சந்தாதார் எல்லோரும், இது கைக்கெட்டியவுடனே, அடுத்த ஆண்டுச் சந்தாவை மணியார்டரில் அனுப்புவதே முதல் உதவியாகும்; அப்பால், தத்தம் சௌகரியப்படி வேறுதவி செய்ய வேண்டுகிறேன்.

அ. மாதவையர்.